# சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை

ஜூலை.30 - ஆகஸ்ட்.06, 2013 பக்கம் - 24 30/-






## பூட்டப்படும் தலங்கள்!



## சந்தனம் மீஞ்சினால்....



# எங்கு சென்றாலும் சாவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் பௌத்த மதவெறி மீண்டும் ஒரு சாதனையை நிலை நாட்டியுள்ளது.

மஹியங்கனை மல்ஜிதுல அரபா பள்ளிவாசலில் இரவு 11.00 மணிக்கு புனித ரம்ழான் நோன்பு தொழுகை இடம்பெற்ற போது உள்ளே புகுந்த ஒரு காடையர்கூட்டம் ஜன்னல்களை உடைத்து சேதப்படுத்தியது. தொழுகையில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல்களை நடத்தியமையுடன் பள்ளிவாசல் நிர்வாகத் தலைவர் மீதும் செயலாளர் மீதும் மிளகாய்ப் பொடிகளை அள்ளி வீசினர். பள்ளிவாசலுக்குள் பன்றி இறைச்சியையும், பன்றித் தலையையும்

பெற்ற சம்பவங்கள் தான்.

மாநகரசபையின் அனுமதியுடன் கட்டப்பட்ட பள்ளிவாசலைத் திறக்கவிடாமல் தடுத்து நிறுத்தப்பட்டதும் கொழும்பில் நடந்த சம்பவம் தான்.

இப்படியாக முஸ்லிம் மக்களின் புனிதமான மத உணர்வுகள் அவமதிக்கப்படும் போதும், முஸ்லிம் வழிபாட்டுத் தலங்கள் தாக்கப்படும் போதும், முஸ்லிம் தலைவர்கள் இன நல்லிணக்கம் கோரி முஸ்லிம்களின் நியாயபூர்வமான கோபாவேசத்தை மழுங்கடித்தனர்.



# பூட்டப்படும் தலங்கள்!

■ அக்கினிகுமாரன்

வீசி அசிங்கப்படுத்தினர். பன்றி இறைச்சி முஸ்லிம்களால் விலக்கப்பட்டதாக இருந்த போதிலும், அதைத் தொழுகை நேரத்தில் வழிபடும் இடத்தில் போட்டுப்படு கேவலமான முறையில் மத நிந்தனையை மேற்கொண்டனர்.

அடுத்த நாள் தனது பரிவாரங்களுடன் அங்கு விஜயம் செய்த ஊவா மாகாணசபை உறுப்பினர் அலுவிகார கமகே எதிர்வரும் 2ம் திகதி மஹியங்கனையில்பொதுபலசேனாவின் கூட்டம் இடம்பெறவுள்ளதால் பள்ளிவாசலை மூடும் படி மிரட்டியுள்ளார். இப்போது பள்ளிவாசல் மூடப்பட்டு விட்டது.

புனித நோன்பும் தொழுகையில் ஈடுபட முடியாமல் முஸ்லிம் மக்கள் தவிக்கிறார்கள். பள்ளிவாசலை மூட வைத்த பெருமையில் மதவெறியர்கள் கெடுகட்டம் விட்டுச் சிரிக்கின்றனர்.

பள்ளிவாசல் நிர்வாக சபையின் தலைவர் சீனிமுகமது எதிர்காலத்தில் பள்ளிவாசலுக்கு எந்தவித இடையூறும் ஏற்படுத்தப்பட மாட்டாது என ஜனாதிபதி நேரடியாக உத்தரவாதம் தந்தால் மட்டுமே மீண்டும் பள்ளிவாசல் திறக்கப்படும் எனத்திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டார்.

கௌரவமானதும் பாராட்டப்பட வேண்டியதுமான ஒரு முடிவு! பள்ளிவாசல்கள் தாக்கப்படுவதும், முஸ்லிம் மக்கள் அவமதிக்கப்பட்டு அவர்களின் மதக்கடமைகளைச் செய்ய விடாமல் தடுக்கப்படுவதும்இது தான்முதல்த்தடவையல்ல. பள்ளியில்தொழுகைகள்தடுக்கப்பட்டு அவை பௌத்த மத வெறியர்களால் மட்டுப்படுத்தப்படுவதும் இது வரை நடக்காததல்ல. புனித குர்ஆன் தூக்கி வீதியில் வீசப்பட்டதும், தொழுகையில் ஈடுபட்டிருந்த மூஸ்லிம்களை விரட்டி விட்டு அதற்குள் போய் பிக்குகள் பிரித் ஓதியதும் ஏற்கனவே இடம்

ஜனாதிபதியும் பாதுகாப்புச் செயலாளரும் நடவடிக்கை எடுப்பார்கள் என வாக்குறுதியளித்தார்கள்.

கண்டண அறிக்கைகளுடன் அவர்கள் காரியம் முடிந்துவிடும். சம்பவம் 'ஆறிய கஞ்சி பழங்கஞ்சி' ஆகி விடும்.

இது வரைபதினேழு பள்ளிவாசல்கள் பகிரங்கமாகத் தாக்கப்பட்டன. சில தகர்க்கப்பட்டு முற்றாக அழிக்கப்பட்டன. ஒரு வழிபாட்டுத்தலம் மீது தாக்குதல் நடத்துவது அரசியலமைப்பால் மதங்களுக்கு வழங்கப்பட்ட உரிமையை மீறும் சட்ட விரோத நடவடிக்கையாகும்.

ஆனால், இதுவரை யாரும் கைது செய்யப்படவுமில்லை தண்டிக்கப்படவுமில்லை.

இத்தனைக்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம் இந்நாட்டின் நீதியமைச்சர் தனக்கு வாக்களிக்கும் தன் இன மக்களுக்கே நீதி வழங்க அவரால் முடியவில்லை. அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரிசாட் பதியுதீன் வர்த்தக அமைச்சர். அவர் இவை பற்றிப் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை. ஆனால் தமிழ் மக்களின் காணிகளில் முஸ்லிம்களைக் குடியேற்றி தமிழ்மக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் முரண்பாடுகளையும், மோதல்களையும் ஏற்படுத்த மட்டும் அவருக்குப் போதிய நேரம் இருக்கும். ஆனால், பௌத்த மதவெறியர்களின் அநியாயங்களை இன நல்லிணக்கத்தின் பேரில் ஏற்றுக் கொள்வார். பிரதியமைச்சர் அத்தாவுல்லாவும் அப்படியொன்றும் இவர்களுக்குச் சளைத்தவர் அல்ல!

பௌத்த மத வெறியர்களின் அக்கிரமங்கள் தொடர்வது போலவே முஸ்லிம் தலைவர்களின் அமைதியும் தொடர்கிறது.

இப்போ முஸ்லிம்களுக்காக வாய் திறக்க வேண்டிய இக்கட்டான நிலை.

முஸ்ஸிம்களுக்கு எதிரான பௌத்த மத வெறியர்களின் நடவடிக்கைகள் இடம்பெறாது என ஜனாதிபதி வாக்குறுதி வழங்கும் வரை பள்ளிவாசலைத் திறக்கப்போவதில்லை என பள்ளிவாசல் தர்மகர்த்தா சீனிமுகமது திட்டவட்டமாக் தெரிவித்துவிட்டார்.

ஜனாதிபதியிடம் வாக்குறுதி பெற்றுக்கொடுத்தே ஆக வேண்டும். இந்த முஸ்ஸிம் தலைவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்?

இந்தக்கேள்வி மஹியங்கனை முஸ்ஸிம்களுக்கு மட்டும் உரிய தொன்றல்ல? இது நாடு முழுவதும் பரந்துள்ள முஸ்லிம்களின் கேள்வி.

எனவே - முஸ்ஸிம் தலைவர்கள் இது தொடர்பாக ஜனாதிபதியுடன் பேச கூடும்! ஆனால், அவர் வாக்குறுதி வழங்குவாரா? அல்லது மாகாண சபைக்கு பொலிஸ் அதிகாரம் கொடுத்தால் எப்படியிருக்கும் என உங்களுக்கு விளங்கவில்லையா? எனக் கேட்டு அனுப்பிவிடுவார்.

பள்ளிவாசல் தாக்குதலுக்கும் மாகாணசபையின் பொலிஸ் அதிகாரத்திற்கும் என்ன சம்பந்தம் உண்டு எனக் கேள்வி எழலாம். ஜனாதிபதியின் அகராதியில் சம்பந்தம் உண்டு.

வடமேல்மாகாண சபை உறுப்பினர் ஆனந்த சரத்குமார ஒரு ஆசிரியையை முழங்காலில் நிறுத்தி தண்டணை வழங்கியது தொடர்பாக ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பிய போது மாகாண சபைக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கினால் இன்னும் என்னவோவெல்லாம் நடந்துவிடும் எனப்பதிலளித்தவர் அல்லவா? இப்போது ஊவா மாகாணசபை உறுப்பினர் அலுவிகார கமகே பள்ளிவாசலை மூடும்படி கட்டளையிட்டுள்ளார். எனவே மாகாண சபைக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கினால் மகாணத்திலுள்ள பள்ளிவாசல்கள் எல்லாவற்றையும் மூடி விடுவார் என்பதால் தான் மகாணசபைக்கு பொலிஸ் அதிகாரம் கொடுக்கப்போவதில்லை எனக்கூறி அவர்களை அனுப்பிவிடலாம்.

இது இப்படியிருக்க ஜாதிக ஹெல உறுமயவின் வரலாற்று ஆய்வாளர் எல்லாவெல மெந்தானந்த தேரர் இரவோடிரவாக ஒரு சந்திரவட்டக்கல்லையோ அல்லது ஒரு புத்தர் சிலையையோ புதைத்துவிட்டு, அங்கு தேவநம்பியதீசன் காலத்தில் ஒரு புத்த கோவில் இருந்ததாகவும், அதை இடித்தே அரேபியர்கள் மசூதி கட்டியதாகவும் ஒரு பிரச்சினையை எழுப்பலாம்.

சிலாபம்முன்னீஸ்வரத்தில்இராஜகோபுரம் கட்ட அத்திவாரம் வெட்டியபோது ஒரு சந்திரவட்டக்கல் காணப்பட்டதால் அது ஒரு பழைய புத்த கோவில் எனக்கூறி கட்டிட வேலைகளை தடுத்து நிறுத்தியவர் எல்லாவெல்ல மெத்தானந்த தேரர் என்பதை நாம் மறந்துவிட முடியாது.

பள்ளிவாசலுக்கு மஹியங்கனையில் பூட்டு என்றால் அம்மன் ஆலயத்திற்கு மொறட்டுவையில் பூட்டு.

மடப்பள்ளியையும் களஞ்சிய அறையையும் நகரசபையினர் உடைக்கும் முயற்சியில் இறங்கி விட்டனர். மடப்பள்ளி இல்லாமல் அம்மனுக்கு நைவேத்தியம் படைப்பது எப்படி? பூசகர் பிரச்சினை தீர்க்கும் வரை பூசையை நிறுத்துவது எனக்கூறி கோவிலைப்பூட்டி விட்டார்.

ஜனாதிபதியின் இந்துமத ஆலோசகர், இந்துமாமன்றம், சர்வதேச குருமார் ஒன்றியம் எனப் பல அமைப்புக்கள் உண்டு. அவர்கள் வாய்திறக்கமாட்டார்கள். புத்தகாயாவில் குண்டு வெடித்தால் மட்டும் அறிக்கை விடுவார்கள்.

இப்போ ஒரு பள்ளிவாசலும், ஒரு இந்துக் கோவிலும் பூட்டப்பட்டு விட்டன.

தீர்வு கிடைத்தால் தான் திறப்புக்கள் கதவில் ஏறும். இதுவரை முஸ்லிம்களை ஏமாற்றிய முஸ்லிம் அரசியல் வாதிகளும் இந்துக்களை ஏமாற்றி வந்த இந்து அமைப்புக்களும் என்ன செய்யப்போகிறார்கள் என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலர் மட்டும்...

இளையோருக்கான புதிய பகுதி!

## இப்படி ஒரு காதலி

### – கோடியில் ஒருத்தி –



1) உங்களைச் சந்திக்க நீண்ட தூரம் பயணம் செய்து கால் வலிக்க அவள் காத்திருப்பாள்.

2)அவள் மீது தவறே இல்லா விட்டாலும் சின்னச் சின்னச் சச்சரவுகளின் போதும் உங்களு டன் சமாதானமாவதற்காக அடிக்கடி மன்னிப்புக் கேட்பாள்.

3) உங்கள் வார்த்தை தரும் வலியில் கண்ணீர் வடித்தாலும் அடுத்தகணமே புன்னகையில் அதை மறைத்திடுவாள் .

4) நீங்கள் எத்தனை முறை காயப் படுத்தி இருந்தாலும் அதை பொருட்படுத்தாமல் உங்கள் மீது கொண்ட நேசம் மட்டும் குறையாமல் பார்த்துக் கொள்வாள்.

5) இருவரும் விவாதிக்கும் விடயத்தில் அவள் சொல்லும் கருத்து சரியாக இருக்கும் போதிலும் விவாதத்தை தொடரா மல் முடிக்கவே முயற்சி செய் வாள். உங்கள் உறவு முறிந்து போகாமல் இருக்க.

6)சிறு சிறு குறும்புகள் செய்தே னும் உங்களை சிரிக்க வைக்க முயற்சிப்பாள்.நீங்கள் அவளுக்கு எவ்வளவு முக்கியமானவர் என்பதை அடிக்கடி உறுதி செய்வாள்.

7) நீங்கள் சந்தோசமாக இருக்கும் தருணத்தில் அவள் கவலையாக இருந்தால் , அதைப் பகிர்வதன் மூலம் உங்கள் சந்தோசம் கெட்டு விடக் கூடாதென்று கவலைகளைக் கண்ணில் மறைப்பாள்.

8) உங்களின் ஒரு சில முரட்டுக் குணங்கள் அவளைப் பாதித்தாலும் உங்களை விட்டு விலகும் எண்ணம் இல்லாதவளாய் இருப்பாள்.


9) உங்கள் குடும்பத்திலும் நண்பர் வட்டத்திலும் நீங்கள் மதிப்போரையும் நேசிப்போரையும் அவளும் நேசிப்பாள்.

10) நீங்கள் தொலைபேசியில் அழைக்காவிட்டாலும் அவள் அழைப்புக்கு பதிலளிக்கா விட்டாலும் . அதற்கு நீங்கள் தரும் விளக்கத்தையும் உங்கள் சூழ்நிலையையும் புரிந்து கொள்வாள்.

(ஆனால் என்ன ஒரு சோகம் என்றால், இப்படிப்பட்ட காதலி கோடியில் ஒருத்தியாகத்தான் இருக்கமுடியும் என்று ஆண்கள் பலரும் புலம்புகிறார்கள்)

– ஆதிரா

## கண்ணும் காதலனும்



கண் தெரியாத ஒரு பெண்ணை இளைஞன் ஒருவன் மனதாரக் காதலித் தான். அவளுக்காக அவன் எதையும் செய்வதற்குத்தயாரக இருந்தான். என்றா லும் அவளுக்குச் சந்தேகம். கண் தெரியாத தன்னை அவன் ஏமாற்றி விடுவானோ என்று பயந்தாள். அந்தப் பயத்தில் அவள் "என்னைக் கைவிட்டு விடமாட்டாய் தானே?" என்று கேட்டாள்.

"அவன் உலகமே எதிர்த்தாலும் நிச்சய மாக உன்னைத்தான் நான் திருமணம் செய்து கொள்வேன்" என்று சொன்னான்.

ஒரு நாள் அந்த பெண்ணிற்கு சத்திர சிகிச்சை ஒன்றின் மூலம் பார்வை வந்து விட்டது .

அப்போது அந்த இளைஞன் அவளி டம் கேட்டான் "இப்போது நாங்கள் திரு மணம் செய்து கொள்ளலாமா?" காத லனைநிமிர்ந்துபார்த்த அந்தபெண்ணுக்கோ அதிர்ச்சி. ஏனென்றால் அவளின் காதல னுக்கும் கண்கள் இல்லை. அவனும் பார்க் கும் சக்தியற்றவன். ஆனால் அவளுக்குத் தான் பார்வை வந்துவிட்டதே. அதனால் "பார்வையற்ற உன்னைத் திருமணம் செய்துகொண்டு காலம் மூழுக்க கஷ்டப் பட நான் தயாரில்லை" என்றாள்.

சிறுது தூரம் சென்ற பிறகு அவன் அவளிடம் சொன்னான். "என்னைத் திருமணம் செய்யவில்லைஎன்றாலும்பரவாயில்லை. என்னுடைய இரு கண்களையும் பத்திர மாகப் பார்த்துக் கொள்!"

ஆம்! அவனின் கண்களே அவ ளுக்குப் பார்வையைக் கொடுத் திருந்தன.

**(குறிப்பு- கண் முதலான உறுப்புகளை ஒருவர் இறந்த பின்னர் தான் தானம் செய்ய முடியும். இங்கு கற்பனைக்காக காதலன் உயிரோடு இருக்கும் போதே கண் தானம் செய்தான் என்று சொல்லப்பட்டுள்ளது)**

## இந்த வாரத்து காதல் எஸ்.எம்.எஸ்

1. **காதல் கடிதம் எழுதுவதற்கும், பரீட்சை எழுதுவதற்கும் என்ன வித்தியாசம்?**
   **காதல் கடிதம்: மனசுக்குள்ள நிறைய இருக்கும்.. ஆனால் எழுத வராது...**
   **பரீட்சை: மனசுக்குள்ள ஒன்றுமே இருக்காது... ஆனால் நிறைய எழுதுவோம்...**

2. **முறைக்க சொன்னால் ஏன் முறைக்கிறாய்?**
   **முத்தம் கேட்டால் முறைக்கிறவள்,**
   **முறைக்கச் சொன்னால் முத்தமிடக்கூடாதா?**







## காதல் நேர்த்தி மரம்





ஒவ்வொருவரிடம் ஒவ்வொரு வித மான நம்பிக்கைகள் உண்டு. அதுவும் காதல் வந்துவிட்டால், எதைச் சொன் னாலும் நம்பிவிடும் மனம் வந்துவிடும். குறிப்பாக இதைச் செய்தால் உங்கள் காதல் கைகூடிவிடும் என்று சொன்னால் உலகின் எந்தமூலைக்கும் சென்று அதனைச் செய்துமுடித்து விட்டுத்தான் அடுத்தவேலை பார்ப்பார்கள்.

குழந்தைப்பேறு இல்லாதவர்கள், குழந்தைவரம் வேண்டி சில ஆலயங் களில் உள்ள மரங்களில் தொட்டில் கட்டுவார்கள். அப்படிச் செய்தால் விரை வில் தங்கள் வீட்டுத் தொட்டிலை அலங் கரிக்க ஒரு குழந்தை கிடைக்கும் என்பது அவர்கள் நம்பிக்கை. இதே போன்ற நம்பிக்கை ரஷ்யாவின் வோல்கா நதியோரத்திலும் காண முடியும். சில வருடங்களுக்கு முன்னர் யாரோ ஒருவர் மரம்போன்றஅமைப்பொன்றைச் செய்து, அதில் இதய வடிவில் ஒரு பூட்டை பூட்டிவிட்டு சென்றுவிட்டார். தன்னுடைய காதல் நிறைவேற வேண்டும் என்பதற்காகவே அவர் இப்படி யான நேர்த்திக்கடனைச் செய்திருக்க வேண்டு மென முடிவு செய்த காதலர்கள் சிலர் தாமும் அதேமரத்தில் நேர்த்தி வைத்து காதல் பூட்டுகளை மாட்ட, அவர்களில் பலரின் காதல் கைகூடி விட்டதாம்.

அவ்வளவுதான்!

இந்த விடயம் ரஷ்யாவில் மட்டுமல் லாது உலகின் பல காதலர்களின் கவனத்தையும் ஈர்த்துவிட்டது. அதன் பின்னர் இந்த நதிக்கரைக்கு காதலர் களின் படையெடுப்பும், காதல் பூட்டு நேர்த்திக்கடனும் குறைவின்றி நடக்கத் தொடங்கிவிட்டது. இப்போது இந்த நதிக்கரையில் ஏராளமான காதல் பூட்டு மரங்களும், பூட்டுக்களை விற்பனை செய்யும் கடைகளும் முளைத்துவிட்டன. அதுசரி, நீங்கள் எப்போது அங்கு போகப்போகிறீர்கள்?


*** *** ***

## காதல் பரிசு:
## உங்களுக்கும் பரிசு

உங்கள் வாழ்வில் அல்லது உங் களுக்குத் தெரிந்தவர்களின் வாழ் வில் காதல் பரிசுகள் பற்றிய சுவா ரசியமான சம்பவங்கள் நடந் திருக்கலாம். அவற்றை 100 சொற்களுக்கு மேற்படாமல் எமக்கு எழுதி அனுப்புங்கள்.

தரமானவை வாரந் தோறும் இந்தப் பகுதியில் பிரசுரமாவதோடு, உங்களுக்கு ஆச்சரியமளிக்கும் பரிசுகளும் காத்திருக்கின்றன.

**✍ அனுப்ப வேண்டிய முகவரி:**
**காதல் பரிசு: உங்களுக்கும் பரிசு**
**சுடர் ஒளி**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப் புனல்

## மாசற்ற பெண்



பெருமை பெறும்
பேறுபெற்றவள்
பெண் சிசுவை
பெற்று வளர்க்கும்
அருமை உற்றவள்
பெண்!

கருணைமிக்க
உள்ளமுற்றவள்

பெண் நாம்
கண் கண்ட முதல்
தெய்வமும்
பெண்!

பொறுமைக்கு பெயர்
போனவள்
பெண் அவள்
புயலானாள் தாங்காது
இந்த
மண்!

மனை விளங்க
விளக்கேற்ற
மகிழ்வூட்டும்
பெண் –ஆடவர்தம்
வளர்ச்சிக்கு
உறுதுணையாய்
வருபவள்
மாசற்ற பெண்!

கவிக்குயிலன்
சேனையூர் -06

## யார்துணை...?



குணம் என்ற பெயரோடு
குற்றங்கள்
குற்றவேல்களாகின்றன ஆண்டவன்
வாசமிடத்து
அதிகாரப் போட்டிகள்

அன்பெனும் பெருங்குணங்கள்
அழிந்தே மறைகின்றன
மறையோனின் மலர் தாளடியில்
தலிக்கின்ற மனங்கள்

தட்சணை வதைத்தே தாகம்
தணித்த வீரபத்திரன்

திகைத்து நிற்க திக்கெட்டும்
தகிப்பின் போர்க்களமாய் ஆலயம்

அன்னதானம் எனும் மனிதத்தின்
அர்த்தங்கள் அழிந்து
உற்றவரும் சுற்றவரும் மகிழ்ந்து
நிற்க
விருந்துபசாரமாய் மட்டுக்குள்

மூலவராய் நிற்பவர்க்கு
காரங்களால் அபிஷேகம்
உணவுகள் உறவுகட்குள்ளே
ஊட்டி மகிழ

வாசலிலே வயிறெறிந்து ஏழை
நிற்கையிலே ஈசனே
தட்சன் தலை கொய்தவனே
யார் துணை?

கெ.மலரவன்
வியாபாரிமூலை.

## கண்ணீர்

கண்களின் கரு
அன்பின் ஆழம்
வெற்றியின் முடிவு
கடவுள் கொடுத்த
வரம் கண்ணீர்

சி.லிங்கேஸ்வரன்

## இயற்கையின் உயர்வு....



இரகசியம் பேசிய
மலர்கள் காற்றோடும்
சேர்ந்து கச்சேரி செய்த
மரங்கள்
வெள்ளிக் கொலுசு

அணிந்த அருவி
பனியில் குளித்தும்
நடுங்காத புல்வெளி
வெயிலை விரும்பி
இரசிக்க வந்த

மழைச்சாரல்
மிதித்த போதும்
சிரித்த சருகுகள்
இச்சையோடு
ரசித்தும்

எரிச்சலடையாத
ரோஜாக்கள்
மார்போடு
புல்லுடுத்தினாலும்
பொல்லாத குளிருக்கு

பூக்களைப் போர்த்திய
மலை நடந்த போது
துணைக்கு வந்த
குளிர்காற்றை
முந்தாணைக்குள்

மூடிக்கொள்கின்றேன்
உயரத்திலும் சரிவிலும்
ஒரே மாதிரி சிரிப்பது
மலர்களுக்கு மட்டும்
சாத்தியமோ?

நிலா
கொக்குவில்.



## காதலுடன்....

என் காதல் தேவதையே!
உன் செவ்விதழ் சிந்திய
புன்னகைத் தூறல்களால்
என் உணர்வுகளை
சிதறடித்தாய்
உன் காந்த விழிகொண்டு
காதல் மொழிபேசி
என் இதயத்தை
சிறைப்பிடித்தாய்
உணர்வுகளால் மட்டும்
காதலைச் சொல்லும்-
உனது உதடுகள்
அசையும் ஒரு
நொடிக்காய்
காலமெல்லாம்
காத்திருப்பேன்
என்றென்றும் காதலுடன்

எஸ்.எம்.புயல்
வட்டக்கச்சி

## தொடரும்....



வறுமை
அஞ்சுகிறது
உழைப்பைக்
கண்டு
உழைப்பை
மிஞ்சுகிறது
விலையேற்றம்

இப்படித்தான்
எல்லோர்
வாழ்க்கையிலும்
வறுமை போக்க
உழைப்பும்
உழைப்பை வெல்ல
விலையேற்றமும்

போட்டி போட்டுக்
கொள்கிறது!
ஒரு பொருள்
வாங்குவதற்கு
விலைவிசாரித்தேன்
பன் மடங்கு
விலையேறிவிட்டது!

மீண்டும் சேமிக்கிறேன்
அதுவும் நிராசையாக
போகலாம்
ஆனாலும் என்
நம்பிக்கை
என்றும் மாறாது.

எ.பாரிஸ் மிருந்தலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூச்சலும் மேதைத் தனமும்



"13 ஆவது திருத்தமானது புதுடில்லியினால் தமிழர்களின் மனக்குறைகளுக்கான தீர்வுக்காக இலங்கை மீது உறுதிப்படுத்தப்படாத நிலையில் திணிக்கப்பட்டதொன்றாகும். அக்காலப் பகுதியில் தமிழ் மக்களையும் அதே போல சகல தமிழ் அரசியல் கட்சிகளையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்த தனித்தன்மை வாய்ந்தவரான பிரபாகரனும் இதனை வெளிப்படையாகவே ஏற்றுக் கொள்ள மறுத்திருந்தார். அவர் விரும்பியதெல்லாம் மாகாணசபையை அல்ல. அவர் சுதந்திரமான இறையாண்மையுடைய ஆட்சியைத் தான் விரும்பினார்.

தமிழில்: ஜஸ்ரின்

(சண்டே ரைம்ஸ் –வசந்த குருகுல சூரிய எழுதியது..)

கடந்த வாரத்தில் கொழும்பைத் தளமாகக் கொண்டியங்கும் வெளிநாட்டுத் தூதுவர்களின் ஒன்றுகூடலின் போது பேராசிரியர் ஜி.எல்.பீரீஸ் உரையாற்றுகையில்; அரசியலமைப்பில் சீர்திருத்தம் அவசியம் என்ற காரணத்தினால் அரசாங்கம் இவ் விடயங்களை ஆராய்வதற்கென நாடாளுமன்றத்தின் ஆதிக்க வரம்புக்குட்பட்ட நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் முன் கொண்டு வர வேண்டுமெனக் கருதியுள்ளது என்பதை வலியுறுத்திக் கூறியுள்ளார்.

நாடாளுமன்றக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பெயர்கள் யாவும் சபாநாயகரினால் கடந்த வாரத்தில் தெரிவிக்கப்பட்டன. இக்குழுவில் அரசாங்கம் 19 உறுப்பினர்களையும் எதிரணி 12 உறுப்பினர்களையும் கொண்டிருக்கும் ஆனால் இவ்வாறான ஒரு குழுவில் பங்கு பற்றுவது குறித்து எதிர்த் தரப்பு அரசியல் கட்சிகள் இன்னமும் எதுவும் வெளியிடவில்லை.

13 ஆவது திருத்தத்தில் அரசாங்கம் செய்ய விரும்பும் மாற்றங்கள் குறித்து அடையாளம் காட்டியுள்ளது. ஆனால் அரசாங்கத்தின் ஆளும்கூட்டணிக்குள் உள்ள இடம் மாற்றங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்துவரும் அமைச்சர்கள் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் நியமிக்கப்படவில்லை.

இது மிகவும் துரதிர்ஷ்டவசமானது. ஏனெனில் இது அரசாங்கத்திற்கும் மற்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இடம்பெறப் போகும் விரிவான விவாதங்களின் போது பல வேறுபட்ட எதிரான அபிப்பிராயங்கள் வெளிப்படுத்தப் படுவதை விரும்பவில்லை என்பதையே அப்பட்டமாக எடுத்துக் காட்டுவதாகவுள்ளது.

எதிர்த் தரப்பு அரசியல் கட்சிகள் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் நடவடிக்கைகளில் பங்கு பற்றுவதற்கான அவர்களது விருப்பத்தைத் தெரிவிக்கவில்லை. தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பெரிய கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கு பற்றப் போவதில்லையென உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. அதேவேளையில், பெரிய எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் இக்குழுவில் நுழையாமல் இருக்கும் வாய்ப்பும் உள்ளது. அத்துடன் ஜே.வி.பியினரும் தாங்களும் இந் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கு பற்ற மாட்டோமெனக் கூறியுள்ளது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினரும் இக்குழுவில் பங்குபற்றப் போவதில்லை என்பதற்கான அறிகுறிகளே காணப்படுகின்றன.

எனவே நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவானது நீண்ட வருடங்களாக நாட்டிற்கு இன்னாத ஒன்றாக இருந்து வரும் தேசியப் பிரச்சினைக்குரிய நல்லதோர் தீர்வினை ஈடேறவைக்கும் என்பது நகைப்புக்கிடமான தொன்றாகவே இருக்கும்.

சட்டங்களைக் கரைத்துக் குடித்தவரான பேராசிரியர் பீரீசுக்கு ஒரு நாட்டின் சட்டவிதிகள் பொருள் பொதிந்தவையாகவும் அத்துடன் பல்வேறுபட்ட சமூகத்தவரிடையில் நீடித்து நிலைக்கக் கூடிய ஒற்றுமையையும் ஒரு மிக்கக் கொண்டு வரக் கூடியவையாகவும் இருக்க வேண்டுமாயின் இயற்றப்படவுள்ள சட்ட விதிகளில் பெரும்பான்மை அரசியல் கட்சிகளின் மத்தியில் ஓர் கருத் தொற்றுமை நிச்சயமாக இருக்க வேண்டுமென்பதே நன்கு அறிவார். கற்றறிந்தவரான பேராசிரியர் அவ்விதமாகக் கற்றுணராத உறுப்பினர்களுக்கு இத்தகைய தேவை குறித்து அறிவுரை வழங்குதல் வேண்டும்.

இதற்கான வெளிப்படையான உதாரணம் எம்மிடம் உள்ளது. சட்டத்துறையில் பிரகாசித்தவரான கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வா 1972 இல் அந்நேரத்தில் தமிழர்களின் பிரதான அரசியல் கட்சியா விளங்கிய தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கான அத்தியாவசியத்தைக் கருத்திலெடுக்காது நாடாளுமன்றின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் வரையப்பட்ட அரசியலமைப்பு அதற்குச் சான்றாகும்.

13 ஆவது திருத்தமானது புதுடில்லியினால் தமிழர்களின் மனக்குறைகளுக்கான தீர்வுக்காக இலங்கை மீது உறுதிப்படுத்தப்படாத நிலையில் திணிக்கப்பட்டதொன்றாகும். அக்காலப் பகுதியில் தமிழ் மக்களையும் அதே போல சகல தமிழ் அரசியல் கட்சிகளையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்த தனித்தன்மை வாய்ந்தவரான பிரபாகரனும் இதனை வெளிப்படையாகவே ஏற்றுக் கொள்ள மறுத்திருந்தார். அவர் விரும்பியதெல்லாம் மாகாண சபையை அல்ல. அவர் சுதந்திரமான இறையாண்மையுடைய ஆட்சியையே விரும்பினார்.

13 ஆவது திருத்தமும் 25 வருடங்களாக புத்தக வடிவில் காலடியில் மிதிபட்டுக் கிடந்தது.

இலங்கை மீது இந்தியா தனது நட்பு நாடான அமெரிக்காவுடன் ஒன்று சேர இணைந்து அழுத்தத்தைப் பிரயோகித்துக் கடும் முயற்சியில் ஈடுபடுகையில் இலங்கை அரசாங்கத்துக்கு அதனைத் தட்டிக் கழிக்கவும் முடியாது அத்துடன் அதிலுள்ள முன்னைய வேறுபாடுகளை சொல்லவும் முடியாமலும் மென்று விழுங்கவும் முடியாமலும் கூவிக் கூக்குரலிட வேண்டியுள்ளது. அத்துடன் விளக்க முடியாத காரணங்களுக்காக பொதுநல வாய நாடுகளின் அரச தலைவர்கள் கலந்து கொள்ளும் மாநாட்டினை இலங்கையில் நடத்தவெனப் பிடிவாதமாக இருக்கும் இலங்கை அரசுக்கு அதன் போது தலைகுனிவு முடியுமென இந்தியா கூறியுள்ளது.

இரண்டு மாகாணங்கள் விரும்பின் அவை ஒன்றிணைவதற்கு வழிவகுக்கும் முறைமையை ஒழித்துக் கட்டுவதே அரசின் விருப்பமாகக் காணப்படுகின்றது.

அவ்வாறு ஒன்றிணைய விரும்பும் இரண்டு மாகாணங்களாக வடக்கும் அத்துடன் கிழக்குமாகவே இருக்கும். அதுவே நீண்டகாலமாகத் தமிழர் தரப்பின் கோரிக்கையாகவும் இருந்து வந்தது. ஆனால் ராஜபக்ஷ அதனை விரும்பவில்லை.

சிங்கள மற்றும் அரசியல் தலைவர்கள் நாட்டிலுள்ள ஏனைய பிரஜைகள் உரிமைகளை அனுப விப்பது போன்று தமிழர்களும் அதே உரிமைகளைச் சமமாக அனுபவிக்கும் இந்நாட்டுப் பிரஜைகள் என்பதை உணர்த்தும் வகையிலான ஓர் குறிக்கோளினை முன்னிட்டு திட்டமிட்டவகையில் ஓர் உடன்பாட்டினை எட்டுதல் வேண்டும்.

முஸ்லிம் மக்களுக்கும் மனக்குறைபாடுகள் இருக்கவே செய்கின்றன. ஆனால் அவை தமிழர்களுக்கு இருப்பவை போன்று பாரதூரமானவையல்ல. பெரும் பாலும் இருந்து வரும் சிங்களத் தேசிய வாதம் மட்டுபடுத்தப்படுமேயானால் முஸ்லிம்களுக்கான பிரச்சினைகள் எதுவும் இருக்காது.

அதை விடுத்து அரசியலமைப்புத் திருத்தம் குறித்து கீழ்த்தரமான முறையில் கூச்சலிட்டு சச்சரவு செய்வதிலும் பார்க்க ஓர் மதிப்பு மிக்க அரசியல் மேதைத்தனமான மனப் போக்கே இன்றைய கால கட்டத் தேவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31, ஜூலை – 06, ஆகஸ்ட், 2013

# சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி–: 021 567 7609

sudarolijaffna@gmail.com

## காவு வாங்கும் மீற்றர் வட்டி

பொருளாதாரத்தையே மையமாகக் கொண்டு சுழலும் நவீன வாழ்க்கை முறையில் கடன் என்பது கட்டாயமான ஒன்றாக மாறிவிட்டது. என்ன தான் கை நிறையச் சம்பாதித்தாலும் அதற்கு அதிகமாக அவற்றை விழுங்கும் வகையில் தேவைகளும் உயர்ந்து கொண்டே செல்கின்றன. தேவைகளை எப்படியும் நிறைவேற்றியே தீரவேண்டும் என்ற கட்டாயம் எழும் போதே, ஒவ்வொரு வரும் கடன் வாங்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

அவசரத்திற்கு இப்போதைக்குக் கடனை வாங்குவோம் ஒவ்வொரு மாதமும் சிறுகச் சிறுக சேமித்து அதனை அடைத்து விடுவோம் என்ற நம்பிக்கையோடுதான் பிறரிடம் கடன் கேட்டுக் கை நீட்டுகிறார்கள். ஆனால் காலம் அவர்கள் நினைத்தபடி வாழ்க்கையை வழிநடத்துவதில்லை.

கடன் வாங்கிய பின்னர் வேறு வேறு தேவைகள் புதிதாகத் தோன்றி கடனை அடைக்கவிடாமலே செய்து விடுகின்றன. ஒரு கட்டத்தில் கடனையும் வட்டியையும் கேட்டு கடன் கொடுத்தவர் கழுத்தைப் பிடிக்கும் போதுதான் அவர்களுக்கு உண்மை உறைக்கிறது. அதன் பின்னர் அந்தக் கடனைக் கட்டுவதற்காக வேறு நபர்களிடம் அதிகூடிய வட்டிக்கு கடன் வாங்குகிறார்கள். இதன்போது பழையபடி சிறுகச் சேமித்து கடனை அடைப்போம் என்ற நம்பிக்கைக் கனவே மீண்டும் எழுந்தாலும் முன்னரைப்போலவே இதனையும் கட்டமுடியாத அளவுக்குச் சூழ்நிலை ஏற்பட்டு விடும். இப்படி கடனைக் கட்ட கடன் வாங்கி ஒரு கட்டத்தில் மீற்றர் வட்டி கடன் தொகையை விடவும் பல மடங்கு அதிகரித்துவிடும்.

எவ்வளவுதான் வேலை சம்பாதித்தாலும் கடனை அடைக்கவே முடியாத நிலை. தினமும் கடன் கொடுத்தவர்கள் வீட்டுக்கு முன்னால் வந்து கத்திப் பேசி குடும்ப மானத்தை கப்பல் ஏற்றிவிட்டுப் போவதை எத்தனைநாள்தான் பொறுக்க முடியும். இந்தச் சமயத்தில் தான் தற்கொலையைத் தீர்வாக பலர் தெரிவு செய்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் மட்டும் இதுவரை 22 பேரை மீற்றர் வட்டி காவுகொண்டிருக்கிறது.

ஆசைகளையும் தேவைகளையும் சுருக்குதலே இத்தகைய சூழலிலிருந்து தப்ப ஒரே ஒரு வழி. ஆனால் ஆசையை அடக்க யாருக்குத்தான் மனம் வரும்?

# எங்கு சென்றாலும் சாவு!

■ அனுஷ்கன்



பரணிதரன்

யாழ்ப்பாணத்தின் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த அழகிய தமிழ்க்குடும்பம் பாலமாறனின் குடும்பம். பாலமாறன் ஆஸ்ரேலியா பேர்த் நகரிலுள்ள தொழிற்சாலை ஒன்றில் கடந்த நான்கு வருடங்களாக கை நிறையச் சம்பளத்துடன் பணிபுரிவதால் குடும்பப் பிரிவின் வலியை விட வேறேந்த கஸ்டமும் அவர்களுக்கு ஒருபோதும் வந்ததில்லை. எல்லா வசதியையும் கொடுத்த இறைவன் தந்தை, தாய், மகன் என எல்லோரும் ஒரே குடும்பமாக வாழும் தகுதியை மட்டும் மறுதலித்திருந்தான். எல்லா தமிழ்க்குழந்தைகளையும் போல தந்தை யின் மடியில் தலை வைத்துப் படுத்து தந்தையுடன் பாச மழை பொழிந்து விளையாடும் சந்தோசமான பொழுதுகள் அந்த மூன்று வயதான பரணிதரன் என்ற பிஞ்சுக்கு எட்டாக் கனியாகவே இருந்தது. பாலமாறன் மட்டுமே இலங்கை வரமுடியும் என்பதால் தந்தைப் பாசத்தை பகுதியளவில் இழந்து தவித்தான் பரணிதரன். தந்தை வீட்டுக்கு போன் எடுக்கும் போதெல்லாம் அயல் வீடுகளில் இருக்கும் மற்றப்பிள்ளைகளைப் போல நாங்கள் உங்களுடன் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதே அந்தபிஞ்சு மழலை மொழியில் தந்தையிடம் விடுக்கும் கோரிக்கையாக இருந்தது. தொலைபேசியில் மட்டும் கிடைக்கும் தந்தைப் பாசத்திற்காய் ஏங்கித் தவித்துக் கொண் டேயிருந்தது அந்தக் குழந்தை. “அப்பா எங்களிடம் எப்ப வருவர்” என்று கேட்கும் குழந்தையிடம் “ நாளை” “விரைவில்” போன்ற பதில்களையே தாயாலும் அளிக்க முடிந்தது. அவளின் மனமும் கணவனுடன் சேர்ந்து ஒன்றாக வாழும் நாளுக்காய் தவம் கிடந்தது.

ஆஸ்ரேலியாவில் இருக்கும் பாலமாறனும் தனக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் இலங்கையில் தன்னைப் பிரிந்து தனியாகத் தவிக்கும் தன் குடும்பத்தை அவுஸ்ரேலியாவுக்கு எப்படி அழைக்கமுடியும் என்ற சிந்தனையிலேயே காலத்தை ஓட்டினார். குடும்பத்தை பிரிந்த வலி அங்கும் தந்தையையும், கணவனையும் பிரிந்த வலி இங்கும் என அந்த சிறிய குடும்பம் கடல்களால் பிரிக்கப்பட்ட பிரிவின் வலிகளுக்குள் சிக்கித் தவித்தது. இந்த வலிகளுக்கு தீர்வு காண்பதற்காய் தன் குடும்பத்தை ஆஸ்ரேலியாவிற்கு எடுப்பதற்கான அனைத்து நடவடிக்கை யிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத் தினார் பாலமாறன். ஆனால், இறுக்கமான குடிவரவுச் சட்டங்களையும் அகதி ஆஸ்தஸ்து கோருவோர் சட்டத்தையும் மிக இறுக்கமாக கட்டிப்படித்துக் கொண்டிருக்கும் அவுஸ்ரேலியா அரசு இவர்களின் கோரிக் கைக்கு செவிசாய்க்கவே இல்லை. தன் குடும்பத்தை தன்னோடு இணைக்குமாறு பாலமாறன் அனுப்பும் அனைத்துக் கடிதங்களும் விண்ணப்பங்களும் ஆஸ்ரேலியாத் துதரங்கள் குடிவரவுக் குடியகல்வுத் திணைக்களங்கள் கிழித்துப் போட்டு தன் குப்பைக் கூடைகளையே நிறைத்துக் கொண்டன. தன் குடும்பத்தை எடுப்பதற்கு சட்ட ரீதியாக என்ன தான் முயன்றாலும் அவுஸ்ரேலி யாவிடம் அது எடுபடாது என தீர்மானித்துக் கொண்டார் பாலமாறன்.

ஒரு சட்ட விரோத படகு மூலம் தன் பிள்ளையான பரணிதரனையும் தன் மனைவியையும் அங்கு கொண்டு வந்து விட்டால் பின்னர் நடப்பதைப் பார்த்துக் கொள்ளலாமென முடிவெடுத் தார். சரி ஒருக்கா முயன்று பார்ப்போமே என்ற முடிவுக்கு வந்தார் பாலமாறன். முகவர் களுக்கு களுக்கு இலட்சக் கணக்கில் பணம் பரிமாறப்பட்டது. இந்தோனே சியாவில் இருந்து புகலிடக் கோரிக்கையாளர்கள் என்ற பெயருடன் பரணிதரன் பாலமாறனின் மனைவி மற்றும் பல டசின் கணக்கான குழந் தைகள் உள்ளடங்கலாக 208 பேரை ஏற்றியபடி இந்தோனேசியாவில் இருந்து ஆஸ்ரேலியா நோக்கி புறப்பட் டது படகு. சில கடல் மைல் தூரங்களை கடந்தவுடன் அவர்களின் வாழ்வில் விதிவிளையாடத் தொடங்கியது. எதிர்பார்க்காத தருணத்தில் படகு மீது மோதிய அலையின் தாக்குதலால் ஒரு பக்கமாக இழுத்துச் செல்லப்பட்டது அந்த வேகத்தில் எதிரே இருந்த கடல் பாறை ஒன்று கதவின் அடிப்பகுதியை பதம் பார்த்தது. அதனால் ஏற்பட்ட துவாரம் காரணமாக குபுகுபு என வேகமாக நீர் படகுக்குள் புகத் தொடங்கியது. சுமார் 150 பேரை மட்டுமே அவர்களால் மீட்க முடிந்தது. தந்தையுடன் சேர்ந்து வாழ வந்த மூன்று வயதான பரணிதரன் கடலோடே காணாமல் போனான். அன்று தன் குடும்பத்தை தன்னுடன் இணைக்குமாறு கோரி வந்த பாலமாறன் இன்று தன் குழந்தையின் சடலத்தை தேடித்தருமாறு செஞ்சிலுவைச் சங்கத்திடம் கோரிக்கையை விடுத்திருக்கிறார்.

➡



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கு சென்றாலும் சாவு





உயிரோடு இருக்கும் போது எந்த உதவியும் செய்யா மல் உயிரிழந்த பின் னர் அறிக்கையிடு வது எதற்கு உதவும்?

இந்தோனேஷியாவின் இடம்பெற்ற படகு விபத்து அனைவரது விழிகளிலும் நீரைக்கசிய விட்டிருக்கின்றது. தன் குழந்தையை காப்பாற்றித் தருமாறு ஆஸ்ரேலியா செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஓடித்திரியும் பாலமாறனுக்கு ஆஸ்ரேலியப் பிரதமர் தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்திருக்கிறார். பாலமாறன் தனது குடும்பத்தை ஆஸ்ரேலியாவிற்கு குடியேற அனுமதிக்குமாறு கோரும் ஏதும் பேசாமல் இருந்த மௌனம் சாதித்த ஆஸ்திரேலியா அரசுக்கு இப்போது ஆறுதல் தெரிவிக்க என்ன அருகதை இருக்கிறது.? பரணிதரனின் மரணத்திற்கான பொறுப்பு இன்று ஆஸ்திரேலிய அரசுமீதே சுமத்தப்பட்டிருக்கிறது. இதே போன்று கடந்த சில வாரங்களாக பல்வேறு கடல் படகு விபத்துக்கள் ஆஸ்திரேலியாவை மையமாகக் கொண்டு இடம்பெற்று வருகின்றன. இதற்கான பிரதான காரணம் ஆஸ்திரேலியா அரசின் இறுக்கமான நடைமுறைகளே என குற்றம் சாட்டப்படுகின்றது. ஆஸ்திரேலிய அரசின் இத்தகைய குடியேற்ற வாசிகள் மீதான நெருக்குவாரங்கள் குறித்த ஐ.நா உட்பட பல்வேறு அமைப்புக்கள் கடும் கண்டனங்களை வெளியிட்டுள்ளன.

***பயணித்தவனின் வாக்குமூலம்***

எங்கட வீட்டிலையும் பயங்கரக் கஷ்டம் அப்பா இல்லை அண்ணா தான் கடற்தொழில் செய்து குடும்பத்தைக் பார்க்கிறான். 2 தங்கச்சிமார் வேறை இருக்கினம். இதை நினைத்துப்பார்த்த எனக்கு நண்பர்கள் கூறுவது போல் ஆஸ்திரேலியா போய் உழைப்பதே சரியெனப்பட்டது.

அம்மாவிடம் கேட்டுப்பார்த்தான். முதலில் மறுத்த அம்மா பிறகு சம்மதிக்கத் தொடங்கினா.

"சரியடா தங்கச்சிமார் இருக்கடா அதுகளை கரையேத்தவேணும். ஆனால், மூண்டு லட்சத்திற்கு எங்கேயடா போறது?" எண்டு சொல்லி காசைக் காரணம் காட்டினார். பிறகு

''டேய் தங்கச்சிமாருக்கண்டு வாயைக்கட்டி வயிற்றைக்கட்டி உங்கட அப்பா சம்பாதிச்சு விட்டு போன நகையள் கொஞ்சம் இருக்கு. அதை விப்பம். பிறகு நீ ஆஸ்திரேலியா போய் உழைக்க வெளிக்கிட்டா அதை திருப்பி எடுக்கலாம்'' எனது திட்டத்திற்கு ஒத்துழைப்பை வழங்கத் தொடங்கினா. எனக்கும் அம்மா சொன்னது சரியென வேபட்டது. பிறகு ஏஜென்சி காரரைப் பிடிக்கிற வேலையில இறங்கத் தொடங்கினேன். எனது நண்பர்களிடம் இதுதொடர்பாக விசாரிச்சுப் பார்த்தன். அவங்கள் ''விசாரிச்சு சொல்லுறம். இப்ப சில ஏஜென்சிகாரர் ஆரம்பத் தொகையெண்டு மூன்று லட்சத்தைக் வாங்கிப்போட்டு எங்களைக்கொண்டு போய் பொலிஸில் மாட்டிப் போட்டு ஓடிடுவாங்கள். நல்ல ஏஜென்சிகாரரை தான் தேடவேணும்'' எண்டு அறிவுரை கூறினாங்கள். அந்த நண்பர்களில் சிலரும் என்னோடு ஆஸ்திரேலியா வருவதற்கு தயாராகவே இருந்தனர்.

ஒரு நாள் ஒரு நண்பன் மூலமா எனக்கொரு ஏஜென்சிக்காரனோட தொடர்பு கிடைச்சது. தாங்கள் படகு மூலம் பலரை அனுப்பியிருப்பதாகவும் தாங்கள் ஏமாச்த மாட்டம் எண்டும் முதலில் ஒரு மூன்று லட்சம் தாங்கோ பிறகு போய் இறங்கினா பிறகு தான் மிகுதி காசு வாங்குவம் எண்டும் கூறினான்.

என் நம்பிக்கைக்குரிய நண்பனொருவன் மூலமாக தொடர்பு கிடைத்தால் அவன் மீது எனக்கு சற்று நம்பிக்கை இருந்தது. முதலில் நகை வித்து கிடைச்ச காசில ஒரு மூன்று லட்சத்தை அவனிடம் கொடுத்தம். அவனும் சந்தோசமாக உங்களை ஆஸ்திரேலியா அனுப்புறது தான் தன் வேலையென கூறி காசைப் பெற்றுக்கொண்டான்.

"இப்ப கிட்டடியில் ஒரு படகு போகப் போகுது. உங்கட பிள்ளையையும் அதில தான் அனுப்பப் போறம். திட்டங்கள் ஏற்பாடுகள் எல்லாம் முடிஞ்சவுடன் தொலைபேசியில் அறிவிக்கிறம்" என்று கூறி தொலை பேசி இலக்கத்தையும் வாங்கிக் கொண்டான்.

சில நாட் கழித்து அவனிடம் இருந்து அழைப்பு வந்தது. ஆஸ்திரேலியா போகத் தயாராக உடுப்புகளுடன் வருமாறு போனில் அவனே தெரிவித்தான். சரியெண்டு நானும் அவன் சொன்ன நேரம் சொன்ன இடத்துக்குப் போட்டன். அங்கிருந்த எல்லா பொடியளையும் ஏத்தியபடி வாகனம் ஒன்று கிளம்பியது. சிறிது மணிநேர பயணத்திற்கு பிறகு ஒரு கரையோர பிரதேசத்தை அது அடைந்தது. நாங்கள் அனைவரும் இறக்கப்பட்டோம். பிறகு இன்னொரு வாகனமும் வேறும் கொஞ்ச ஆட்களை ஏற்றியபடி அங்கு வந்து நின்றது. இந்தப்பகுதி ஹெலி நடமாட்டம் குறைஞ்ச பகுதியாம் எண்டு தான் கொண்டு வந்து விட்டவனில் ஒருவன் என்னிடம் சொன்னான். திட்டத்தை விளக்கினான். "இங்கிருந்து படகு மூலம் பகுதிபகுதியாக போய் ஆழ்கடலில் இருக்கிற றோலர் படகுக்கு மாற்றுவம். பின் அங்கிருந்து நேரே ஆஸ்திரேலியா பயணமாவது தான் திட்டம்" என்றான்.

"இரவில் நேவி ரோந்து திரிவான். கொஞ்சம் அலேட்டா தான் உங்களை கொண்டு போவம். ஆனால், ஆழ் கடலுக்கு போனா ஒருத்தரும் எங்களைப் பிடிக்கேலாது"என்று எங்களுக்கு நம்பிக்கை ஊட்டினான்.

நாங்கள் அனைவரும் இரு படகுகளில் ஏற்றப்பட்டோம். சிறிது நேர பயணத்திற்கு பிறகு ஆழ்கடலை அடைந்தோம். அங்கே தயாராக நின்றது பெரிய மீன் பிடி றோலர் ஒன்று. நாங்கள் அனைவரும் அதில் ஏற்றப்பட்டோம். எம் பயணம் தொடர்ந்து இருவாரங்களைக் கடந்த பின்னும் முடிவதாய்இல்லை. கடலில் நாம் சந்தித்த நரகவேதனை கொஞ்ச நஞ்சமல்ல. சாப்பாடு தட்டுப்பாடு. தண்ணியும் முடிஞ்சுது. கடல் தண்ணி தான். நித்திரை இல்லை. ஓரே சத்தி. குளிர். நரக வாழ்வு எப்படி இருக்கும் என்பதை அப்போது உணர்ந்தோம். கடலில் வயிற்றோட்டம் மற்றும் பல்வேறு வருத்தங்களால் பாதிக்கப்பட்டு படகிலேயே உயிரிழந்தவர்கள் ஈவிரக்கமற்று கடலுக்குள்ளேயே தூக்கிப் போடப்பட்ட சம்பவத்தை எல்லாம் நான் நேரே பார்த்திருக்கிறன். கடைசியில் ஆஸ்திரேலியாவுக்கு இடையில் உள்ள மணல் திட்டு ஒன்றில் இறக்கி விடப்பட்டோம். "நாங்கள் ஆஸ்திரேலியாக் கடற்பரப்புக்குள் பிரவேசித்தால் படகுடன் கைது செய்யப்படுவோம். ஆகவே இதற்கப்பால் வரமுடியாது. உங்களை ஆஸ்திரேலிய கடற்படையினர் கண்டால் அவர்கள் அங்கு அழைத்து செல்வார்கள்" என்று மட்டும் எங்களுக்கு கூறப்பட்டது. சில நாள்கள் பசி பட்டினியுடன் அந்த மணல் திட்டில் பொழுதைக்கழிக்க வேண்டிய சூழலுக்கு தள்ளப்பட்டோம். பின் ரோந்து வந்த ஆஸ்திரேலிய கடற்படையினரால் பிடிக்கப்பட்டு இப்போது பப்புவாத்தீவில் அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். உழைப்பு, பணம் என எல்லா நம்பிக்கைகளும் தகர்ந்து போய் காத்திருக்கிறோம்.

***போகத்தான் வேண்டுமா?***

ஆஸ்திரேலியக் கனவில் மிதந்து, ஆட்கடத்தல் காரர்கள் ஏமாற்றப்பட்டு, படகுகளில் சட்டவிரோத அழைத்துச் செல்லப்பட்ட பலர், இன்று நடுக்கடலில் படகுகள் கவிழ்ந்தும், போகும் வழிகளில் பசி, பட்டினி மற்றும் உடல் நோய்களால் பாதிக்கப்பட்டும் உயிர் பிரிந்த சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம் பெற்று வருகின்றன. கடந்த வாரம் இடம் பெற்ற பல படகு விபத்துக்கள் இதற்கு சான்று. கஷ்டப்பட்டு உழைத்த பணத்தை ஆட்கடத்தல்காரர்களிடம் கொடுத்துவிட்டு பின் அவர்களாலேயே காட்டிக் கொடுக்கப்பட்டு கடற்படையினரால் கைது செய்யப்பட்டு குடும்பத்தையும் நடுத்தெருவில் தவிக்கவிட்டு சிறைச்சாலைகளில் வாடும் இளைஞர்களின் எண்ணிக்கை ஏராளம். போர் முடிந்த பின்னரும் சாவு மட்டும் தமிழர்களின் தலைவிதியாகவே தொடர்ந்து வருகிறது. சட்டவிரோதமாக ஆஸ்திரேலியா செல்லும் பலர் அங்கு தொழில் வசதிகளை ஏற்படுத்திக் கொள்ள முடியாமலும் தவிப்பதை கண்ணூடாகக் காணக்கூடியதாக இருக்கின்றது. உழைக்க வேண்டும் என்ற வெறியில் சென்று பல வருடங்களை கடந்த நிலையிலும் பப்புவா நியூக்கினி தீவுகளில் தவிக்கும் இளைஞர்களின் எதிர்கால வாழ்வு கேள்விக்குறியாகவே இருக்கிறது.

தொடர்ச்சியாகப் புகலிடக் கோரிக்கையாளர்கள் விடயத்தில் ஆஸ்திரேலிய அரசு இறுக்கமான நடவடிக்கைகளை மேற்கொள்வதால் படகு மரணங்களும் தொடர்ச்சியாக ஏற்பட்டு வருகின்றன. குறிப்பாக அண்மையில் உயிரிழந்த இலங்கை குழந்தையான பரணிதரனின் மரணத்திற்கான பொறுப்பை ஆஸ்திரேலிய அரசே ஏற்க வேண்டும் என்ற குற்றச் சாட்டு முன்வைக்கப்பட்டிருக்கின்றது. நடராசா பாலமாறன் தன் குடும்பத்தை ஆஸ்திரேலியாவுக்கு எடுக்க சட்ட ரீதியாக முயன்ற போது அவரின் முயற்சிகளுக்கான கதவுகளை அடித்து சாத்திய ஆஸ்திரேலிய அரசு, அவரின் குழந்தை கடலில் உயிரிழந்த பின்னர் அனுதாபம் தெரிவிக்க என்ன தகுதி இருக்கின்றது?

உயிரோடு இருக்கும் போது எந்த உதவியும் செய்யாமல் உயிரிழந்த பின்னர் அறிக்கையிடுவது எதற்கு உதவும்?


ஆஸ்திரேலியாவில் எந்தவிதமான வேலைவாய்ப்புகள் அற்ற நிலையிலும் அங்கு தொடர்ச்சியாக கள்ளத்தோணிகளில் இலங்கை இளைஞர்கள் அக்கரைப்பச்சைக் கனவோடு தொடர்ந்தும் பயணிக்கத்தான் வேண்டுமா? பணத்தை எப்போதும் சம்பாதிக்கலாம். ஆனால் உயிரை..... ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிகையூர் சு.க. சிந்துதாசன்.

# விதி வசம்



**'அப்பா! அப்பா!" "நான் அமுதா வந்திருக்கிறேன் அப்பா" மீண்டும் கேற் தகரத்தில் தட்டியபடி "அப்பா!" என அழைக்கிறாள். நாய் குரைக்கிறது. சாய்வு நாற்காலியில் படுத்திருந்தவாறே "யாரது...?" "அது நான் அமுதா..." "எங்கை வந்தனீ...?" எனக்கு இருந்த புள்ளை அது எப்பவோ செத்துப்போச்சு. போ... வெளியிலை...! அதிகாரத்தோடு பிறந்தது மாணிக்கத்தின் உத்தரவு.**

சிறுகதை

யார் யாரோ உலவிய காற் றடங்களால் நிறைந் திருந்தது அந்தக் கடற் கரை வெண்மணல். அத்த டங்களில் தன் சிறுபாதங் களை இணைத்து 'இது பெரிது' '........' 'இது சிறிது'.... எனச் சொல்லிச் சொல்லி விளை யாடிக் கொண்டிருந்தாள் மீனா.

ஏதும் அறியாதவளாய் ... தன் குழந்தைப்பருவத்திற்கேயுரிய இயல்புகளுடன் தன்னை மறந்து அந்தக் கடற்கரையில் மாலைப் பொழுதைக் கழித்துக் கொண் டிருந்த மீனாவை பழுதடைந்த ஒரு கட்டுமரத்தில் அமர்ந்தபடி வைத்த கண் வாங்காமற் பார்த்துக் கொண்டிருந்த தாய் அமுதா வின் விழிகளை கண்ணீர் மறைக் கத் தொடங்கியது.

அங்குமிங்குமாய் கட்டு மரத் தை வருடிய படி அமுதா குரலெடுத் து விம்மத் தொடங்கினாள். தன்னை மறந்து விளையாடிக் கொண்டி ருந்த மீனா தாயின் அழுகை யொலி கேட்டு ஓடோடி வந்து "அம்மா... அம்மா..." என அழைத்தபடி தானும் சேர்ந்து அழத்தொடங்கினாள்.

தாயின் இரு கைகளையும் இறுகப் பற்றிக் கொண்டு "ஏனம் மா அழுறாய்..?" "என்ன நடந்திற் று...?" எனக்கேட்ட மகளுக்கு ஏது சொல்வதென்று அறியாத வளாய்... தன்னைச் சுதாகரித்த அமுதா "ஒண்டுமில்லைப் புள்ளை நீ போய் விளையாடு" என்று கூறி மகளின் பற்றுகையிலிருந்த தன் கைகளை விடுவிக்க முயன்ற தாயை மீனா விடுவதாயில்லை.

"சொல்லம்மா! சொல்லம் மா!" என அடம் பிடித்த மீனாவை அணைத்து தன் அருகில் அமர்த்திய அமுதா தன் மக ளுக்கு அடக்க முடியா அழுகைக் கான காரணத்தைக் கூறுகிறாள்.

உன்னைப்போல் இதோ கடற் கரையில் ஓடியாடி விளையாடித் திரிந்தவள் தான் நானும். இந்தக் கடற் கரைக்கு வந்தாலே நான் என்னை மறந்து விடுவேன். எனது குறும்புத் தனத்தால் எத்தனை முறைஉன்அம்மம்மா விடம் அடிவாங்கியிருப்பேன் தெரியுமா?

"அம்மா! என் அம்மப்பா எங்கை இப்ப...?" "அவர் இங்கை தான் இருக் கிறார். ஆனால் அவருக்கு எங்களைப் பிடிக்காது"

"ஏனம்மா?"

"அதெல்லாம் உனக்கு விளங்காது புள்ளை" "சும்மா இரு!" "சரி நீ போய் விளையாடு" என ஒருவாறு மீனாவை அனுப்பிவிட்டு கட்டுமரத்திலிருந்து இறங்கி மணலில் அமர்ந்த அமுதா பக்கத்திலிருந்த வலைக்குவியலில் சாய்ந்து கொள்கிறாள்.

அவளது எண்ணங்கள் உதிர்ந்து போன காலங்களைக் காவிச் சுமந்தபடி காற்றாய் விரைகிறது.

"மாணிக்கம்" இவர் பெரிய சம்மட் டியார். ஊரில் இவருக்கு நல்ல மதிப் பும் மரியாதையும் இருந்தது. பெரிய புள்ளி என்பதால் இவரது சொல்லுக்கு செயல் வடிவம் கொடுக்கவும் பலர் இருந் தனர். தோற்றத்தில் மட்டுமல்லது இவரது குரலும் கம்பீரம் இருக்கும்.

எதையும் ஆராய்ந்து நியாயமாக நடக்கும் குணம் கொண்டவரெனி னும் கோபம் வரும்போது இவரை நெருங் கவே முடியாது. பலருக்கு தனது வாடியி லேயே தொழில்வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்திருக்கும் இவர் ஊரில் ஒரு செல்வந்தராகவும் விளங்கினார். இவ ருக்கு ஒரேயொரு மகள். அதுவும் மாணிக்கம் திருமணம் செய்து இருப த்தி யொரு வருடங்களின் பின்னர் பிறந்த வள்.

அவள் தான் என்பதை எண்ணிய அமுதா "நான் செய்த பிழை என்ன?" என்னை என் தந்தை ஏன் ஏற்க மறுக்கிறார்....?

"உருண்டோடிப்போன பத்து வருடங்களில் இன்னும் என் தந்தைக் கு ஏன் மனம் மாறவில்லை?" என்ற பல கேள்விகளை தன்னைத்தானே கேட் டுக் கொள்கிறாள். அக்கேள்வி களுக்கான பதில்களாய்.... அமுதாவின் விழிக ளிலிருந்து கண்ணீர் அருவியாய்.... கொட்டுகிறது.

நலன்புரி முகாமிலிருந்து விடு விக்கப்பெற்று அமுதா மீனாவுடன் ஊருக்கு வருகிறாள். தயங்கித் தயங்கித் தன் தந்தையாரிடம் புகலிடம் கோரிப் போன அமுதாவுக்கு ஏமாற்றமே கிட்டியது.

"அப்பா! அப்பா!" "நான் அமுதா வந்திருக்கிறேன் அப்பா" மீண்டும் கேற் தகரத்தில் தட்டியபடி "அப்பா!" என அழைக்கிறாள். நாய் குரைக்கிறது. சாய்வு நாற்காலியில் படுத்திருந்த வாறே "யாரது...?" "அது நான் அமுதா..." "எங்கை வந்தனீ...?" எனக்கு இருந்த புள்ளை அது எப்பவோ செத்துப்போச்சு போ... வெளியிலை...! அதிகாரத் தோடு பிறந்தது மாணிக்கத்தின் உத்தரவு.

அந்த உத்தரவு அமுதாவுக்கு "வெந்த புண்ணில் வேல் பாய்ந்தது" போலி ருந்தது.

செய்வதறியாது தவித்தபடி வீட்டு வாசலில் நின்ற அமுதாவையும் மக ளையும் தன் வீட்டில் வந்து தங்குமாறு தூரத்து உறவான சாந்தி ஆறுதலும் அடைக்கலமும் கொடுக்கிறாள்.

"அமுதா! இங்கை நானும் புள்ளை யளும் தானே இருக்கிறம். உனக்கு வீட்டுத் திட்டம் வரும் வரைக்கும் எங்கடை மாலுக்கை நீ இருக்கலாம். உனக்குப் பிரச்சினை இல்லை."

அது சரி ஏன் அமுதா இன்னும் உன்ரை அப்பாவுக்கு உன்னிலை கோபம் தணியலை.....?

"நான் அவற்றை விருப்பத்துக்கு மாறாய் கோகுலனைக் கலியா ணம் செய்தது தான்" "ஏன் கோகுலனுக் கென்ன குறை... ?" "ஒரு குறையும் இல் லையக்கா" "பிறகென்ன?" "ஆனால்... அவர் ஒரு போராளியாக இருந்தார். அதோட நான் அவரைக் காத லிச்சன். இந்த விடயம் தான். அப்பாவுக்கு ஆரம்பத்தி லிருந்தே பிடிக்கல்லை" "பிறகு" "நான் கோகுலனைத் தேடிப் போன திலிருந்து எனது தொடர் பையே அப்பா துண்டித்து விட்டார்"

"அது சரி அமுதா. இப்ப கோகுலன் எங்கை...?"

"எல்லோரைப் போலவும் நாங்கள் சனத்தோட சேர்ந்து வட்டுவாகலாலை படையினரிடம் சென்ற போது போராளியாக் கள் "இங்கிட்டு வாங்கோ பயம் வேணாம். படையினரின் அழைப்பை ஏற்று என்னையும் மீனாவையும் விட்டுப் புறம்பாய் போனவர் தான். எங்கையெண்டு இன்றுவரை தெரியேல்லை"

இவ்வாறு பல விடயங் களைப் பறிமாறிக் கொண்டி ருந்த அமுதா வின் மடியில் தலை வைத்த வாறு எந்தச் சஞ்சலமும் இல்லாத வளாய் மீனா தூங்கிக் கொண்டி ருந்தாள்.

இப்போதும் அது போலவே விளையாடிக்கொண்டிருக்கிறாள். எல்லாமே இயல்பாய் உள்ளன. அமுதாவைத் தவிர

"நான் மட்டும் ஏன் இப் படி...?" தன் மீது விதியெழுதிப் போன வாழ்வை ஏற்கவோ தாங்கவோ மு டி ய ா த வ ள ா ய் வலிகளில்.....உழன்று கொண் டிருக்கும் அமுதா வழியின்றி விதியைச் சபித்தபடி மீண்டும் அந்தக் கட்டுமரத்தில் போயமர் வதற்கும் "அப்பா எப்ப வரு வார்...?" எனக்கேட்ட படி ஓடி வந்த மீனா தாயைக் கட்டிய ணைப்பதற்கும் நேரம் சரியாய் இருந்தது.

மீனாவின் அணைப்பு ஏதோ பலம் தருவதாய் இருந்ததுடன் மகளின் கேள்விக்கு பதில் சொல் ல முடியாதவளாயும் இருந்த அமுதா மகளை இறுக அணைத் தவாறு கட்டுமரத்தில்சாய்ந்து கொள்கிறாள்.

மேற்கில் ஆதவன் பானை, குவளை, சட்டி, தட்டு எனப் பல்வகைப் பாத்திரங்களின் உரு வங்களை மாறிமாறி எடுத்தபடி கடலில் மூழ்கிக் கொண்டி ருக்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● தமிழில்: ஜெகன்

# நடுவானில் கைவிட்ட பரசூட்

**பறந்து கொண்டிருந்த விமானத்துக்குள்ளே மீண்டும் சார்ள்ஸ்ஸை இழுத்தெடுக்க முடியாது. அத்தகையதோர் முயற்சியில் இறங்கினால் மீட்பாளர்களும் தவறிவிழுந்து மரணத்தைத் தழுவ கோிடும்.**




(சென்ற வாரத் தொடர்ச்சி)

எல்லாம் சரியாக இருப்பதை நன்கு உறுதிப்படுத்திக் கொண்ட பயிற்சியாளர் ஜோன் பீட்டர் மெல்ல அவன் முதுகில் தட்டி 'குதி' என்றவுடன் அவன் எதுவித தாமதமும் இன்றி பயிற்சியாளர் கற்றுக் கொடுத்திருந்த முறைப்படி விமானத்துக்கு வெளியே வான் பரப்பில் குதித் தான்.

மூன்று வினாடிகளுக்குப் பிறகு அவனது பரசூட் விரிந்து கொண்டதோடு விமர்னத்துடனான உள்ளிணைப்பில் இருந்தும் விடுபட்டது. காற்றில் மிதந்து செல்லும் பஞ்சுக் கற்றை போல் அவன் அசைந்தாடிய படி மெதுவாகப் பூமியை நோக்கித் தாழ்ந்து போவதை எல்லாரும் கண்டார்கள்.

அடுத்து சார்ள்ஸின் முறை எல்லாமே ஒரு முறை சரி பார்க்கப்பட்டது. அதன் பின்னர் தான் சார்ள்ஸ் குதித்தான். ஆனால் ஏன் அப்படி நடந்தது என்று இதுவரை யாராலும் புரிந்து கொள்ள முடியவில்லை. மூன்று செக்கனில் பரசூட் விரிந்த கையோடு விமானத்துடனான இணைப்பும் துண்டிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அந்தோ பரிதாபம்! அவனது போதாத காலம் பரசூட் விரியவும் இல்லை. இணைப்பு விடுபடவும் இல்லை. அவனையும் இழுத்துக் கொண்டு விமானம் வான் பரப்பில் பறந்து கொண்டிருந்தது. விமானத்துடனான இணைப்புத் தானாக விடுபட வேண்டும் இல்லையேல் விபரீதம் தான்.

பறந்து கொண்டிருந்த விமானத்துக்குள்ளே மீண்டும் சார்ள்ஸ்ஸை இழுத்தெடுக்க முடியாது. அத்தகையதோர் முயற்சியில் இறங்கினால் மீட்பாளர்களும் தவறிவிழுந்து மரணத்தைத் தழுவ கேரிடும். இப்போது சார்ள்ஸின் நிலையோ பயங்கர மானதாக இருந்தது. விமானம் முன்னோக்கிப் பறக்கும் போது பின்தள்ளப்படும் காற்று அந் தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் சார்ள்ஸ் மிகவேகமாக உந்தித் தள்ளியதால் விமானத்தக்குப் பக்கவாட்டிலேயே அவன் இழுபட்டுக் கொண்டிருந்தான் காற்றின் அழுத்தம் மிக அதிகமாக இருந்ததனால் பரசூட்டின் இணைப்பு நாடாக்கள் அவன் உடலையும் தொடைகளையும் மிகவேகமாக அழுத்தின. இணைப்புவார்கள் அவன் உடலையே கீறி உள்ளே போவது போ்ல உடலெங்கும் ரணமாக வலித்தது. அதிலும் ஒரு சிறு அதிர்ஷ்டம்.

அந்தக் காற்று வேகத்திலும் கூட விமானத்துடனான இணைப்புத் துண்டிக்கப்படவில்லை. பரசூட்டும் விரியாமல் இருக்கும் நிலையில் காற்றின் வேகத்திற்கும் அழுத்தத்திற்கும் ஈடு கொடுக்க முடியாமல் விமானத்துடனான இணைப்பும் கழன்றால் சார்ள்ஸ் தரையில் எந்த மூலையில் உருத்தெரியாமல் நொறுங்கி விழுகிறானோ தெரியாது நினைக்கவே அதிர்ச்சியளிப்பதாக இருந்தது ஜோனுக்கு.


சார்ள்ஸ் மெல்லமெல்ல நம்பிக்கையை இழக்கத் தொடங்கினான். இனித் தனக்கு உயிர்தப்பிக்க வாய்ப்பே இல்லை என நினைத்தான். வாசல் கதவருகே நின்று கொண்டு சார்ள்ஸின் அவல நிலைமையை பார்த்துக் கொண்டு பதற்றத்துடன் இருந்த பயிற்சியாளருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

அவரை நேருக்கு நேராகப் பார்க்கக் கூடிய கோணத்தில் தான் ஜோன் தனது கட்டைவிரலை உயர்த்தி எப்படி இருக்கிறாய்? என்ற பாணியில் சைகையால் கேட்கவே அந்த நிலையிலும் சார்ள்ஸ் தனது கட்டைவிரலை உயர்த்தி ஒகே என்று சொன்னான் அதே நேரம் அவன் செய்ய விழைந்த காரியம் ஜோனைப் பதற வைத்தது.

பரசூட்டை விரியச் செய்யும் வேலை செய்யாமல் விமானத்தோடு இணைக்கப்பட்டிருக்கும் இணைப்பு விடுபட்டால் அவசர ஸ்விட்ச் ஒன்று பரசூட் மார்போடு இணைக்கப்பட்டிருக்கும் பகுதியில் பொருத்தப்பட்டிருக்கும் அதை அழுத்தினால் பரசூட் விரிந்து கொள்ளும் ஆனால் அவ்விதமாகச் செய்யும் போது எந்த விதமான இணைப்பும் விமானத்துடன் இருக்கவே கூடாது ஆகவே இப்போது அந்த விசையை அழுத்தக்கூடாது ஏனெனில் விமானத்துடன் உள்ள இணைப்பு துண்டிக்கப்படவில்லை.

(தொடரும்...)

## தமன்னாவுக்குப் பதில் ஸ்ருதி



ஏ.ஆர். முருகதாஸ் விஜயகாந்தை வைத்து எடுத்த மிகப்பெரிய வெற்றிப் படமான 'ரமணாவை' ஹிந்தியில் எடுக்கும் முயற்சிகள் தொடங்கிவிட்டன.

தமிழில் 'வானம்' படத்தை இயக்கிய கிரீஷ் இயக்கும் இப்படத்தை, சஞ்சய் லீலா பன்சாலி தயாரிக்கிறார்.

தமிழில் விஜயகாந்த் நடித்த கதாபாத்திரத்தில் ஹிந்தியில் அக்ஷய்குமார் நடிக்கிறார். இவருக்கு ஜோடியாக தமன்னா நடிக்கவிருப்பதாக

முதலில் பேசப்பட்டது. ஆனால் தமன்னாவை விட தற்போது இரசிகர்களிடம் செல்வாக்குப் பெற்ற நடிகையை தெரிவு செய்ய

திட்டமிட்டுள்ளார்களாம் படக்குழு.

இதனையடுத்து 'ரமணான்' ஹிந்திப்பதிப் பில் நடிக்க ஸ்ருதிஹாசனிடம் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்களாம். இதன் மூலம்

தமன்னாவுக்கு வந்த வாய்ப்பு ஸ்ருதி ஹாசன் பக்கம் திரும்பியுள்ளது. அண்மையில் ஹிந்தியில் ஸ்ருதியின் நடிப்பில் வெளியான

'டி-டே' மற்றும் 'ராமையா வாத்சா வய்யா' ஆகிய படங்கள் பரவலான வரவேற்பை பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் கதை



# போனவர்களின் வருகை

தொல்புரம் சி. கதிர்காமநாதன்

அரைக் காற்சட்டையில் ஓடித்திரிகிற பேரப்பிள்ளைகளையும், சாறி 'கட்ட' ஆசையிருந்தும் என்ன செய்வது, வெளிநாட்டிலிருந்து வந்த தலைவிதிக்காக ஒத்துக் கொள்ளாவிட்டாலும் இறுக்கமான ஜீன்சும் பெனியனும் போட்டு, தாங்களும் 'கஸ்ரப் பட்டுக்' கொண்டு, மற்றவர்களையும் "கஸ்ரப்படுத்தி அவதியுடன் திரியும் மருமக்களையும், என்ன வென்று சொல்வது?

நான் நீ... ண்...ட..... பெருமூச்சு விடுகின்றேன். எனது வீட்டைப் பார்க்கின்றேன். ஆமி கைவிட்டுப் போன 'காம்ப்' மாதிரி அமைதியாக இருக்கின்றது. வெளியே 'கைஸ்' ஒன்று விரைந்தோடிப் போனது.

எனது வீட்டு வாசலில் எப்போது 'கைஸ்' வந்து நிற்கும்.?

எவ்வளவு நேரம் தான், 'புரண்டுபடுப்பது? விடிந்துவிட்டது. என்பதற்கு அடையாளமாக சேவல் கூவும் சத்தமோ காகம் புள்ளினங்கள் கத்தும் சத்தமோ கேட்டு ,'ரொம்ப' நாட்களாகிவிட்டது. இப்போது நாலா பக்கமும் போட்டி போட்டுக் கொண்டு ஒலி பெருக்கிகளில் ஒலிக்கும் பக்திப் பாடல்கள் காதைப் பிளக்கின்றன. தூங்கிக் கிடக்கும் அனைவரையும் இது எழவைக்கிறது.

வயிறு முட்ட சாப்பிட்டு விட்டு நித்திரையில் கிடந்த நாய் கூட இப்போது கோபத்துடன் எழுந்து குரைக்கின்றது.

எல்லா "ஒலிபெருக்கிகளும் வெளிநாட்டுக்குப் போன புண்ணியவான்களின் 'நேர்த்திக்கடனும்', அன்பளிப்புக்களும் தான். எனக்கென்னமோ இந்தச் சத்தங்களினால் இருக்கின்ற பக்தியும் எங்களை விட்டு ஓடிப் போயிடுமோ என்ற பயம் உள்ளது.

இனிதே விடிந்துவிட்டது.

வெளியே கூப்பிடும் குரல். அது சண்முக மாமாதான். இப்போது மனுசியும் எழுந்து வந்த விட்டாள். வெளிவாசல் கதவினைத் திறந்தேன்.

குட்மோனிங் சிவா

"குட்மோர்னிங் அங்கிள்"

சண்முக மாமாவின் ஆரம்பக் கல்வி சிங்கப்பூரில்.

"எப்படி இருக்கிறியள் மாமா?

"........." சற்று உற்சாகமில்லாமல் குரல்

"என்ன அங்கிள் ஒரு மாதிரியாய் இழுக்கிறியள்"

"ராவில நித்திரை வருகுதில்ல, மனம் அந்தரமாய் கிடக்கு"

நான் மனுசியை பார்த்தேன்.

என்ன மாமா நீங்கள் வயதெல்லே போகுது. நித்திரை வாறது அப்படித்தான் இருக்கும் நீங்களும் ஒரு இடமும் போகாமல் வீட்டில கிடக்கிறியள்.... முந்தித் தான் தனிய இருந்தனீங்கள். இப்ப ஒரு மாதிரி ஆக்களை கொண்டு வந்து இருத்தியாச்சு... அவையளும் இருக்கேக்க என்ன பயம்..."

மனுசி 'பட்டிமன்ற தலைவி போல்' பொரிந்தாள்.

"எனக்கு வீட்டில இருந்து பழகிப் போச்சு. கடைக்கு போற தெண்டால் போவன் மற்றும் படியம்மா திரிய மனம் வராது."

மாமா சிறிது நேரம் பேசாமல் நின்றார். ஏதோ கேட்கத் தயங்குவது போல் இருந்தது.

"என்ன மாமா யோசிக்கிறியள்?"

"இல்ல கடித மொண்டையும் காணேல்ல உங்களுக்கு கடிதம் வந்ததோ?

மாமா கலக்கமாகக் கேட்டார்.

"உங்களுக்கு கடிதம் வந்து இரண்டு நாளெல்லே ஆகுது. ஏன் இப்படி அவசரப்படுகிறியள்?"

"முந்தி அக்கா அடிக்கடி கடிதம் போடுவது இப்ப அப்படி வாறேல்லை.வெளிநாடென்றால் அப்படித் தானோ? அது தான் கேட்க வந்தனான் நான் வாறன்."

மாமா மெல்ல மெல்ல நடந்து போனார்.

(அடுத்த வாரமும் வருவார்கள்...)



# இராசி பலன்

31.07.2013 - 06.08.2013



**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

**சமூக நலனுக்கு முக்கியத்துவம் தருகின்ற, மேஷ இராசிக்காரர்களே!**

மனதில் உருவாகிற நல்ல சிந்தனைகள், செயல் .வடிவமாகி வெற்றி பெற, முருகப் பெருமானின் நல்லருள் பலமாக துணை நிற்கும். பூர்வ ஜென்மத்தில் செய்த, நற்செயலின் பலன் இப்போது வாழ்வில் முன்னேற, அதிர்ஷ்டகரமான வாய்ப்பைப் பெற்றுத்தரும். மாணவர்கள் உடல் நலம் பேணுவதால் மட்டுமே, படிப்பதில் அக்கறை வளரும்.



**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

**வாழ்வின் முக்கிய தேவையை மட்டும், நிறைவேற்றுகின்ற, ரிஷப இராசிக்காரர்களே!**

திறமையுடன் செயல்பட்டு, பணியை எளிதாக நிறைவேற்றுவீர்கள். இல்லறத் துணை கருத்து வேற்றுமையுடன் நடந்து கொள்வார். பணியாளர்கள், சிறப்பாக பணிபுரிந்து சம்பள உயர்வு, சலுகைப் பயன்பெறுவர். பெண்கள், உறவினர்களை நன்கு உபசரித்து, குடும்பத்திற்கு நன்மதிப்பு உருவாக்குவர். மாண வர்கள் நன்றாகப் படித்து பெற்றோரிடம் விரும்பிய பரிசுப் பொருள் பெறுவர்.



**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

**செயலில் தவறு நிகழ்ந்தால், தயக்கமின்றி சரி செய்திடும், மிதுன இராசிக்காரர்களே!**

புத்திரரின் அறிவுத்திறன் மேம்பட, தேவையான வழிவகை உருவாக்குவீர்கள். உடல் நலம் சீர்பெற, மருத்துவ சிகிச்சை தேவைப்படும். இல்லறத்துணை, உங்களின் பொறுப்பான பணிகளை மனதார பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் சராசரி பணவரவு கிடைக்கும். மாணவர்கள், சகமாணவர்களிடம் படிப்பு தவிர, பிற விஷய்ங்களில் காரசாரமாக பேச வேண்டாம்.



**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

**அன்பு, பணிவு நிறைந்த செயலால், பிறர் மனம் கவரும், கடக இராசிக்காரர்களே!**

அன்புக்கு உரியவர்களிடம் ஆலோசனை பெறுவதால் நன்மை உருவாகும். வீடு வாகனத்தில் நம்பகக் குறைவானவர்களுக்கு இடம் தரவேண்டாம். பணியாளர்கள் அதிக பொறுப்புணர்வுடன் பணிபுரிவதால், ஒழுங்கு நடவடிக்கை வராமல் தவிர்க்கலாம். மாணவர்கள் முறையான பயிற்சியினால் மட்டுமே, கூடுதல் தரதேர்ச்சி பெற இயலும்.



**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

**சுய திறமையை நன்கு பயன்படுத்தி வெற்றி பெறும், சிம்ம இராசிக்காரர்களே!**

நம்பிக்கையுடன் செயல்பட்டு பணிகளில் கூடுதல் வெற்றி பெறுவீர்கள். புத்திரர் தகுதி, திறமை வளர்த்து படிப்பு, வேலை வாய்ப்பில் முன்னுரிமை பெறுவர். இல்லறத்துணையின் கூடுதல் அன்பு, பாசம் மனதிற்கு உற்சாகம் தரும். மாணவர்கள், நன்றாகப் படித்து ஆசிரியர், பெற்றோரின் வாழ்த்துக்களை பெறுவர்.



**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

**உழைப்பின் பயனை நன்கு அனுபவித்திடும், கன்னி இராசிக்காரர்களே!**

தாமதம் ஏற்படுத்திய பணிகளை, புதிய முயற்சியுடன் நிறைவேற்றுவது நல்லது. பேச்சு, செயலில் ஆரவாரம் தவிர்க்க வேண்டும். இல்லறத் துணை, சேமிப்பு பணத்தை குடும்ப செலவுக்கு உதவும் வகையில் தருவார். மாணவர்கள் அதிக முயற்சியுடன் படிப்பதால் மட்டுமே, சராசரி தேர்ச்சி விகிதம் கிடைக்கும்.



**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

**துன்பத்தில் துவளாமல், இலட்சியத்தை நோக்கி நடைபோடும், துலாம் இராசிக்காரர்களே!**

மனதில் இருந்த தயக்கம் விலகி தைரியம் வளரும். நண்பர், உறவினரின் வாழ்வியல் சூழ்நிலை உணர்ந்து பேசுவதால் மட்டுமே, நற்பெயரை பாதுகாக்க இயலும். உடல்நல ஆரோக்கியம் பலம் பெற, சத்தான உணவு உண்பது அவசியம். அரசு தொடர்பான உதவி பெற அனுகூலம் உண்டு. மாணவர்கள் நண்பரின் உதவியால் படிப்பில் நல்ல தேர்ச்சி விகிதம் காண்பர்.



**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

**அமைதியில் நாட்டமும், செயலில் உறுதியும் கொண்ட, விருச்சிக இராசிக்காரர்களே!**

உங்களின் தன்மான குணத்திற்கு சோதனை வரலாம். திட்டமிட்ட பணிகளை அதிக பொறுப்புணர்வுடன் நிறைவேற்றுவது நல்லது. எதிரி தன் சிரமங்களால், உங்களுக்கு இடையூறு செய்வதை நிறுத்துவர். மாணவர்கள் தகுந்த பயிற்சியினால் உரிய தேர்ச்சி விகிதம் பெறலாம்.



**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

**நல்ல குணநலன்களை ஏற்று நடந்திடும், தனுசு இராசிக்காரர்களே!**

கடந்த நாட்களில் உங்களை தவறாக விமர்சித்தவர், மனப்பூர்வமாக பாராட்டுகிற இனிய சூழ்நிலை உருவாகும். வாழ்வில் திட்டமிட்ட இலட்சியம் நிறைவேற உதவுகிற முக்கியஸ்தரை சந்திக்க வாய்ப்பு வரும். வாகன பயணத்தில் மித வேகம் பின்பற்றுவது அவசியம். குடும்ப பெண்கள் கணவரின் கூடுதல் அன்பு தாராள பணவசதி கிடைத்து மகிழ்ச்சிகர வாழ்வு நடத்துவர். மாணவர்கள் கவனமுடன் படித்து உயர்ந்த தேர்ச்சி விகிதம் பெறுவர்.



**உத்தராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்**

**வார்த்தைகளை நிதானித்து பேசி, நற்பெயர் பெறுகின்ற, மகர இராசிக்காரர்களே!**

உங்கள் செயல்களில், தற்காப்பு உணர்வு அதிகரிக்கும். பெற வேண்டிய நற்பலன்களை முழு அளவில் பெறுவீர்கள். இளைய சகோதரர், எதிர் பார்த்த உதவியை ஓரளவு தருவீர்கள். வீடு, வாகனத்தில் பராமரிப்பு பணி செய்து, கூடுதல் பயன்பாட்டு வசதி பெறுவீர்கள். மாணவர்கள் நன்றாக படித்து கூடுதல் மதிப்பெண் பெறுவர்.



**அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்**

**அடுத்தவரின் கருத்துக்கும் மரியாதை தருகின்ற, கும்ப இராசிக்காரர்களே!**

சமூகப் பணியில் ஓரளவு ஆர்வம் இருக்கும். வாகன பயணத்தில் மிதவேகமும், வீட்டிற்கு தகுந்த பாதுகாப்பும் பின்பற்றுவது நல்லது. நற்செயல்கள் இனிதாக நிறைவேற, இஷ்ட தெய்வ அருள் பலம் துணை நிற்கும். தொழில், வியாபாரத்தில் உருவாகிற இடையூறு, சரி செய்து உற்பத்தி, விற்பனை அளவை அதிகரிப்பீர்கள். மாணவர்கள் உரிய பயிற்சியினால் மட்டுமே திட்டமிட்ட தேர்ச்சி விகிதம் பெற இயலும்.



**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

**உறவினர்களிடம், அன்பு பாசம் அதிகம் கொண்ட, மீன இராசிக்காரர்களே!**

சிலர் சுய இலாபம் பெற, உங்களை புகழ்ந்து பேசுவர். அவர்களிடம் விலகுவதால், தேவையற்ற சிரமம் அணுகாமல் தவிர்க்கலாம். நண்பர்களிடம் ஆன்மீக கருத்துக்களை பேசி, மனதில், உற்சாகம் பெறுவீர்கள். இல்லறத்துணை அதிருப்தி கொள்ளாத அளவிற்கு பேசுவது நல்லது. பெண்கள், தங்க நகை இரவல் கொடுக்க,வாங்க வேண்டாம். மாணவர்கள், பெற்றோரின் வாழ்வியல் சூழ்நிலை உணர்ந்து நடப்பது நல்லது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் உலகம்

இலக்கம் 01இல் இருந்து 20 வரையிலான இலக்கங்களைத் தொடர்பு படுத்தி உருவத்தைக் கண்டு பிடியுங்கள்.






## சிறுவர் மர்மத் தொடர் 12

— அம்புலி

**தா**ம் மிகப்பெரிய ஆபத்தில் சிக்கப் போவதை அறியாதவர்களாய், ஒரு அசட்டுத் துணிச்சலோடு கானகத்தை விட்டு வெளியேறுவதற்கு இளவரசர்கள் இருவரும் வழிதேடத் தொடங்கினர். காட்டு விலங்குகள் தாக்கக் கூடும் என்ற முன்னெச்சரிக்கையில், தமது கைகளில் இருந்த வாளை எந்நேரமும் சுழற்றுவதற்குத் தயாரான நிலையில் காடு முழுவதும் சுற்றியலைந்தனர். எனினும் பயனேதும் இல்லை!

இந்திரவர்மனும், சந்திரவர்மனும் எவ்வளவு முயன்றும் கானகத்தைவிட்டு தப்பிச்செல்வதற்கான வழி ஏதும் புலப்படவில்லை. எந்த பாதையில் சென்றாலும் தாம் புறப்பட்ட இடத்திற்கே அவர்கள் மீண்டும் வந்து சேர்ந்த வண்ணமிருந்தனர். "தம்பி! இதென்ன விந்தை? இந்தக் கானகத்தை விட்டு வெளியேற ஒரு வழி கூட தென்படவில்லையே?" என்று சலிப்போடு கூறினான் சந்திரவர்மன்.

"அதுதான் நானும் யோசிக்கின்றேன். நடந்தவற்றை வைத்துப் பார்க்கும்போது நாம் ஏதோ ஒரு மாய சக்தியோடு போராடிக் கொண்டிருக்கிறோம் என்று தோன்றுகிறது அண்ணா!" என்று தன் ஊகத்தை வெளியிட்டான் இந்திரவர்மன்.


"தம்பி நீ சொல்வது சரியென்றே எனக்கும் படுகின்றது. எது வரினும் வரட்டும். நமக்கு எம் குருநாதரினதும், இறைவனதும் ஆசி இருக்கும் மட்டும் எந்த மாய சக்தியாலும் எம்மை ஒன்றும் செய்துவிட முடியாது என்று கூறிக்கொண்டே இந்திரவர்மன் சுற்றுமுற்றும் நோட்டமிட ஆரம்பித்தான்"

"என்றாலும் நாம் கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்" என்று கூறிவிட்டு, தன் வாளினை எடுத்து உயரத் தூக்கிப் பிடித்தான் சந்திரவர்மன்.

இளவரசர்கள் இருவரையும் ஒரு மரத்தடியில் மறைந்திருந்து பார்த்தபடி இருந்தார் மந்திரக் கிழவி!

(மந்திரக் கிழவி வருவாள்...)

# கும்பகர்ணன் 27




## மனிதனைப் பற்றிய சில சுவாரசிய தகவல்!

## - பொது அறிவு -

மனிதனைப் பற்றிய சில உண்மைகள்!!!

* இருமலின் வேகம் மணிக்கு 100 கிலோ மீட்டர்.
* ஒரு சிசுவின் கையில் ரேகைகள் 3ஆவது மாதத்திலிருந்து உருவாகின்றன.
* கை, கால்கள் நகங்களின் அடிப் பகுதியிலிருந்து அதன் மேற்பாகம் வரை வளர்வதற்கு 6 மாதங்கள் ஆகின்றன. கால் நகங்களைவிட கைவிரல் நகங்கள் வேகமாக வளர்கின்றன.
* ஒரு மனிதனுக்கு சரியாக தினமும் 40 முதல் 100 தலைமுடிகள் உதிர்ந்து விடுகின்றன.
* கம்யூட்டரில் சில மணி நேரங்கள் பணிபுரிந்து விட்டு பார்வையை சில நொடிகள் வெள்ளைநிற காகிதத்தில் செலுத்தினால் அந்தக் காகிதம் இளஞ்சிவப்பு நிறமாகத் தெரியும்.
* ஆண்களின் உடல் பாகத்தில் மிகவும் வளரக்கூடிய முடி, தாடியில் வளரும் முடிதான். ஏனென்றால் ஒருவர் தனது வாழ்நாளில் தாடியை எடுக்காவிட்டால்அது 30 அடி நீளம் வரை வளர்ந்து விடும்.

த. நிவேதினி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## துடிக்கும் ஆர்யா

"பாஸ் என்ற பாஸ்கரன்" படத்தில் நடித்ததில் இருந்தே ஆர்யாவும், நயன்தாராவும் நெருங்கிய நண்பர்களாகிவிட்டனர்.

இந்த நட்பு தற்போது 'ராஜா ராணி' படம் வரை தொடர்கிறது. ஆனால் இப்படியே இருந்தால், தனது மதிப்புக் கெட்டுவிடும் என்று நினைத்த நயன்தாரா ஆர்யாவுடன் வெளியே ஊர்சுற்றுவதை நிறுத்திவிட்டாராம். இதே போன்று ஆர்யாவின் படப்பிடிப்புத்தளத்துக்கும் அடிக்கடி வருவதையும் நிறுத்திவிட்டாராம். ஆனால் சில முக்கியமான நாட்களில் ஆர்யாவின் வீட்டுக்குச் சென்று வருகிறாராம்.

இந்த நிலையில் நயன்தாராவுக்கு ஏதாவது ஒன்று என்றால் துடிதுடித்துப் போகிறாராம் ஆர்யா. தனக்குப் படப்பிடிப்பு இருந்தாலும்கூட, இதோ வருகிறேன் என்று சொல்லிவிட்டு உடனடியாக நயன்தாராவைப் பார்க்கச் சென்று விடுகிறாராம்.

## மெலியும் நமீதா

ஒரு காலத்தில் தமிழ் இரசிகர்களின் தூக்கத்தைத் தன் கவர்ச்சி மூலம் கெடுத்தவர் நமீதா.

ஆனால் இப்போதோ தமிழில் வாய்ப்புகளின்றித்தவிக்கிறார். ஆயினும் தொடர்ந்து தமிழ் நாட்டிலேயே முகாமிட்டுள்ளார் நமீதா. அத்துடன் சினிமாவில் நடிப்பதற்கான முயற்சிகளையும் செய்து வந்தார்.

இந்த நிலையில் அவரது முயற்சியின் பலனாக 'ஏய்' படத்தின் இரண்டாம் பாகத்தில் சரத்குமாருடன் இணைந்து நடிக்க உள்ளார். ஆயினும் 'ஏய்' படத்தின் முதல்ப் பாகத்தைப் போல இதில் அவருக்குக் கதாநாயகி வேடம். முதல்ப் பாகம் வந்தபோது நமீதா இப்போதிருப்பதைப் போல உடல் எடையில் அரைவாசியாகத்தான் இருந்தார். ஆகவே எப்படியாவது எடையைக் குறைக்க வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டுள்ளாராம்.

மேலும் தனது அபிமான இயக்குநர்களைச் சந்தித்து படவாய்ப்புகள் குறித்து கேட்டு வருகிறாராம்.

அவர்களும், உடல் எடையைக் குறைத்துக் கொண்டு முன்னரைப் போல கட்டழகுடன் வந்தால் வாய்ப்புத் தருவதாகக் கூறியிருக்கிறார்கள்.

இதனால் உடற்பயிற்சி நிலையம், உணவுக்கட்டுப்பாடு என்று படுவேகமாகத் தனது எடையைக் குறைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.



## பயந்தாங்கொள்ளி அல்ல

இன்னமும் பெயரிடப்படாத, விஷ்ணுவர்த்தனின் இயக்கத்தில் உருவாகிவரும் அஜீத்தின் '53ஆவது' படத்தில் ஆர்யாவுக்கு ஜோடியாக நடித்துள்ளார் டாப்ஸி. ஹிந்தியிலும் ஒரு படத்தில் நடித்து வரும் அவர் அடுத்து தமிழில் லோரன்ஸ் இயக்கும் 'முனி-3 கங்கா' படத்திலும் நடிக்கிறார். இதில் முக்கியத்துவம் வாய்ந்த கங்கா வேடமே டாப்ஸிக்குத்தான். அதனால் பிரதான நாயகியாக முதன்முதலாக நடிக்கப்போகிற சந்தோசத்தில் இருக்கிறார் டாப்ஸி.

ஆனால், இந்த நேரத்தில் 'பேய்' படத்தில் நடிக்கும் டாப்ஸி பேய் என்று சொன்னாலே அலறி விடுவார். அத்தனை பெரிய பயந்தாங்கொள்ளி என்று செய்திகள் வெளியாகின. ஆனால் இந்தச் செய்தி டாப்ஸியின் காதுகளுக்குச் சென்றபோது விழுந்து விழுந்து சிரித்தாராம்.

அத்தோடு, 'பேய்' என்று சொன்னால் யாருக்குத்தான் பயம் வராது. ஆனால் இவர்கள் கதையடித்திருப்பது போல் எல்லாம் நான் ரொம்பப் பயந்தவள் அல்ல. படிக்கிற காலத்தில் இருந்தே அமானுஷ்ய கதைகளை நான் விரும்பிப் படிப்பேன். அதனால் அப்படியொரு கதையில் நடிக்கும் வாய்ப்புக் கிடைத்தபோது ரொம்ப சந்தோசப்பட்டேன். அந்த அளவுக்குப் பயப்படும் பாத்திரம் என்றால் இரத்தத்தை உறைய வைக்கும் அளவுக்கு உள்ள ஒரு கதையில் நான் நடிக்கவே சம்மதித்திருக்க மாட்டேனே என்றும் கூறியுள்ளார் டாப்ஸி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கொழு கொழு ஹன்ஸிகா

தன் கொழுகொழு அழகால் தமிழ் சினிமாவில் வலம் வந்த ஹன்ஸிகாவை தமிழ் இரசிகர்கள் சின்னக் குஷ்பு என்று கொண்டாட ஆரம்பித்தார்கள். ஆனாலும் தடாலடியாக ஹன்ஸிகா தன் உடல் எடையைக் குறைத்து மெல்லிடை அழகியாக மாற முயன்றார். அண்மையில் வெளியான 'சிங்கம் -2' படத்தில் பழைய ஹன்ஸிகாவைக் காணவில்லை. ஒட்டிய கன்னங்கள் கொண்ட மெல்லிய ஹன்ஸிகாதான் படம் முழுதும். அந்தப்படம் வெற்றி பெற்றாலும் ஹன்ஸிகாவை இரசிகர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. சிம்ரனுக்கு மெல்லிடைதான் அழகு. ஆனால் உங்களுக்குக் கொழுகொழு உடம்புதான் அழகு என ஹன்சிகாவின் நண்பர்கள் ஆலோசனை சொல்ல, இப்போது உணவுவகைகளை ஒரு பிடிபிடித்து மீண்டும் கொழுகொழு நாயகியாக மாற முயல்கிறார் அவர்.



## ஸ்ரேயாவின் கவலை

தமிழில் ஸ்ரேயாவுக்கு கைவசம் எந்தவொரு படமும் இல்லை. இதனால் வேற்று மொழிப் படங்களையே அவர் நம்பியிருக்கிறார். இந்த நிலையில் தெலுங்கில் நாகார்ஜுனா, நாகேஸ்வரராவ், நாகசைதன்யா மூவரும் நடிக்கும் படத்தில் நடித்து வருகிறார் ஸ்ரேயா.

நாகார்ஜுனாவுக்கு ஸ்ரேயா ஜோடி. நாகசைதன்யாவுக்கு சமந்தா ஜோடி. இளம் நடிகரான நாகசைதன்யாவுக்கு ஜோடியாக இல்லாமல் நாகார்ஜுனவுக்கு தன்னை ஜோடியாகப் போட்டதில் உள்ளூர வருத்தத்தில் இருக்கிறார் ஸ்ரேயா.

## வரப்போகிறது 'ஐ'



விக்ரமைவைத்து ஷங்கர் இயக்கிவரும் 'ஐ' படத்தின் படப்பிடிப்பு 90 சதவிகிதம் முடிவடைந்துவிட்டது. இந்தப் படத்தில் விக்ரமுக்கு மூன்று வேடங்கள். தமிழிலும் தெலுங்கிலும் ஆயுத பூஜை அன்று படம் வெளியாகிறது. தெலுங்கில் மனோகரடு என்ற பெயரில் வெளியாகிறது 'ஐ'!



## பெய்யுமா விருது மழை?

வித்யா பாலன் நடித்த 'கஹானி' படத்தின் தெலுங்கு மொழிமாற்றமான அனாமிகாவில் நடித்ததற்காக நந்தி விருது கிடைக்கும் எனச் சொல்லி வருகிறார் நயன்தாரா. தசரா அன்று தமிழ்-தெலுங்கில் ஒரே நேரத்தில் வெளியாகிறது 'அனாமிகா' இந்தப் படத்தில் எப்போதுமில்லாத வகையில் தன் நடிப்புத்திறன் முழுதையும் நயன் வெளிப்படுத்தியுள்ளார். ஏற்கனவே 'கஹானி' படம் வித்யாபாலனுக்கு விருது மழையைச் பெய்யச் செய்திருந்தது. அதைப்போல தனக்கும் இந்தப்படம் நிறைய விருதுகளை அள்ளித்தரும் என்று நயன்தாரா நம்புகிறார்.

## இணைந்த கரங்கள்

கடந்த ஐந்து வருடங்களாக எதிரிகள் போல் இருந்து வந்த ஹிந்திப் படவுலக சூப்பர் ஸ்டார்களான சல்மான் கானும் ஷாருக்கானும் இப்போது ஒரு விருந்து நிகழ்ச்சி மூலம் மீண்டும் நண்பர்களாகி உள்ளனர். ஷாருக்கானும் சல்மான்கானும் நல்ல நண்பர்களாகவே ஆரம்பத்தில் இருந்தனர். ஆயினும் தமக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் இவர்கள் ஒரு கட்டத்தில் பிரிந்தனர். கடந்த சில ஆண்டுகளாகவே இருவரும்



பேசிக்கொள்வதில்லை. நேருக்கு நேர் சந்தித்தால்க் கூட முகத்தை திருப்பிக் கொண்டு செல்வார்கள்.

இந்த நிலையில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சித்திக் என்பவர் மும்பையில் இப்தார் நோன்பு விருந்து அளித்தார். இதில் பல்வேறு அரசியல்த் தலைவர்கள், திரை நட்சத்திரங்கள், வி.ஐ.பி.க்கள் பிரமுகர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதில் சல்மான்கானும் ஷாருக்கானும் கலந்து கொண்டுள்ளனர். இருவரும் ஒருவரையொருவர் பார்த்ததும் தங்களுக்குள் இருந்த பகையை மறந்து கை குலுக்கிக் கொண்டனர். பின்னர் இருவரும் கட்டிப்பிடித்துக் கொண்டனர். இதன்மூலம் அவர்கள் மீண்டும் நண்பர்களாகி அளவளாவி மகிழ்ந்துள்ளனர்.



## வெளிவராத பாடல்


"சொன்னா புரியாது' படத்தில் மிர்ச்சி சிவாவுடன் வசுந்தரா இணைந்து நடித்துள்ளார்.

இது குறித்து இயக்குநர் கிருஷ்ணன் ஜெயராஜ் கூறுகையில், இந்தப்படத்தில் வரும் ஹிந்திப் பாடலை நாயகன் சிவாவும், நாயகி வசுந்தராவும் இணைந்து பாடியுள்ளார்கள். படத்திற்கு இந்தப்பாடல் மிக முக்கிய பங்களிப்பை வழங்கும். இதனால் பாடல் இசைத்தட்டில் இன்னமும் இந்தக் ஹிந்திப்பாடலை வெளியிடாமல் படத்தோடு சேர்த்தே வெளியிடவுள்ளோம்.

இந்தப்படத்தில் சிவா, ஆங்கிலப்படத்துக்கு பின்னணிக் குரல் கொடுக்கும் கலைஞராக வருகிறார்.

திருமணத்தை வெறுத்து, தனிமையில் இருக்கும் நாயகன், நாயகியை சந்தித்த பின் என்ன நடக்கிறது என்பது தான் படத்தின் கதை.

சென்னை, கோபி செட்டிப்பாளையம் ஆகிய இடங்களில் பெரும்பாலான காட்சிகளை படமாக்கியிருக்கிறோம். சுவாரஸ்யமான கதையம்சத்துடன், வேடிக்கையான கதாபாத்திரங்களை வைத்து பொழுதுபோக்கு படத்தை எடுத்துள்ளோம் என்று தெரிவித்துள்ளார்.



## வில்லனாகும் விஜய்சேதுபதி

விஜய் சேதுபதி 'ரம்மி' படத்தில் ஜோசப் என்ற ஏழைப் பையனாக நடிக்கிறார். 1987இல் நடக்கும் கதையைக் கொண்டது 'ரம்மி' திரைப்படம். இதில் முதன்முதலாக ஒரு காதல் பாட்டுக்கு நாயகியுடன் சேர்ந்து ஆடியிருக்கிறார் சேதுபதி.

இதேவேளை 'பீட்சா' பட இயக்குநர் கார்த்திக் சுப்புராஜின் அடுத்த படமான 'ஜிகர்தண்டா'வில் வில்லனாக நடிக்கவுள்ளார் விஜய் சேதுபதி. இந்தப்படத்தின் நாயகனாக சித்தார்த்தும் நாயகியாக லட்சுமி மேனனும் நடிக்கவிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூனைக்கு மணிகட்டுவது யார்..?

கடந்த வாரம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கும் பெண்கள் விடுதிக்கும் இடையிலுள்ள ரயில்வீதியில் சம்பவம் ஒன்று பதிவாகியிருந்தது. விஞ்ஞானபீடத்திற்கும் பெண்கள் விடுதிக்கும் இடையிலுள்ள அவ்வீதியில் ஒரு சிறு வைரவர் கோயிலும் காணப்படுகின்றது. பெண்; மாணவிகளும் அவ்வீதியால் நடந்துவந்த ஆண் மாணவர்களும் ஏதோவொரு விடயம் தொடர்பாக பேசிக்கொண்டிருந்தார்கள். பேசிவிட்டு அவர்கள் அப்பால் நகர்ந்த போது பெண் மாணவிகள் ஆண் மாணவர்களை கூப்பிட்டு ஏதோ கூறியதாகவும் அவர்கள் யாரோ ஒரு நபரை துரத்திச்சென்றதாகவும் கூறப்படுகிறது.

என்ன நடந்தது என்று மாணவிகளிடம் கேட்டபோது தாம் பேசிக்கொண்டிருந்த போது குறிப்பிட்ட அந்த நபர் கோயிலின் மறைவில் நின்றதாகவும் தாம் இரும்பு பொறுக்குகிறார் என்று நினைத்ததாகவும் கூறினர். ஆண்மாணவர்கள் சென்றபின் மறைவிலிருந்து வெளிப்பட்ட அந்த நபர் மாணவிகளை அழைத்து வேண்டத்தகாத சமிக்ஞை செய்திருக்கிறார். உடனே மாணவிகள் மாணவர்களை அழைத்ததும் அவர் சைக்கிளை எடுத்துக்கொண்டு புறப்பட்டிருக்கிறார். சம்பவத்தை அறிந்த மாணவர்கள் குறிப்பிட்ட நபரை தொடர்ந்து தேடிப்பிடித்து தகுந்த மரியாதையும் கொடுத்திருக்கிறார்கள். மாணவிகள் தரப்பில் இது தொடர்பில் கூறப்பட்டதாவது இது போன்ற சம்பவங்கள் மிகநீண்ட காலமாகவே தொடர்வதாகவும் ஆனால் யாரும் அது தொடர்பில் கவனத்தில் கொள்வதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இங்கு நாம் ஒரு விடயத்தை கவனத்தில் கொள்ளவேண்டும். யாழ்ப்பாண நகரம் இப்போது அதே முன்னைய பழம்பெரும் பாதுகாப்போடும் பண்பாட்டு கலாசாரப் பாரம்பரியங்களோடும் இருக்கின்ற நகரமல்ல. விரும்பியோ விரும்பாமலோ பல மாற்றங்களிற்கு உட் பட்டிருக்கிறது அது. எல்லா சந்தர்ப்பங்களிலும் உதவிக்கு யாரும் வருவார்கள் என்றோ அல்லது கண்டும் காணாததுமாய் இருந்துவிட்டுப் போவோமென்றோ நினைப்பதும் தவறு.

ஆணைப்போன்றே பெண்ணும் வெளி உலகம் நோக்கி பயணிக்கின்ற இன்றைய உலகில் பாதுகாப்பு என்பது எல்லோரிற்கும் வேண்டிய ஒன்றே. எல்லாச் சந்தர்ப்பத்திலும் ஆண் துணை அயலிலே இருக்குமென்றும் எண்ண முடியாது. இங்கு சகோதரிகள் சிந்திக்க வேண்டியது ஒன்றுள்ளது.

உங்களை தற்காத்துக்கொள்ள அடுத்தவரை நீங்கள் நம்பியிருப்பது ஏன்...? தற்காப்புக்கலை என்பது தனியே ஆண்களிற்கு மட்டும் உரியது என்றோ அல்லது பாதுகாப்பளித்தல் என்பது ஆண்களின் வேலை என்றோ நீங்கள் நினைப்பது ஏன்...? உங்களிற்கு தற்காப்புக்கலை தெரிந்திருந்தால் மேற்சொன்னமாதிரியான சந்தர்ப்பங்களில் மற்றவர்களை நாடவேண்டிய சூழ்நிலையோ அல்லது நீண்டகாலத்திற்கு இவற்றை சகித்துக்கொள்ள வேண்டிய தேவையோ இருக்காதே. நீங்கள் முன்பின் அறியாத ஒரு இடத்தில் இன்னொரு ஆணை இத்தகைய சந்தர்ப்பங்களில் உதவிக்கு அழைப்பீர்களாயின் சில தருணங்களில் சட்டியிலிருந்து தப்பி அடுப்பிற்குள் விழுந்த கதையாகிவிடும்.

கொஞ்சம் சிந்தியுங்கள். மாற்றம் என்ற ஒன்றே நிரந்தரமானது. நடப்பு உலகத்தின் குணங்களிற்கேற்ப அதிலிருந்து உங்களை தக்கவைத்துக் கொள்ள நீங்களும் கொஞ்சம் சாதகமான மாற்றங்களிற்கு பொருத்தப் பாடடையவேண்டிய தேவை காலத்தின் கட்டாயமாகும்.

தொகுப்பு:
ஸ்ருதி



# கருகரு கூந்தல் வேண்டுமா..?

பல பெண்களிற்கு கூந்தலில் இருக்கின்ற பிரியம் அலாதியானது. பெண்களிற்கு மட்டுமல்ல ஆண்களிற்கும் கூட மிக நீளமான கூந்தல் உள்ள பெண்களை தான் அதிகம் பிடிக்கிறது என்று ஆய்வொன்று கூறுகிறது. கூந்தல் என்பது பெண்களைப் பொறுத்தவரை அழகு தரும் ஒரு விடயம் தான். அத்தகைய கூந்தலை மிகச் சரியாக பாதுகாத்துக்கொள்ள உங்களிற்கு சில தகவல்கள்.


* தலைக்கு சிகைக்காய் வைத்து நீராடுபவர்கள் சிகைக்காயை சோற்றுச் சாதத்தில் சேர்த்து தலைக்கு வைத்து நீராடினால் முடி உதிர்வது குறையும்.
* பொடுகுத்தொல்லை அதிகமாக இருக்கிறதே என்ன செய்வது என்று தலையைப் போட்டு பிய்த்துக் கொள்பவர்கள் நல்லெண்ணையில் எலுமிச்சஞ் சாற்றைக் கலந்து அரைமணி நேரம் ஊறவிட்டு தலைக்கு தேய்த்துக் குளித்தால் பொடுகுத் தொல்லை குறையும்.
* வாரத்திற்கு ஒருமுறை தயிரை தலைக்கு தேய்த்து நீராடலாம். இதனால் உடல் உஷ்ணம் நீங்கும்.
* செம்பருத்தி இலையை சாறாக்கி தலைக்குத் தேய்த்து நீராடினால் முடி வளரும்.
* செம்பருத்தியை நல்லெண்ணையில் போட்டுக் காய்ச்சி வடிகட்டி தலைமுடிக்கு வைத்து வர முடி உதிர்தல் குறையும்.
* வாரத்திற்கு ஒரு தடவையாவது தலையில் தேங்காய்ப்பாலை வைத்து ஊறவைத்து நீராடுவதால் உடலிற்கு குளிர்மை ஏற்படுவதோடு கூந்தலும் கறுப்பாக வளரும்.

❄❄❄



## அம்மா

நீ...
கண்டது பிரசவ வலியல்ல
என்னைப் புறந்தள்ளி
பிரிப்பதற்காய்
பெற்றுக் கொண்ட
தண்டனை.




# பெண்களாகப் பேசும் பாதிவானம்!


பெண்களின் நிலையை எடுத்துக்காட்டவும் அவர்களின் உரிமைகள் பற்றியும் விளக்குகின்ற ஒரு அழகான புத்தகம் பாதிவானம் (HALF THE SKY). செரில்வுடன் மற்றும் கிறிஸ்ரோப் உடைய ஒரு மிக உன்னதமான முயற்சி. புத்தகத்தின் ஆரம்பப் பக்கங்கள் மூன்றாம் உலக நாடுகளில் கணவன் மனைவி மற்றும் குழந்தைகள் தொடர்பின் உண்மை நிலையை வெளிப்படுத்தியபடி ஆரம்பிக்கின்றது. இந்த அரிய முயற்சியின் பலனாக விருதுகளையும் பரிசில்களையும் வென்றிருகின்றது இப்புத்தகம்.

சமூகத்தில் பெண்களிற்கு இருக்கின்ற பிரச்சினைகள் அவளுடைய பலதரப்பட்ட வகிபங்குகள் சம்பளமற்ற வீட்டு வேலைகள் மட்டுமன்றி அவர்கள் பாலியல் ரீதியாக அவர்களிற்கு இருக்கக் கூடிய அல்லது ஏற்படக் கூடிய பிரச்சினைகள் தொடர்பாகவும் மிகவும் விலாவாரியாகவும் தெளிவாகவும் குறிப்பிடுகிறது புத்தகம். மதம் சார்ந்த கட்டுப்பாடுகள் மரபுகள் போன்றவையும் இங்கு அதிகம் பேசப்பட்டிருக்கின்றது.

தலித்தியப் பெண்களின் நிலை அவர்களுக்கு நேர்கின்ற அவலம் பற்றியும் இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது. குறிப்பாக எழுத்தாளர்கள் இருவரும் வெவ்வேறு தளத்தைசேர்ந்தவர்கள் என்பதாலும் சில விடயங்களை ஆழமாக அலசியிருக்கிறார்கள். பெண்ணியம் சார்ந்த உண்மைப் பிரச்சினைகளை அறிய விரும்புபவர்களிற்கு பாதிவானம் மிகச் சிறந்த களஞ்சியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதை நினைவில் கொள்ளுங்கள்



இன்னும் அதிக அளவு எப்படி பயன் உள்ள முறையில் பணியாற்றுவது என்று அதிபரிடம் கேளுங்கள். அவ்வாறு கேட்பதன் வாயிலாக நீங்கள் உங்கள் அதிபரின் சாதகமான கவனத்தைக் கவர்ந்திட இயலும்.

அதிக அளவு பயன் மிக்கவராக விளங்குவதன் வாயிலாகத்தான் பதவி உயர்வு பெற முடியும்.

இன்னும் அதிக அளவு எப்படி பயன் உள்ள முறையில் பணியாற்றுவது என்று அதிபரிடம் கேளுங்கள். அவ்வாறு கேட்பதன் வாயிலாக நீங்கள் உங்கள் அதிபரின் சாதகமான கவனத்தைக் கவர்ந்திட இயலும்.

மேலும்பயன்மிக்கவராகஉங்களை மாற்றிக் கொள்ள அல்லது ஆக்கிக் கொள்ள மூன்று வழிகள் - வெற்றிக்கான நிருபிக்கப்பட்ட மூன்று வழிகள் உள்ளன.

**<u>அவை வருமாறு</u>**

1. பொருள்களை மேம்படுத்துங்கள்.
2. செயல்முறைகளை மேம்படுத்துங்கள்.
3. உங்களை நீங்களே மேம்படுத்திக் கொள்ளுங்கள்.

மேம்பாட்டுத் திட்டங்களை ஊக்கப்படுத்தி அதற்கான வெகுமதிகளை வழங்கும் கம்பெனியில்- அந்தக் கம்பெனியின் முன்னேற்றத்துக்கு வளர்ச்சிக்கு நீங்கள் மேலும் பயன் மிக்கவராக ஆகிவிட வேண்டும் அதற்குமேலே சொன்ன மூன்று செயல் திட்டங் களையும் நிறைவேற்ற வேண்டும். அவற்றைக் கடைப் பிடித்தால் நீங்களே சீக்கிரம் செல்வந்தர் ஆகிவிடுவீர்கள்.

சிருஷ்டிப்பதேசெல்வம்சம்பாதிக்க ஒரு பொற்பாதை

நீங்கள்உருவாக்கும்திறன்அற்றவராக இருந்தால் (மேம்பாட்டுக்கான யோசனைகளை உங்களால் வழங்க முடியவில்லையானால்) உங்களைத் தீய்ந்து போன மின்சாரபல்புக்கு சமமாகத்தான்உங்களுடையநிர்வாகம் மதிக்கும். தீயந்து போன பல்புக்கு என்ன மரியாதை கிடைக்கும் என்பது உங்களுக்குத் தெரியும் அல்லவா? இவ்வாறு சிறந்த நிர்வாக ஆலோசகர் ஒருவர் கூறி இருக்கிறார்.

வருவாயை அதிகரிக்கச் செய்யும் எல்லாவழிகளையும் சோதித்துப் பார்த்தால் புதிதாக உருவாக்குவது என்கிற தன்மைதான் அதிக வருவாய் கொடுக்கும்.

தொழில் துறையில் உள்ள திறமையாளர்களின் மனப்போக்குப் பற்றி ஆராய்ந்திடும் ஒரு அமெரிக்க சங்கம் இருக்கிறது. அது சில ஆராய்ச்சிகளை நடத்தியது. அதிக சம்பளம் வாங்கும் உயர் அதிகாரிகள் குறைந்த சம்பளம் வாங்கும் கீழ் மட்ட அலுவலர்கள் - ஆகிய இருதரப்பினர் விஷயத்திலும் ஒரே அளவு கோல் கொண்ட பரிசோதனையை அந்தச் சங்கம் மேற்கொண்டது. இந்தப் பரிசோதனை அவர்களுடைய அறிவாற்றல் திறமை இவற்றைப் பற்றியதாகும் நான்கு வகையான முனைப்புகள் பற்றிப் பரிசோதனை நடத்தப்பட்டதில் உயர்மட்ட -கீழ்மட்ட அலுவலர்கள் மூன்று பரிசோதனைகளில் சம அளவு திறமை பெற்றிருந்தனர். என்பதைக் கண்டு பிடிக்க முடிந்தது. ஆனால் சிருஷ்டித்தல் உருவாக்குதல் என்கிற தன்மையில் அதிக சம்பளம் பெறும் உயர் அதிகாரிகள் பெருமளவு அதிக ஆற்றல் பெற்று மேம்பட்ட நிலையில் இருந்தனர். சிருஷ்டிப்பது - உருவாக்குவது- என்பதில் உயர் அதிகாரிகள் அதிக ஆற்றல் பெற்று இருந்த காரணத்தால் அவர்கள் அதிக ஊதியம் பெற்றனர்.

புதிய யோசனைகளைப் பற்றி சிந்தித்தால் அது உங்களுக்குப் பணத்தைத் தேடித்தரும்.

யோசனை கார்ப்ரேஷன்களுடைய அதிபர்கள் சொல்வதாவது தொழிலாளர்களிடமிருந்து வருகின்ற எல்லா யோசனைகளுமே அதிக செலவு ஏற்படுத்துவதாக இருக்கின்றன. உற்பத்திச் செலவைக் குறைக்கும் வகையில் - பணத்தைச் சேமிக்கும் வகையில் - யார் யோசனை சொன்னாலும் அவ்வாறு கூறுகிற தொழிலாளர்களுக்கு பதவி உயர்வு கொடுக்க நிச்சயம் தயார். இவ்வாறு அவர்கள் சொல்கிறார்கள்.

உற்பத்திச் செலவைக் குறைப்பது. பணத்தை சேமிக்கும் வழிகளைச் சொல்வது இவற்றோடு மேம் பாட்டுத் திட்டங்கள் அடங்கி விடுவதல்ல. இவற்றோடு மேம் பாட்டுத் திட்டங்கள் அடங்கி விடுவதல்ல. செலவு குறைப்பு பணம் சேமிப்பு இவை மட்டுமே மேம்பாடு ஆகிவிடாது. என்றாலும் அவை பற்றிய யோசனைகளையே அதிபர்கள் அதிகம் விரும்புகிறார்கள். என்றாலும் பின்னால் தரப்பட்டுள்ள எந்த ஒரு அம்சத்திலும் ஒரு கம்பெனியை வளர்ப்பதற்கு - உயர்வதற்கு ஆன திட்டங்களை- யோசனைகளை- நீங்கள் சொன்னால் அதுவே செல்வம் கொழிக்க வைக்கும் பொற்பாதையாகும்.

1. உற்பத்திச் செலவைக் குறைப்பது.
2. பணத்தைச் சேமிப்பது.
3. விற்பனையை அதிகரிப்பது.
4. உற்பத்தியை அதிகரிப்பதுத
5. லாபத்தை அதிகரிப்பது.

இது போல இன்னும் ஆயிரம் அம்சங்கள் இருக்கின்றன. தொழில் வர்த்தகம் மற்றும் உள்துறைகளில் ஒவ்வொரு கட்டத்திலும் அவசரமாகத் தேவைப்படுகிற அதற்கு இந்த முழுப்புத்தகமும் போதாது அவ்வளவு பெரிய பட்டியலைத் கொடக்கலாம் இவ்வாறாக மேம்பாட்டுக்குரிய ஒவ்வொரு- ஊதிய உயர்வை மற்றும் மதிப்புள்ள வெகுமதிகளைப்பெற்றுக்கொடுக்கும். ஆக சிருஷ்டித்தல் - உருவாக்குதல் என்பதே செல்வம் கொழிக்கும் அதில் நீங்கள் சென்றால் சீக்கிரம் செல்வந்தராகி விடுவீர்கள்.

*(கேள்விகள் அடுத்த வாரமும்)*

சுடர் ஒளி வாசகர்களே!



குடத்தில் இட்ட விளக்காக உங்களுக்குள் மறைந்து கிடக்கும் படைப்புத் திறன்களைக் குன்றின் மேல் தீபமாக்கிட சுடர் ஒளி காத்திருக்கிறது.

சிறுகதை, கவிதை, கட்டுரை, துணுக்குகள், எதுவானாலும் அனுப்பிவையுங்கள். தரமானவை பிரசுரிக்கப்படும்.

படைப்புக்களை அனுப்பவேண்டிய முகவரி:

சுடர் ஒளி,
இல.361
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “அப்படிக் கொத்த றெஸ்ற் பெக்ற்றான ஆள்!”



பம்பல் பரமசிவம்

> “முறுக்கை வாங்கிக் கொண்டு வந்து என்ரை மேசை கதிரையிலை இருந்தால், பக்கத்திலை இருக்கிற மற்றவர்கள் “எப்படி அடி?” “எப்படி முறுக்கு?” புளிக்குதோ? இனிக்குதோ”....... என்று கிண்டல் கேள்வி.

படிக்கிற காலத்திலையும் அப்படி இப்பவும் அப்படித் தான்......... சில பேர் எரிச்சல் வாற மாதிரி நடந்து கொள்ளுவினம்.

படிக்கிற காலத்திலை, வாத்தியார் கூப்பிட்டு காதிலை முறுக்குவார்; அல்லது பிரம்பாலை நாலு போடு போடுவார்..... அது ஒண்டும் பெரிதாக வேதனை இல்லை. ஆனால் முறுக்கை வாங்கிக் கொண்டு வந்து என்ரை மேசை கதிரையிலை இருந்தால், பக்கத்திலை இருக்கிற மற்றவர்கள் “எப்படி அடி?”

“எப்படி முறுக்கு?” புளிக்குதோ? இனிக்குதோ”....... என்று ஒரு கிண்டல் கேள்வி.

ஆத்திரம் பத்திக் கொண்டு வரும் ஆனாலும் பேசாமல் இருந்திடுவன். இல்லாட்டில் இன்னுமொருக்கால் முறுக்கு- அல்லது அடிவாங்க வேண்டிவந்திடும்.

படிக்கிற காலத்திலைதான் அப்படியெண்டால்...... இப்பவும் அதேதொல்லை.

இங்கை, எங்கடை வீட்டுப் பக்கம் காதைக் கொடுத்துக் கொண்டு இருக்கிறது.........

ஏதாவது வீட்டிலை பிரச்சினை எண்டால் உடனை ஒரு விசாரணை வேறையார்? எங்கடை அவவின்ரை சிறிய தயார் தாழப்பூச்சித்தியின்ரை அவர்தான்.

முந்தியும் உங்களுக்குச் சொல்லியிருக்கிறன். சிறிய தயார் எண்டால் என்ரை மனுசியின்ரை தாயின்ரை தங்கச்சியார். சிறிய தயார் எண்டாலும் ரெண்டு பேரும் ஒரே வயசுக்காறர்.... அதாலை ‘பிறண்ஸ்’ மாதிரியே பழகிக் கொள்ளுவினம்.

சிறிய தயாற்ரை- தாழம்பூச் சித்தியின்ரை அவர் சித்தப்பா என்ரை மனுசி சித்தப்பா எண்டு கூப்பிடுகிற படியாலை நானும் ‘சித்தப்பா’ எண்டு தான் கூப்பிடுறனான் அவை ‘பிறண்ட்ஸ்’ மாதிரி நாங்களும் மாமன்- மருமேனெண்டில்லாமல் பிறண்ட்ஸ் மாதிரித்தான்.

அதுவும் மில்லேனியம் றெஸ்ற்ரோறன்ற்றுக்குப் போனால்

போகேக்கை மாமன்- மருமகன் தான்

உரிய கௌரவம் கொடுக்க வேணு மல்லே..... கொஞ்ச நேரத்திலை மச்சானும் மச்சானும் மாதிரி அப்படியே ஐக்கியமாய்ப் போய் விடுவம். ஆளுக்கு ஆள் ஒரு கால் போட்ட ஊற்றின உடனை அப்படியே உறவு பலப்பட்டுப்போகும். ‘மில்லேனியத்திலை’ எண்டாலும் சரி வேறை எங்கை எண்டாலும் சரி காசு கொடுக் கிறது அவர்தான். போத்திலுக்கும் ‘ரேஸ்ற்’றுக்கும் நான் காசு கொடுத்தால்- ‘பே’ பண்ணினால் அந்தாளுக்குக் கௌரவமில்லை. அதாலை அப்பிடியான ‘பே’- ‘pay’ வேலையள் நான் செய்யிறதில்லை.

உப்பிடித்தான் நான் என்ரை பவரைக் காட்ட இழுத்துவிட்டன். ஒரு ஆயிரம் ரூபா. அந்தாளுக்கெல்லோ கோபம் வந்திட்டுது. அங்கை பாரில் வைச்சு ‘அடியடா புடியடா’ எண்டு கொண்டு நிண்டிச்சுது.

என்ரை பிள்ளையள் எத்தினை வெளிநாட்டிலநிக்குதுகள் தெரியுமோ? நான் என்ன உங்களை மாதிரி உத்தியோகம் பார்க்கிற ஆளே?

‘இருபது, இருபத்தைந்தாம் திகதி ஆயிரம் ருபாவை’ எடுத்து விசுக்கிவியள்..... பிறகு ‘எம்ரி’ பொக்கற் தான்...... நான் அப்படிப்பட்ட ஆளில்லை..... எந்த நாளும் ‘பொய்க்கற்’றில காசு இருக்கும். அப்படிக் கொத்த ஒரு ‘றெஸ் பெக்ற்’ ஆன ஆள் நான்.... எத்தினை பிள்ளையள் வெளி நாட்டில் இருக்குதுகள் தெரியுமோ? என்று தொடங்கி விட்டார் சித்தப்பா- அது தான் என்ரை மாமன்.

அதுக்குப் பிறகு ஏன் வீண் சோலியை யெண்டு நான் ‘பே’ பண்ண முன்னுக்கு நிக்கிறதில்லை. பின்னேரக்கையாக அவர் பெண்சாதியோடை சண்டைபிடிச்சுக் கொண்டு சைக்கிளை எடுத்துக் கொண்டு போகத் தொடங்கினால் எனக்குத் தெரிஞ்சுபோம்.... ‘ஒ...ஓ மாமா மில்லேனியத்துக்குப் போறார். அல்லது நாச்சியார் கோயிலடிக்குப் போறார்..... எண்டு தெரிஞ்சிடும். நானும் சயிக்கிளை எடுத்துக் கொண்டு என்ரை பாட்டுக்குப் போய் குடிக்கிற மாதிரி றெஸ்றோறன்ருக்குள்ளை நுழைஞ்சால் ஒரு மூலையிலை முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு இருந்து ‘மருயோன்’ இஞ்சை வா..... என்ரை பிள்ளையள் எத்தினை வெளிநாட்டில இருக்குதுகள் தெரியுமோ?..... எந்த நேரமும் பொய்க்கற்றுக்குள்ளை ஆயிரம் ரெண்டாயிரம் எண்டு இருக்கும்;...... அப்படிக்கொத்த ஒரு ‘றெஸ்ற்பெக்ற்றான’ ஆள் நான்... என்ரை காசிலை தான் நீ குடிக்க வேணும்.... உங்களை மாதிரி அரசாங்க உத்தியோகம் பார்க்கிற ஆள் நானில்லை- இருபது இருபத்தைஞ்சாம் திகதி என்றில்லாமல் மாதம் முப்பது நாளும் ஒரு ஆயிரம் ரூபாத்தாள் எண்டாலும் ‘பொக்கற்றில’ இருக்கும். அப்படிக் கொத்த ‘றெஸ்ற் பெக்ற்’ ஆன ஆள் றெஸ்ற் பெக்ற் எண்டால் ‘றெஸ்ற் பெக்ற்’ அப்படியான ஆள் என்று கத்த... அங்கை இருக்கிற ஆள்களெல்லாம் திரும்பிப் பார்ப்பினம். அதிலை ஒரு சந்தோசம் அவருக்கு.

ஓம்! வேணுமெண்டால் கேட்டுப் பாருங்கோ. இது என்ரை மருமகன் என்ரை பிள்ளையள் எத்தினைபேர் வெளிநாட்டில இருக்குதுகள்..... என்று தனக்குச் சாட்சியாய் என்னையும் இழுத்து விடுவார். பள்ளிக்கூடத்தில பக்கத்தில இருந்த பெடியள். நான் வாத்தியாரிட்டை அடி வாங்கிப் போட்டு வந்து இருக்க எப்படி அடி? ‘முறுக்கு ரேஸ்ற்’றோ எண்டு கேட்ட மாதிரி

இவரும் எங்கடை பக்கத்து வீட்டு சித்தப்பா- என்ரை மாமா வீட்டிலை எனக்கு ஏதாவது பேச்சு விழுந்தால் பின்பக்கத்து வேலியால ஒருக்கால் எட்டிப் பார்த்து என்ன மருமகன்? நல்ல பேச்சு விழந்தது போல கிடக்கு.... ஏன் ....என்னை பிரச்சினை? எண்டு ஒரு கிண்டல் சும்மா பத்திக் கொண்டு வரும் ...... ஏச்சு பேச்சு ஒண்டும் பிரச்சினை இல்லை இந்த விசாரணை தான் தாங்க ஏலாமல் இருக்கும். நானும் சமாளிக்க வேணு மெல்லே. அது எனக்கு ஏச்சு விழவில்லை சித்தப்பா.... அந்த மீன் காரனைத் தான் ஏசினவா. இந்த நாறின மீனை அந்த ஒண்டும் தெரியாத மனுசனிலை கட்டிப் பிடிச்சிட்டான் எண்டு மீன் காரனுக்குத்தான் விழுந்தது எனக் கொண்டும் ஏச்சு விழவில்லை யெண்டு ஒருமாதிரிச் சமாளிச்சப் போட்டன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருளின் கதவுகளைத் திறந்தவன் 11

● ஔண்யன்



> கென்யாவில் ஒரு நொடியைக் கூட வீணாக்க யூலியன் விரும்பவில்லை. ஒரு தடவை முடிவெர ந்துவிட்டால் அதற்குப் பிறகு காரியம் முடிந்த பிறகுதான் உட்கா வது அவனது வழக்கம். கென்யாவில் அதுவரை ஆட்சியில் இருந்த அமைச்சர்கள், ஜனாதிபதிகள், நிர்வாக அதிகாரிகள், இராணு வத்தளபதிகள் எல்லோரினதும் விபரங்களை மூன்றே நாளில் திரட்டினார். குற்றம் செய்தவர்கள் எல்லோருமே தம்மையுமறியாமல் ஏதாவது ஒரு தடயத்தை விட்டுவிட்டே செல்வார்கள் என்பது யூலியனின் அசைக்க முடியாத எடுகோள்.

**வி**க்கிலீக்ஸின் அடுத்த பாய்ச்சல் சோமாலியவிலிருந்து கென்யாவுக்குத் தாவியது. இதற்கு யூலியன் கைக்கொண்ட ஸ்டைலே தனி. சிங்கத்தின் குகைக்குள்ளேயே புகுந்து, அதன் வாலைப்பிடித்து இழுத்துவிட்டு, அங்கேயே சாவகாசமாக காலை நீட்டி உறங்கும் தைரியம் யாருக்கு வரும்? ஆனால் கென்யாவில் யூலியன் செய்த காரியம் இப்படிப்பட்டதாகவே இருந்தது.

ஊழலில் உலகிலேயே கொடிகட்டிப் பறந்த- பறக்கின்ற - நாடு கென்யா. எங்கும் ஊழலின் தாண்டவம் நிகழ்ந்ததால் அப்பாவி மக்கள் தொடர்ந்தும் பட்டினியால் வாடுகின்ற சூழலே நிலவியது. ஏற்கனவே வறண்ட நாடான கென்யா ஊழலின் பிடியில் சிக்கி அபிவிருத்தி என்றால் என்னவென்பதையே அறியாததாக மாறியிருந்தது. ஒவ்வொரு முறையும் ஆட்சிக்கு வருகின்ற அரசாங்கங்களும் அதற்கு முன்பிருந்த அரசாங்கங்களின் ஊழல்களை வெளிப்படுத்தி, நாம் அதனை ஒழித்து மக்களுக்கு புதிய வாழ்வினைப் பெற்றுத்தருவோம் என்ற வாக்குறுதிகளை வழங்கிவிட்டே அரியணையில் ஏறுவது வழக்கம். ஆனால் அந்த அரியணையில் ஏறியவுடனேயே ஆட்சியாளர்களை ஊழல் பேய் -அவர்களை அறியாமலே- தொற்றிக் கொண்டுவிடுகின்றது. அதனால் ஆட்சியாளர்கள் சுகபோகத்தில் திளைக்க, மக்கள் பட்டினி வாழ்வுக்குள்ளேயே தமது ஆயுளைத் தொலைத்துவிடுவது கென்யாவில் வாடிக்கையாகிப் போன விடயம்.

இதில் இன்னொரு விடயமும் இருக்கிறது. எல்லா அரசுகளும் ஊழலையே தமது பிரதான தொழிலாகக் கொண்டமையால், தமக்கு முன்பிருந்த ஆட்சியாளர்களின் ஊழல் விடயங்களை வெளிக்கொண்டு வராமல் அமுக்கிவிடுகின்றன. ஏனெனில் அவ்வாறு வெளிப்படுத்தினால் தம்மையும் அடுத்துவரும் ஆட்சியாளர்கள் அம்பலப்படுத்தி அதில் குளிர் காய்ந்து விடுவார்கள் என்ற பயம்தான். இதனால் இயன்ற வரைக்கும் தமது தில்லாலங்கடி வேலைகளை ஆதாரமின்றியே செய்துமுடித்தனர். ஊழல் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டபோதும் தகுந்த ஆதாரங்கள் இல்லாததால் அவர்கள் எல்லோருமே சுதந்திரமாக உலவமுடிந்ததுடன், மோசடி செய்த சொத்துக்களை வைத்துக் கொண்டு தொடர்ந்தும் அவர்கள் இராஜபோக வாழ்க்கையை அனுபவிக்க முடிந்தது. ஆனாலும் பாவத்தின் சம்பளம் பலநாள் கழிந்தாலும் கட்டாயம் கிடைக்கத்தானே வேண்டும். கென்ய அரசியல்வாதிகளும், அவர்களின் வால்களும் செய்த பழம் இருக்கத் தோல் விழுங்குகின்ற அத்தனை வேலைகளுக்கும் வட்டியோடு சம்பளம் கொடுப்பதற்காக கென்யாவுக்கு வந்து சேர்ந்தான் யூலியன் அசாஞ்சே.

கென்யாவில் ஒரு நொடியைக் கூட வீணாக்க யூலியன் விரும்பவில்லை. ஒரு தடவை முடிவெடுத்து விட்டால் அதற்குப் பிறகு காரியம் முடிந்தபிறகுதான் உட்கார்வது அவனது வழக்கம். கென்யாவில் அதுவரை ஆட்சியில் இருந்த அமைச்சர்கள், ஜனாதிபதிகள், நிர்வாக அதிகாரிகள், இராணுவத்தளபதிகள் எல்லோரினதும் விபரங்களை மூன்றே நாளில் திரட்டினார். குற்றம் செய்தவர்கள் எல்லோருமே தம்மையுமறியாமல் ஏதாவது ஒரு தடயத்தை விட்டுவிட்டே செல்வார்கள் என்பது யூலியனின் அசைக்கமுடியாத எடுகோள். அதனடிப்படையிலேயே அவனது தேடுதல்கள் அமைந்திருந்தன. ஊழலில் ஈடுபட்டிருப்பார்கள் என்ற சந்தேக வளையத்துக்குள் வந்தோரின் சொத்து விபரங்களைத் தனியாகப் பிரித்தெடுத்து அவையெல்லாம் எந்தெந்த வழிகளில் வந்து சேர்ந்தன என்பதைக் கண்டறிய யூலியன் நிறையவே மினக்கெட வேண்டியிருந்தது. முள்ளை முள்ளால் எடுப்பது போல, லஞ்சப் பேர்வழிகள் பற்றிய தகவல்களை லஞ்சம் கொடுத்தே பெறவேண்டியிருந்தது. எப்படியாவது ஊழல்பேர்வழிகள் உரிய ஆதாரங்களோடு கூண்டில் ஏற்றப்படவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள் கொடுத்த நிதிப்பலத்தில் அரச ஆவணத்துறையைச் சேர்ந்த அதிகாரிகள், ஊழியர்கள் விலைக்கு வாங்கப்பட்டனர். ஏற்கனவே லஞ்சம் வாங்கியே பழக்கப்பட்டுப் போனவர்களைப் பணத்தாசை காட்டி தன் வலையில் விழவைப்பதில் யூலியன் வெற்றி கண்டான். அதற்குப்பிறகு காரியங்கள் மளமளவென்று நடந்தேறின.

விக்கி லீக்ஸில் - ஒரு சுபயோக தினத்தில் -கென்ய ஊழல் பேர்வழிகள் முழு ஆதாரங்களோடும் அம்மணமாக்கப்பட்டனர். ஆதாரங்கள் எல்லாமே அசைக்க முடியாதவையாக இருந்ததால் அவர்கள் அனைவருமே ஒரு சில வாரங்களுக்குள் பாவத்தின் பலனை சிறைகளில் அனுபவிக்க வேண்டிருந்தது.

இத்தனை நாளும் சொகுசு தாம் அனுபவித்த சொகுசு வாழ்க்கைக்கு முடிவுகட்டிய யூலியன்னைப் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணம் விக்கிலீக்ஸின் புண்ணியத்தால் சிறைவாசம் கிடைக்கப்பெற்ற பெரிய புள்ளிகளிடம் மேலோங்கியது. கண்கள் சிவப்பாக, இரத்தம் சூடேற, குறுகிய சிறைக் கூடத்தில் அங்குமிங்கும் அலைந்த படி, இரவு பகலாக நித்திரையின்றி யூலியனைப் பழிவாங்கும் திட்டத்தை அவர்கள் தீட்டினார்கள். அவர்களின் திட்டத்துக்கு அப்போது ஆட்சியில் இருந்த அமைச்சர்கள் சிலரும் ஒத்தாசை செய்ய முன்வந்தார்கள். அவர்களின் ஊழல் பட்டியலையே யூலியன் அடுத்ததாக வெளியிடப்போவதாகத் தகவல்கள் வெளிவந்திருந்தன. அப்படித்தங்களின் வண்டவாளம் வெளிவருமுன்னரே, யூலியனின் கதையை முடித்துவிடவேண்டுமென்பதில் அவர்களும் அதீத அக்கறையோடு செயற்பட்டனர். தமது விசுவாசத்துக்குரிய - சொன்னதைக் கனகச்சிதமாக செய்து முடிக்கக் கூடிய- படைவீரர்கள் இக்காரியத்தில் ஈடுபடுவதற்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

வழமையான முறையில் இந்தக்கொலை அமையக்கூடாது என்பதில் எல்லோருமே உறுதியாக இருந்தார்கள்.

யூலியன் சாகவேண்டும். ஆனால் அது யாருக்குமே தெரியக் கூடாது. யூலியன் கொல்லப்பட்டது வெளியே தெரியவந்தால் நிலைமை இன்னும் மோசமாகி விடும். யூலியன் இறந்த செய்தி பலநாள்களுக்குப் பின்னரே உலகுக்குத் தெரியவரவேண்டும். அத்தோடு யூலியனின் சடலம் எந்தவிதத் தடயமும் இன்றி அழிக்கப்படவும் வேண்டும். அப்போதுதான் எங்கள் மீது எவருக்கும் சந்தேகம் வராது.

இவ்வாறு கொலையாளிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

தமக்குரிய உத்தரவும் பணமும் கிடைத்த மறுநொடியே யூலியனின் ஆயுளைக் கொலையாளிகள் எண்ணத் தொடங்கிவிட்டார்கள். யூலியனின் இருப்பிடம், நடமாட்டம் என்பன அவதானிக்கப்பட்டு தாக்குதலுக்குரிய இடம், நேரம் தீர்மானிக்கப்பட்டது. சடலத்தை அழிக்கும் உத்தி, மௌனமாக உயிர் குடிக்கும் ஆயுதங்கள் என எல்லாமே தயார். இதோ! யூலியனின் மூச்சுக்கு ஆப்பு வைக்க கொலையாளிகள் புறப்பட்டும் விட்டார்கள். இனி என்ன நடந்தது?

(திரைகள் இன்னும் திறக்கும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கு மறுக்கு;

ந. மயூரரூபன்



## றஷ்மியின் "ஈ தனது பெயரை மறந்து போனது"

அகமத் முஹமது றஷ்மி- இலங்கையின் கிழக்குக் கரையோரம் அக்கரைப்பற்றில் பிறந்தவர். காவு கொள்ளப்பட்ட வாழ்வு முதலாய கவிதைகள் (2002), ஆயிரம் கிராமங்களைத் தின்ற ஆடு (2005), ஈ தேனின் பாம்புகள் (2010), ஈ தனது பெயரை மறந்து போனது (2011) ஆகியவை இவரது கவிதைத் தொகுதிகள். வடிவமைப்பு மற்றும் ஓவியத்துறைகளில் ஈடுபாடு அதிகம் கொண்ட இவர் இப்போது ஐக்கிய இராச்சியத்தில் வசிக்கிறார்.

இங்கு றஷ்மியின் ஈ தனது பெயரை மறந்து போனது தொகுதியை முன் வைத்து சில விடயங்களைக் குறிப்பிடுகிறேன்.

ஈ தனது பெயரை மறந்து போனது என்பது 1 ஆம் வகுப்பு புத்தகத்தில் ஒரு பெயரை மறந்து பின் பெயரை கேட்டுத் திரியும் கதையில் இருந்து உருப்பெற்றது. இங்கு (தொகுதியில்) ஈ என்பது தமிழ் விடுதலையுணர்வின் குறியீடாக வாசிக்கப்படக் கூடியது. எஸ். கே. விக்கினேஸ்வரன் இத்தொகுதியின் முன்னுரையில் (வழித்துணை எனும் தலைப்பிலமைந்த பதிவு) குறிப்பிடுவது போல்; றஷ்மியின் கவிதைகள் பேசுகிற அரசியல் வெளிப்படையானது.

நீண்ட கவிதைகள், காவிய வகைமையை ஞாபகப்படுத்துகின்ற அமைப்புக் கொண்டன. மொழியின் இலாவகமும், புதிய படிமங்களும் நீண்ட கவிதைகளுக்குக் கனதியைக் கொடுக்கின்றன.

றஷ்மியின் இந்தத் தொகுதி, ஈழப் போராட்டத்தின் வரலாற்றைப் பேசுகிறது. அவரின் மனிதின் மானுட, அழகியல் அறிவு இணைந்த நுண்மொழிதல் திறன்; இந்த வரலாற்றின் ஒவ்வொரு அடுக்குகளையும் திறக்கிறது.

இந்தத் தொகுதியிலுள்ள ஒரு கவிதை, நான் பிறன் ஆன காலம் அதனைப் புள்ளியொன்றாகக் கொண்டு அதன் முன் பின்னான காலத் தனங்களை இந்தத் தொகுதியில் அடையாளங் காண முடியும்.

**"நான் துரத்தப்பட்டேன்**
**தென்னோலைக்**
**காம்புகளாலான**
**எனது மாட்டுப் பிணையல்கள்**
**எனது பசிய புல்வெளிகளில்**
**நிராதரவாய் விடப்பட்டன...**
**நான் அங்கிருந்து**
**வெளியேற்றப் பட்டேன்....**
**நான் அங்கு பிறக்கெப்போதுமே**
**திரும்பியிருக்கவில்லை"**
**(நான் பிறன் ஆன காலம்)**

இந்தக் கவிதைதான் அந்தக் குறித்த புள்ளி. அதன் பின்னான காலத்தில் தான் ஈ தனது பெயரை மறந்து போனது எனும் கருத் துருவத்தை றஷ்மி வரைகிறார்.

நான் பிறன் ஆன காலத்திற்கு முன்னான காலத்தை பின்வரும் சில கவிதைப் பகுதிகளினூடு தொட்டுச் செல்கிறேன். வரலாற்றின் தொடரிழை புலப்படும்.

**"அது ஒரு காலம்**
**எங்கள் கழிப்பறையின்**
**கதவு கூட முதிரையிலிருந்தது"**

**"மகிந்தவும் தமக்கையும்**
**நட்ட கிளை தோப்பாகிற்று**
**நாடு காடாகிற்று**
**காடு.."**
**(இரண்டாயிரம் வருச பழைய இருள்)**

**"சிங்கம் தன் கைவாளால் வீசி**
**அதன்மொழியைத் திணித்தபோது,**
**தாயின் பாசைகளிலிருந்து**
**கனவுகளை பெயர்க்க என்னால்**
**இயலவில்லை"**
**(காடு சினேகம் பூண்ட கதை)**

**"எல்லா**
**இடங்களிலும்**
**வதைமுகாம்**
**ஓர் ஊர் தவறாமல்**
**சவக்கிடங்கு**
**ஒருதெரு விடாமல்**
**சாவோலம்"**
**(தலையாட்டிகளின் காலம்)**

**"இனந்தெரியாதோர்**
**வடிவில்**
**மர்ம முறையில்**
**மரணம் அவர்களை**
**மறைந்து**
**போக வைத்தது**
**பிறகு ஆண்டுக் கொரு**
**தடவை**
**நண்பர்களால்**
**அவர்கள் நினைவு**
**கூரப்படலாகினர்"**

இது இலங்கை யின் இனப் பிரச்சினை உச்சம் பெற்ற ஆரம்பப் பகுதிகளைப் பேசுகிறது.


அடுத்து நான் பிறன் ஆன காலத்துக்கு பிற்பட்ட வாழ்வைப் பேசும் கவிதைகள் தொடர்ந்து வருகின்றன.

**"ஒரு சிறு**
**பொதி அளவு பாரம்பரியம்**
**ஒரு சில பணத்தாள் முதுசெம்**
**ஒரு பகல் ஒரு இரா அவகாசம்..**
**அவ்வளவுதான்**
**வருடாவருடம் அந்தநாளைக்**
**கண்ணீரினால்நினைவு**
**கொள்ளும்படி செய்தனர்**
**விடுதலை வீரர்கள்"**
**(காவு கொள்ளப்பட்ட வாழ்வு)**

**"புதிது புதிதாய்க் கொலைகளை**
**செய்வதிலுள்ள சுகம்**
**கோழி இறகால் காது குடைவது**
**போலவும்**
**சிரங்கைச் சுற்றி சொறிவது**
**போலவும் இருந்தது."**
**(கொலைக்கருவியின் வாக்கு மூலம்)**

**"பிறகு**
**தாய் மகள் தமக்கையென**
**பிறந்த மேனியராய்ப் பெண்கள்**
**அவன் ஆழ்மன வெளிக்கு**
**அனுப்பி வைக்கப்பட்ட போது**
**அவனது சேனை அனேகமாய்**
**எதிரியின் எல்லாப் பெண்களையும்**
**புணர்ந்தும் கொன்றும்**
**கொன்றும் புணர்ந்தும் ஆயிற்று"**
**(அழித்தொழிப்பின் நாள்கள்)**

பொதுவான அரசியல் கருத்துருவாக்கங்கள் செறிந்த புனைவுப் பிரதிகள் அரசியலின் கடந்த கால நிகழ்கால வரலாற்று உசாத்துணைகள் கொண்டு வாசிக்கப்படும் இயல்பிலேயே அமைந்து விடுகின்றன. இங்கு றஷ்மியின் கவிதைகள் கொண்



டிருக்கும் சுயம் அல்லது தொகுதியை வாசிப்பவர் கொண்டிருக்கும் சுயம் என்பது கண்ணாடிக் கட்டடம் இனால் ஆனது. அதாவது வெளியிலிருக்கும் சுயம் தான் இந்த அவயங்களைக் கட்டமைக்கின்றன. கண்ணாடியின் சுயம் போல ஈ தனது பெயரை மறந்து போனதும் அப்படித்தான். இக்கா விய அமைப்பு பல அடுக்குகளில் அமைந்தது. பல விடயங்கள், பல நாள்கள், பல்வேறு உணர்வுகள், பல மனிதர்கள் பல மன வேகங்கள் இங்கு பொதிந்துள்ளதை நாம் காணலாம்.

இது தொகுதிகளுக்குப் பொதுவான இயல்பு.

றஷ்மியின் இத்தொகுதி, துண்டுகளாக்கப்படாத ஒரு முழு உணர்வுத் தள்த்தை உருவாக்கவல்ல எண்ணத்தோடு உருப்பெற்றது. பல்வேறு காட்சி துண்டங்கள் பொருந்திய ஒரு முழு உடல் இத்தொகுதி. உறுப்புகளற்ற உடல் என்பது இத் தொகுதியின் தீவிரத்தைப் பாதிக்கும்.

றஷ்மியின் இத்தொகுதி அமைப்பை தெலூஸ், கத்தாரி கூறுகின்ற குறுக்குமறுக்கு என்னும் சிந்தனை வடிவத்தினோடு பொருத்திப் பார்ப்போம். குறுக்கு மறுக்கு என்பது பல திசைகளில் கிளைகளாய்ப் பிரியும் வடிவத்திலிருந்து ஒரு பொருளாகத் திரண்டு கிழங்காவது வரை பல வடிவங்கள் எடுக்கும் தன்மை.

இங்கு குறுக்குமறுக்கு உருளைக் கிழங்காகலாம், களைச் செடியாகலாம், காட்டுப்புல்லாகலாம்.

'ஈ தனது பெயரை மறந்து போனது' எனும் படிமத்துக்கான திரட்சி எப்படி உருக் கொள்கிறது?

**"இறுதிக் கிரியைகளுக்கு**
**எதையும் எஞ்சவிடாத யுத்தம்**
**வெற்றுச் சவப்பெட்டிகளை வீட்டுக்கு அனுப்பி வைத்தது"**

**"எல்லா இடங்களிலும்**
**எல்லோரும் கொன்றனர்**
**எல்லாவற்றையும்..."**

**"இறுதியில்பிடியைத்**
**தளர்த்தாத ஒரு தாய் வயிற்றில்**
**எட்டி உதைத்து**
**குழந்தைகளைப் பிடுங்கிச்**
**செல்கின்றனர்**
**முறத்தால் அடித்து விரட்ட**
**முடியாக் கையறுநிலை"**

**"அவனோ மரணத்தை தேசம்**
**முழுவதும் கட்டளையிட்டுக்**
**கொண்டிருந்தான்...**
**அழுவொலியில் கிளர்வுற்றான்**
**ஒப்பாரி கேட்காமல் அவனால்**
**தூங்க முடிந்ததில்லை"**

இதனால் ஈ தனது பெயரை மறந்து போனது.

உண்மையில் குறுக்குமறுக்கு என்பது ஒரு வரைபடம். நகலெடுத்த வரைபடம் அல்ல. றஷ்மியின் அகவயம் வரைந்த படம்.

றஷ்மியின் கவிதைகள் வாசகனுடன் இணைந்த ஒரு நகலற்ற வரைபடத்தை உருவாக்குகிறது. ஒரு முழுமையான உண்மை புறத்தே நிற்க உருக்கொல்லும் வரைபடம் நனவிலி மனம் திரட்டிக்கும் உண்மையாகிறது. இது எதிராகத் திரும்பவல்லது, பாதைகளை மாற்றத்தக்கது; தனிநபர்/ சமூகக் குழுவுடன் இணைந்து பணியாற்றத்தக்கது, கலைப் படைப்பாகக் கூடியது, அரசியல் நடவடிக்கையாக அமையக் கூடியது, தியானமாக உருப் பெறவல்லது. இதன் எல்லாப் பரிமாணங்களையும் ஈ தனது பெயரை மறந்து போனது கொண்டிருக்கிறது.

*** *** ***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சந்தனம் மிஞ்சினால்...





**கரியான காசு – 01**

காசுகூடிப்போய் அதைஎப்படிச் செலவழிப்பது என்று தெரியாமல் தடுமாறிக்கொண்டிருக்கிறார்கள் பலர்.

அருணாசலம் படத்தில் நூறு கோடி ரூபாவை ஒரு மாதத்தில் செலவழிப்பதற்காக ரஜனிகாந்த் செய்தது போன்று இவர்களும் காசைக் கரியாக்கும் வழிகளை 'றூம்' போட்டு யோசிக்கிறார்கள். அப்படி யோசித்த ஒரு குடும்பம் முதல்முறையாக ஈழத்தில் யானைச் சவாரிக் கல்யாணத்தை நடத்தி வரலாற்றில் (?) -இடம் பிடித்திருக்கிறது. புலம்பெயர்ந்து வசிக்கும் மணமக்களும் அவர்களின் குடும்பத்தினரும் தங்களுடைய சொந்த ஊரான காரைநகருக்கு வந்து இந்த வித்தையைக்காட்டிவிட்டுப் போயிருக்கிறார்கள்.

ஊரெல்லாம் ஒரு அங்குலம் கூட மிச்சம் விடாமல் நோட்டிஸ் அடித்து ஒட்டி, மணமகனை யானையில் ஏற்றி ஊர்வலமாகக் கொண்டு திரிந்து இந்தத் திருமணத்தை ஊரே வியக்கும் படி நடத்தி முடித்திருக்கிறார்கள்.

இதே வேளையில் அண்மையில் சொந்த ஊருக்கு வந்திருந்த புலம் பெயர் தமிழர் ஒருவர் தான் சேமித்த பணத்தில் வன்னியில் போரால் பாதிப்புற்ற மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கியிருந்தார். வேறு சிலரோ பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு சுய தொழில் முயற்சிகளுக்கான உதவித் தொகைகளை வழங்கியிருந்தார்கள். இவர்களின் உதவி பெற்றவர்கள் வாழும் வரை அவர்களை வாழ்த்திக்கொண்டேயிருப்பார்கள். ஆனால் நொடிப் பொழுது படோபடத்திற்காக யானைக்கும், நோட்டிசுக்கும் கரியாக்கிவிடும் பணத்தால் என்ன பயன்?

**கரியான காசு – 02**

இலங்கையில் முன்னணி இலத்திரனியல் தமிழ் ஊடகம் ஒன்று தனது ஆண்டு நிறைவை ஒட்டி அதன் நேயர்களுக்கு விநோதமான முறையில் பரிசுகளை வழங்கியிருந்தது. அன்று காலையில் யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளையும் ஹெலிகள் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. வழமையை விடவும் அவற்றின் பறப்பு வித்தியாசமானதாக இருந்தது. மக்கள் என்னவோ ஏதோவோ என்று பதறியடிக்கையில் தான் குறித்த வானொலி தங்களின் பரிசுக் கூப்பன்களை விசிறவே ஹெலிகள் வட்டமடிக்கும் செய்தியைச் சொல்லியது. அதன் பிறகு காலையில் இருந்து மாலை வரை கையில் றேடியோவுடன் எல்லோரும் வானத்தையே அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

நோட்டீஸ் மாரி பொழிந்தது. எல்லோரும் ஒருவரையொருவர் அடித்துக்கொண்டு பொறுக்கினார்கள். சிலருக்கு மட்டும் பரிசுகள் விழ மற்றவர்கள் வர்ணக் கூப்பன்களோடு அசடு வழிந்தார்கள்.

"இந்தக் ஹெலிக்கு சிலவழிச்ச காசுக்கு ஆயிரம் சனத்துக்கு சோறு போட்டிருக்கலாம்" பரிசுகிடைக்காத கூப்பனைப் பொறுக்கிய ஒருவர் இப்படி முணுமுணுத்தார். என்ன செய்வது சந்தனம் மிஞ்சினால் எங்காவது தடவத்தானே வேண்டும்.

# ஆரம்பம்; அரசியல் நாடகம்

■ வீகேயெம்

> **இந்த குழப்பமான நிலை தமிழ் மக்கள் மத்தியில் சற்று சந்தேகத்தை ஏற்படுத்த,அவர்கள் தமது ஆதங்கங் களை வெளிப்படுத்தினர். ஆனால், அது ஆரோக்கியமான எதிர்காலத் துக்கான மக்கள் விமர்சனம். அது பொறுப்பு வாய்ந்த ஒவ்வொரு தமிழரதும் பொறுப்பு.**

இரவு வரை வர்த்தக விளம்பரங்களால் தமது நிறத்தை மறைத்திருந்த மதில் சுவர்கள் மறுநாள் காலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பைத் திட்டித் தீர்த்துக் கொண்டிருந் தன. குறிப்பாக சம்பந்தன் அதில் சூத்திரதாரியாகக் குறிப்பிடப் பட்டிருந்தார்.

நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள வடக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புச் சார்பாக முதலமைச்சர் வேட்பாளராக முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் நிறுத்தப்பட்டமையும், இதனால் மாவை சேனாதிராசா பெருந்தன்மையாக விலகிக்கொண்டமையும் எல்லோரும் அறிந்ததே.

இந்த தெரிவு தொடர்பாக முன்வைக்கப்படும் ஆரோக்கியமானஎதிரான கருத்துக்களுக்கு அப்பால் தமிழ்தேசியக் கூட்டமைப்பின் மத்தியகுழுக் கூட்டத்தில், அங்கத்துவக் கட்சிகள் அனைத்தும் முழுமனதாக சம்பந்தரின் கருத்தை ஏற்றுக் கொண்டனர்.

ஆரம்பத்தில் இருந்து கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சி பிரதிநிதிகள் மாவையை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்பதில் மும்முர மாக இருந்தனர்.

இதன்காரணமாகவே கொழும்பிலும், வவுனியாவிலும் மூன்று தினங்கள் கூடி கதைக்க வேண்டிய தேவையும் கூட்ட மைப்புக்கு ஏற்பட்டது.

இந்த குழப்பமான நிலை தமிழ் மக்கள் மத்தியில் சற்று சந்தேகத்தை ஏற்படுத்த,அவர்கள் தமது ஆதங்கங்களை வெளிப்படுத்தினர். ஆனால், அது ஆரோக்கியமான எதிர்காலத்துக்கான மக்கள்விமர்சனம். அது பொறுப்பு வாய்ந்த ஒவ்வொரு தமிழரதும் பொறுப்பு.

**கைக்கூலிகளுக்கு கிடைத்த வாய்ப்பு**

இந்தச் சந்தர்ப்பத்தை சாதகமாகப் பயன்படுத்த ஊடுபாத்துக் கொண்டிருந்த அரசியல் கைக்கூலிகள் தமது முதலாவது திருவிளையாடலை தொடக்கி வைத்தனர்.

அது சுவரொட்டி பஞ்சாயத்து. வவுனியா,கிளிநொச்சி மாவட்டங்களில் இந்த நாடகம் முதலில் பரீட் சிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் வவுனியா,கிளிநொச்சி மாவட்ட கிளைகள் இந்த சுவரொட்டிக்கு உரிமை கோரியிருந்தன.

தமிழ் உணர்வுள்ளவர்கள் தமது எதிர்பார்ப்பையோ, விமர்சனத்தையோ சுவரொட்டியில் முன்வைப்பதில்லை. பதிலாக தமது கலாசாரா பண்பாடுகளை பேணுவதற்கான சில விடயங்களை தேவையின் பொருட்டு சுவரொட்டி பிரசாரம் செய்வர்.

தம்மைத் தாமே சுவரில் ஒட்டி சிரிப்பது தமிழ் உணர்வாளர்களது வேலையல்ல. ஒரு பேச்சுக்கு சொல்லப் போனால் சம்பந்தன் துரோகி என்றால், அவரது தலைமையின் கீழ் இருக்கும் சிலரே இந்தச் சுவரொட் டியை ஒட்டியது என்றால், அவர்கள் அந்த கட்சியில் தொடர்ந்து இருப் பது பொருத்தமல்ல. ஓடிப் போய் எங்காவது நல்ல இடம் பார்த்திருக் கலாம்.

உண்மை இதுவல்ல. சந்தர்ப்பம் தேடிய கைக்கூலிகள் தம்மை தமிழ் தேசிய உணர்வாளராக மாற்றி சுவரொட்டியைஒட்டியுள்ளதேதெளிவு

வடக்கிலுள்ள தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும் சுவரொட்டி ஒட்டியவர்கள் யார் என்றும் அதற்காக அவர்கள் எவ்வளவு கூலி பெற்றிருப்பர் என்பதும்.

கைக்கூலி அரசியலை அன்னமாய் பிரித்தறியும் திறன் மக்களுக்கு இருக்கிறது. வடக்கு தேர்தலில் பாலில் கலக்கப்பட்ட தண்ணீரைப் பிரித்துக் காட்டுவர். அப்போது தெரியும் கூலி யார் பெற்றனர் என்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையை விட்டு யந்திரமாகி...

● பூமுகன்

## வயலோடு போன மணியத்தின் கனவு



போன காலபோகம் நல்ல விளைச்சல். வயலுக்குப் போனாலே மணியத்துக்கு சந்தோசம். வானமும் இடைக்கிடைமப்பும் மந்தாரமுமா ஏதோ ஒரு அறிவிப்பை விடுத்துக் கொண்டிருந்தது. சந்தோசமும் பயமும் தான் மணியத்துக்கு அந்த நாட்களை எண்ண வைத்தது.

இந்தமுறை மணியத்துக்கு வெள்ளாண்மை பரவாயில்ல. ஊருக்குள்ள ஒரே பேச்சு. றோட்டுக் கரையோட வயல் என்பதால் போறவாற சனங்களின்ர கண் படத்தான் செய்யும். அதாலதான் மணியத்தின்ர பெயர் அடிக்கடி சந்திக் கடையில கூடுற ஆக்களின்ர வாயில உச்சரிக் கப்படுகுது.

என்னதான் விளைச்சல் அமோகமா இருந்தாலும், அதை வெட்டி வீட்டுக்குக் கொண்டு வந்து சேர்க்கும் வரையில அது மணியத்தின்ர சொத்து இல்ல.

பாற்கஞ்சி சிறுகதையில் சி.வைத்திலிங்கம் கண்ட முருகேசருக்கு,மணியம் ஒப்பானவர்.

வயல் விளைந்து அறுவடைக்குத் தயாராக இருக்கிறது. அதற்கான ஆயத்த வேலைகளில் மணியம்.

முன்னம் எண்டா பச்சக்குறிசாக் கிலதான் நெல்லு கட்டுறது. எத் தினவருசத்துக்கும் நெல்லு பழுதாகாம இருக்கும். இப்ப அதின்ர விலையை கேட்கவே பயமா இருக்கு. அதோட இப்ப வாற சாக்குகளும் முன்னம் மாதிரி பாவிக்காது. நவலோகா 'பாக்,'தான் சரி. சூட்ட அடிச்சு உட னேயே விக்கிறது தானே.

யாழ்ப்பாணத்தில பாக்கடைகள் இருக்கு. அங்க எண்டா ஐந்து ரூபா குறைய வாங்கலாம். 90 பாக் வேண்டணும்.வீட்டில கொஞ்ச 'பாக்' கிடக்குது. மணியம் தீர்மானித்தார்.

ஒரு திங்கட்கிழமை. நல்ல நாள். சனிக்கிழமை மணியம் தன்ர மகளை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி 90 பாக்கையும் வாங்கு வித்தார்.

ஞாயிற்றுக்கிழமை அரிவி வெட்டிற மெசின்காரரர் வீட்டுக்கும் போய் சொல்லிவைத்தார்.

"விடிய ஒரு வெட்டிருக்கு அத முடிச்சிட்டு உங்கட கமத்துக்க தான் மெசின் இறக்கிறது மணியத்தார்" எண்டு உற்சாகமாக சொன்னார் உரிமையாளர்.

அப்படித்தான் நடந்திருக்க வேணும். ஆனால் திங்கட்கிழமை காலை அரிவு வெட்டிக் கொண்டிருந்த மெசின் பழுதாகிவிட்டது.

என்ன செய்வது. பொறுத்து தான் ஆகவேண்டும். மணியம் ஒரு நாள் பொறுத்துக்கொள்ள மு டி வெடுக்க, மறுநாள் வரை வா... ம் பொறுத் திருக்கவில்லை.

திங்கட்கிழமை இரவு தொடங்கிய மழை விடவே இல்லை.

வயலை மூடி வெள்ளம் பாயத் தொடங்கியது. திங்கள் வரை ஜொலித்துக்கொண்டிருந்த நெல் மணிகள்நிலத்தோடுசாய்ந்துவிட்டன.

விளைபருவத்தில் மழைநீர் பட்டால் நெல்லின் தன்மை கெட்டு விடும். மணியத்தின் வய்லும் மழையோடு மாண்டு போக, மழை விடாது பெய்து கொண்டிருந்தது.

கிட்டத்தட்ட பதினைந்து நாட்களுக்கு மழை. நிலத்தோடு சாய்ந்து விட்ட நெற் கதிரை இனி மெஸின் கொண்டு வெட்ட முடியாது.

பதம்கெட்டுபோன நெல் லை அறுத்து ஏதோ செய்தால் தான் வயிற்றுப் பசிக்காவது சாப்பிட முடியும். மணியத்தின் அடுத்த தேடுதல் அரிவு வெட்ட ஆள்களைப் பிடிப்பது.

### ஆள்கூலிக்கு தட்டுப்பாடு

முன்னம் எல்லாம் மனிதக் கூலிகளுக்கு வன்னியில் தட்டுப்பாடே இல்ல. ஆனால் இப்ப குடுக்குற கூலியவிட மேலதிகமாத்தாரன் வாஎண்டாலும் ஆள்பிடிக்க முடியாது.

இதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. அதில் இரண்டு காரணங்கள் முக்கியமானவை. ஒன்று போர் மனிதக் கூலிகளைத் தின்று விட்டது. மற்றையது இயந்திர மயமாகி விட்ட மனிதவாழ்வுக்கு இயல்பு பட்டுவிட்டனர் மக்கள்.

மணியம் ஒருமாதிரி நானும் உனக்கு வெட்டித்தாரன் எண்டு ஒருவரைப்பிடித்து இரண்டு பேருமாக அரிவு வெட்டி சூடு வைத்து,வெள்ளம் வற்றி வயல் காய்ந்ததும் சூடு அடித்தார். சூடு அடிக்க ஆள் பத்தாது. இன்னும் இரண்டு பேராவது தேவை. சம்பளத்துக்கு மேலால கள்ளு வேண்டிக்குடுத்து இரண்டு கூலிகளை ஒழுங்கு செய்தார் மணியம்.38 பாக் நெல்தான் மிஞ்சியது. அதுவும் பதம் கெட்ட நிலையில் அரை விலைக்கு விற்கக் கூடியதாக.

கிட்டத்தட்ட தனது நாள் கூலியை விடுத்து(தினமும் வயலுக்கு போய், பதத்துக்கு பசளையிட்டு மருந் தடித்து) மணியம் அந்த மூன்று ஏக்கர் வயலுக்காக நாற்பதாயிரம் ரூபாவுக்கு மேல் செலவழித்திருப்பார். ஆனால் 34 ஆயிரம் ரூபாவுக்கே நெல்விற்றிருக்கிறார். ஒரு நாள் பிந்தியதால் அவர் கண்ட கனவு மழையோடுபோனது. மணியம் தற்போதும் ஒரு ஏக்கர் நெல் விதைத்திருக்கிறார். அவரின் கனவும் கடவுள் பிரார்த்தனையும் மழை குறுக் கிடக் கூடாது என்பதே. இன்னும் ஒருமாதத்தில அவரது வயல் அறு வடைக்கு தயாராகி விடும்.

வன்னியில்போனகால போகத்தில் மணியம்போன்று எல்லா விவசாயிகளும் கனவுகளைத் தொலைத்தவர்களே. இப்போது சிறுபோக நெல் அறுவடையை ஆரம்பித்திருக்கின்றனர் வன்னி விவசாயிகள்.வானம்மப்பும்மந்தாரமுமாக இருக்கிறது. அவர்களது நெஞ்சு பதைப்பும் வேகமாகவே இருக்கிறது.

போர் தின்ற சொத்துக்களை ..டுகட்ட அவர்களால் முடியவில்லை. இயற்கையும் அவர்களை வஞ்சிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பித்தன் பதில்கள்

## தன் வாயாலேயே கெடும் ஆண்கள்...

**இ. கமலினி, சண்டிலிப்பாய்.**

**கே :** பொதுவாகவே ஆண், பெண் இருபாலருக்கும் காதல் எழுந்தாலும், ஆண்களே காதலை முதலில் வெளிப்படுத்து கிறார்கள். இது எதனைக் காட்டுகிறது பித்தரே? ஆண்களின் துணிச் சலையா? அல்லது பெண் களின் பொறுமையையா?



**ப :** சீலையில முள்ளுப்பட்டாலும், முள்ளில சீலை விழுந்தாலும் சேதமென்னவோ சீலைக்குத்தான். அதை மாதிரி ஆர் முதல்ல காதலைச் சொன்னாலும் கடைசியில பாதிக்கப்படப்போறது பாவப்பட்ட ஆம் பிளையள் தானே. உந்தத் தவளை இருக்குப் பாருங்கோ. அது மாரிகாலத்தில மழையக் கண்ட புளுகத்தில கத்தி கத்தியே வயிறு வெடிச்சு செத்துப் போடுமாம். கோடை காலத்தில எங்கையாவது பதுங்கிக் கிடந்துட்டு காத்து வாங்க வெளியில வரேக்கையும் ஒருக்கா கத்துமாம். அந்த சத்ததின்ர அதிர்வை வைச்சு பாம்பு தவளையை பிடிச்சுப் போடுமாம். அதால தான் நுணலும் (தவளை) தன் வாயால கெடும் எண்டு சொல்லுறவை. அதை மாதிரி பின்னுக்கு வரப்போற ஆபத்து தெரியாமல் "ஐ லவ் யூ" எண்டு பெடியள் வலு எழுப்பமாய் சொல்லிப் போடுவினம். கன காலத் துக்குப் பிறகுதான் தாங்களும் தவளை மாதிரி தங்கட வாயாலையே வாழ்க்கைக்கு உலை வைச்ச விசயம் அவைக்கு தெரியவரும். (பித்தருக்கு உந்த ஞானோதயம் வந்து கனகாலமாச்சு)

**அ. தங்கராசா, நெல்லியடி.**


**கே :** மாகாண சபைத் தேர்தலில் தனக்கு அரச தரப்பைச் சேர்ந்த ஒருவருக்கு ஆசனம் வழங்கப் படவில்லை என்பதற்காக அவரது ஆதரவாளர் ஒருவர் தீக்குளிக்க முயன்றிருக்கிறார். இது எதனைக் காட்டுகிறது பித்தூஸ்?



**ப :** இதை மாதிரி இன்னும் நிறைய கூத்துகள் இஞ்ச நடக்கப் போகுது. வேட்பு மனு தாக்கல் செய்ய முதலே இப்பிடி தீக்குளிப்புவரை போட்டுதெண்டால் இனிமேல் காலங்களில இதைவிட உச்சமான கேவலங்களை நாங்கள் கண்டு களிக்கலாம்.

ஆமி பிடிச்சு வச்சிருக்கிற சனத்தின்ர காணியை விடச் சொல்லியோ இல்லாட்டி சின்னப் பிள்ளைகள் மீதான பாலியல் குற்றங்களை நிப்பாட்டச் சொல்லியோ தீக்குளிக்க முயன்றிருந்தால் அதில ஒரு நியாயம் இருக்கு. ஆனால் கூலிக்கு மாரடிக்கிற கும்பல் ஒண்டு தேர்தல் விதிகளை மீறி பட்டப்பகலில ஆர்ப்பாட்டம், தீக்குளிப்பு எண்டு நாடகங்களை அரங்கேற்றி இருக்கு. அவ்வளவு பேரையும் அள்ளிக்கொண்டு போய் சிறையில போட வேண்டிய பொலிஸ் கை கட்டிக்கொண்டு பார்த்துக் கொண்டு நிண்டது தான் ஆகப் பெரிய பகிடி. தமிழகத்தில நடக்கிற சாக்கடை அரசியல் விளையாட்டுகள் இப்ப யாழ்ப்பாணத் துக்கும் வந்திட்டுது எண்டதைத் தான் இப்பிடியான சம்பவங்கள் எங்களுக்குச் சொல்லுது.

## சொற்சிலம்பம் போட்டி இல: 580



**மேலிருந்து கீழ்**

1. அறிவில்லாதவன்
2. விலை
3. நிலத்தைப் பொறுத்தவரை சமமான
4. மத்தி
5. ஆண் மானுக்கு இது அழகைக் கொடுக்கும்
7. வினைப்பயன்
9. இருக்கை
10. (பந்த பாசங்களை) விட்டுவிடு
11. காடு
14. நள்ளிரவு வேளை
15. பெரிய வீடுகளில் பிள்ளை வளர்ப்போரை இப்படி அழைப்பர்

**இடமிருந்து வலம்**

1. கொடுமை
5. வழங்கு
6. புத்தமத பீடகங்களில் ஒன்று
8. நெஞ்சு
10. உள்ளம் (வலமிருந்து இடமாக மாறியுள்ளது)
12. குற்றமில்லாத
13. கத்தி தீட்டப் பயன்படும் சிறிய கருவி (குழம்பியுள்ளது)
16. பார்க்க...
17. பிரணவ மந்திரம்
18. கண்கட்டி வித்தை

அனுப்புபவர் பெயர்:..........................................................

விலாசம்:..........................................................

..........................................................

கையொப்பம்:..........................................................

### சொற்சிலம்பம் போட்டி இல. 580

சொற்சிலம்பம் 580 போட்டிக்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் 2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 21 ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250உம் இரண்டாவது பரிசாக ரூபா 150உம் மூன்றாவது பரிசாக ரூபா 100உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்.**
**361, கஸ்தூரியார் வீதி.**
**யாழ்ப்பாணம்.**

### சொற்சிலம்பம் போட்டி இல. 578 க்கான விடைகள்

**மேலிருந்து கீழ்**

1. சுகாதாரம், 2. கமலம், 3. தேன், 4. சமகாலம், 5. ஈனு, 7. காடு, 8. தேடு, 12. பைங்கிளி, 13. நெற்றி, 15. அசைவு, 16. அசல், 17. பதறு, 20. கசி

**இடமிருந்து வலம்**

1. சுகதேகி, 6. காமன், 7. காமதேனு, 9. தால, 10. சுடுகாடு, 11. ரம்பை, 14. அங்கம், 16. அகிம்சை, 17. பறி, 18. சுளி, 19. கதவு, 21. கால், 22. மா, 23. சிறுமை,

### போட்டி இல. 577 இல் பரிசு பெற்றோர்

| | |
|---|---|
| 1ஆம் பரிசு | ம. குருச்சந்திரன், இல. 39/24. சிவன் வீதி. திருகோணமலை. |
| 2ஆம் பரிசு | ந. பதிவேந்தன், இல. 7/2. பிரசாத் வீதி. நவாலி தெற்கு. மானிப்பாய். |
| 3ஆம் பரிசு | ஆர். மஞ்சுளா, பிரதேச வைத்தியசாலை. வேரவில். |

### பாராட்டுப் பெறுவோர்

(1) **வே. கார்த்திகேசு**
விபுலானந்தர் வீதி,
வாழைச்சேனை.

(2) **எஸ். வசீகரன்,**
இல. 375, கொரவப்பத்தான வீதி,
இறம்பைக்குளம், வவுனியா.

(3) **மணிமேகலை வரதராஜன்,**
இல. 25/3, மாரியம்மன் கோயில் வீதி,
கல்லடி, மட்டக்களப்பு.

(4) **தவளாம்பிகை நாகேந்திரன்,**
இல. 11-3/1, நெல்சன் இடம்,
வெள்ளவத்தை, கொழும்பு-06.

(5) **ரி. செல்வதுரை,**
இல. 11-5/1, சென்லோறன்ஸ் வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு-06.

(6) **கே. இராஜகோபால்,**
அடைக்கலம் தோட்டம்,
கந்தசுவாமி கோயிலடி, வட்டுக்கோட்டை.

(7) **ச. நவரத்தினம்,**
இல. 7-1/19, காலி வீதி,
வெள்ளவத்தை.

(8) **சி. இராசரத்தினம்,**
"பூம்பொழில்" திருநகர் தெற்கு, கிளிநொச்சி.


(9) **இ. ரேணுகா,**
இல. 30, கொண்டடி வீதி, குருநகர்,
யாழ்ப்பாணம்.

(10) **செ. றோபேட்,**
சென் மேரீஸ் லேன், ஊர்காவற்றுறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரியும் இலங்கை



வளர்த்தால் குடுமி, வழிச்சால் மொட்டை என்பது போலவே இலங்கை கிரிக்கெட் அணியின் ஆட்டத்திறன் இருக்கிறது, அடித்தால் எல்லோரும் அடித்து 300 ஓட்டங்களுக்கு மேல் குவித்து அபார வெற்றி பெறுவது அல்லது எல்லோருமே சொதப்பி 100க்கும் குறைவான ஓட்டங்களோடு சுருண்டு மிகமோசமான தோல்வியை அடைவதே அண்மைக்கால இலங்கை அணியின் செயற்பாடுகளாக இருக்கின்றன, அதுவும் மூத்த வீரர்களான சங்ககார, மஹேல, டில்ஷான் ஆகிய மும்மூர்த்திகளும் கைவிட் டால் அணியைத்தூக்கி நிறுத்த ஆள் கிடையாது, இவர்களை நம்பியே இன்றைய இளைய இலங்கை அணி போட்டிகளைச் சந்திக் கிறது, இளம் வீரர்களின் ஆட்டத்தில் காணப்படும் பதற்றம் விரைவாகவே அவர்களை களத்தை விட்டு வெளியேறச் செய்து விடுகிறது, ஆனால் இந்திய அணியில் மூத்த வீரர்கள் தடுமாறினாலும் கூட இளம் வீரர்கள் சதம் சதமாக விளாசி அணியை வெற்றியை நோக்கி அழைத்துப் போகிறார்கள், தொடர்ந்தும் இலங்கை அணி மூத்தவீரர் களிலேயே தங்கியிருக்குமானால். அடுத்து வரும் வருடங்களில் அவர்கள் ஓய்வு பெற்றதும் சிம்பாப்பவேயை விடவும் மோசமான தோல்விகளைச் சந்திக்கும் அணியாக இலங்கை அணியும் மாறக்கூடும்.

# இலங்கைத் தாயின் குழந்தை




ஆஸ்திரேலியாவின் பல்லினக் கலாசார நோக்கமான, வேற்றுமையில் ஒற்றுமை என்ற கொள்கையின் வெற்றி அடையாளம்தான் அஷ்ரன் அஹர். தனது முதலாவது டெஸ்ட் போட்டியிலேயே சாதனை படைத்த இளைய வீரர்.

இலங்கைத் தாய்க்கும் ஆஸ்திரேலியத் தந்தைக்கும் பிறந்த இளம் கிரிக்கெட் வீரர்தான் அஸ்ரன் அஹர். இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் ஆஷஸ் கிரிக்கெட் போட்டியின் முதலாவது டெஸ்ட் போட்டியிலேயே ஆஸிகளினதும் உலகினதும் நட்சத்திரமாக உயர்ந்துவிட்டார் இந்த 19 வயதேயான இளம் வீரர்.

முதல் போட்டியே அவரை ஒரு ஸ்டார் வீரராக ஆக்கியுள்ள நிலையில் ஆஸ்திரேலிய ஊடகங்களின் தலைப்புச் செய்தியாகவும், முன்னை நாள் கிரிக்கெட் வீரர்களின் கவனத்தையும் ஈர்த்துள்ள அஸ்ரனைப் பற்றிய இன்னொரு முக்கிய விடயத்தையும் ஊடகங்களும், ஓய்வு பெற்ற வீரரும் குறிப்பிடத் தவறுவதில்லை அது ஆஸ்ரனின்தாய் இலங்கையைச் சேர்ந்தவர் என்பதுதான். இலங்கையில் சுழல் பந்து வீச்சாளர்களின் உருவாக்கம் இயற்கைத் திறமையினால் ஆனது. இங்கே கடும் பயிற்சியின் அடிப்படையில் சுழற்பந்து வீச்சாளர்கள் உருவாகுவதில்லை. தமக்குக் கிடைத்துள்ள இயற் கைத் திறமையைக் கொண்டு, அதற்கேற்பவே தமது பந்து வீசும் ஸ்ரைலை அவர்கள் உருவாக்கிக் கொள்கிறார்கள். இதை ஒத்ததாகவே அஷ்ரனின் பந்து வீசும் தன்மை இருக்கின்றது என்பதைப் பற்றி எழுதுவதற்கோ பெருமைப் படுவதற்கோ அவர்கள் ஒரு போதும் தயங்கியதில்லை. அவரை இளம் ஆஸி என்றே இளைஞர்கள் கொண்டாடுகிறார்கள். ஆயிரக்கணக்கான ஆஸ்திரேலியர் களின் டுவிட்டர் கருத்துப் பரிமாற்றமும், முகநூல் பரிமாற்றமும் அவரை இளம் ஆஸ்திரேலியாவின் ஹீரோ என இனம் காட்டுகின்றன. அவரை ஒரு முழு ஆஸ்திரேலி யராக மக்கள் கொண்டாடுகிறார்கள். ஆனால் இலங்கையில் தான் இன்னமும் விளையாட்டிலும் இன ரீதியான ஒதுக்கல்கள் தொடர்கின்றன.

# தேவை ஒற்றுமை



ஒரு சில வருடங்களுக்கு முன்னர்வரை எல்லாவகையான கிரிக்கெட் ஆட்டங்களிலும் அசைக்கமுடியாத அணியாக விளங்கிய ஆஸ்திரேலிய அணி இப்போது அடிமேல் அடி வாங்கி வருகின்றது. இந்தியாவிடம் ஒரு போட்டியைக் கூட வெல்லமுடியாமல் டெஸ்ட் தொடரை இழந்த ஆஸி அணி, தனது பரமவைரியான இங்கிலாந்திடமும் மூக்குடைபட்டு வருகின்றது. அதுவும் ஆஸியின் கௌரவத்துக்கு சவால் விடும் ஆஷஸ் தொடரிலேயே இந்த அவமானத்தை அந்த அணி சந்தித்து வருகின்றது. இதற்கு முக்கியகாரணம் பொண்டிங் தலைமையிலான ஆஸி அணிக்குள் இருந்ததைப் போன்ற ஒற்றுமை இப்போது இல்லாமையே. குறிப்பாக அணித்தலைவர் கிளார்க்கும், துணைத்தலைவர் வொட்சனும் அடிக்கடி முரண்பட்டுக் கொள்கிறார்கள். அத்தோடு சில திறமையான வீரர்கள் ஓரங்கட்டப்பட்டு வருகிறார்கள். ஆஷஸ் தொடருக்கான அணியில் இடம்பெறாத மக்ஸ்வெல், வோர்ணர் ஆகியோர் தென்னாபிரிக்க 'ஏ' அணிக்கு எதிரான 4 நாள் ஆட்டத்தில் அபார துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தி, தம்மை அணிக்குள் உள்வாங்காதவர்களின் தலைகளைக் குனிய வைத்துள்ளனர். மிக மோசமான துடுப்பாட்டம் காரணமாக முதலிரண்டு டெஸ்ட் போட்டிகளையும் தோற்ற நிலையில், "ஆஷஸ் கிண்ணத்தை வெல்லும் திறனோடுதான் நாங்கள் இருக்கிறோம். நிச்சயம் இந்தமுறை ஆஷஸ் எங்களுக்குத்தான்" என்று சொல்லியிருக்கிறார் ஆஸித்தலைவர் கிளார்க். வெறுமனே கனவு காண்பதும், அறிக்கைகள் விடுவதும் மட்டுமே வெற்றியைத் தேடித்தந்துவிடப்போவதில்லை. கடின உழைப்பும், கூட்டு அர்ப்பணிப்புமே ஆஸியை மீண்டும் வீறு கொண்டெழச் செய்யும். ஆனால் இப்போதைக்கு அது சாத்தியமில்லைப் போலவே தெரிகிறது.

# சச்சினின் இன்னொரு பக்கம்

சச்சின் டெண்டுல்கர் கிரிக்கெட்டின் துடுப்பாட்டத்தில் ஒரு ஜாம்பவனாக இருப்பதால் அவரின் சுழல்பந்துவீச்சுப் பற்றி எவருமே பெரிதாக கவனத்தில் கொள்வதில்லை. ஆனால் உண்மையில் துடுப்பாட்டத்தைப் போலவே பந்து வீச்சிலும் உயர் பெறுமதியையே சச்சின் கொண்டுள்ளார்.

இவர் சர்வதேசக் கிரிக்கெட்டின் மிகச் சிறந்த துடுப்பாட்ட வீரர்களை ஆட்ட மிழக்கச் செய்துள்ளார். அத்துடன் இவரின் சர்வதேசக் கிரிக்கெட் அனுபவத் துடன் ஒப்பிடும் போது. மிகச் சொற்ப ஓவர்களே பந்து வீசியிருந்தாலும். இவரின் பந்து வீச்சில் ஆட்டமிழந்த உலகின் மிகச் சிறந்த துடுப்பாட்ட வீரர்களின் பேட்டி களிலும் சுயசரிதை களிலும் இவரது பந்து வீச்சில் ஒரு முன்னணி சுழல் பந்துவீச்சாளரிடம் காணப்படக் கூடிய தந்திரங்கள் இருப்பதாக வியந்து கூறியுள்ளனர்.

பகுதிநேரப் பந்துவீச்சாளராக களமிறங்கும் சமயங்களில் சச்சின் பந்தை அடித்தாட முடியாமல் எதிரணித் துடுப்பாட்ட வீரர்கள் இலக்குகளை இழந்திருக்கிறார்கள் சர்வதேசக் கிரிக்கெட்டில் டெண்டுல்கரைப் போலவே இன்னும் சில பந்து வீச்சாளர்கள் பெரிதளவில் பிரகாசிக்காமல் இருக்கிறார்கள். காரணம் அவர்கள் விளையாடும் அணிகளும் இரசிகர்களும் அவர்களிடமிருந்து துடுப்பாட்டத்தில் சதங்களையும், சிக்ஸர்களையும் பவுண்டரிகளையுமே எதிர்பார்ப்பதாலும். அவர்கள் விளையாடும் அணிகளின் நட்சத்திரப் பந்து வீச்சாளர்களே இலக்குகளை எடுத்து விடுவதாலும் இவர்களின் பந்து வீசும் திறமையை அதிகளவில் நிரூபிக்க சந்தர்ப்பம் வாய்ப்பதில்லை.



இந்தியாவின் வீரேந்தர் சேவாக். இலங்கையின் டில்ஷான். பெற்ற சனத் ஜயசூரியா. ஆஸ்திரேலியாவின் மைக்கல் கிளார்க். இங்கிலாந்தின் கெவின் பீற்றர்சன் ஆகியோர் தமது பந்துவீச்சை துடுப்பாட்டத்தின் காரணமாக பகுதிநேரமாக்கிக் கொண்டவர்கள். அதிலும் சனத்ஜெயசூரியா ஒரு பந்து வீச்சாளராகவே தனது கிரிக்கெட் பயணத்தை தொடங்கி. துடுப்பாட்டவீரராக புகழ் பெற்றவர்.

வாழ்க்கையில் ஒன்றில் சாதனை புரிவதற்காக இன்னொன்றை இழப்பதென்பது விதியாக இருக்கின்றது. அதற்கு நல்ல உதாரணம் இந்த கிரிக்கெட் வீரர்கள். இவர்கள் துடுப்பாடத்துக்காக பந்து வீசும் திறமையைக் காவு கொடுத்துள்ளார்கள். ஆனால் ஒன்றை மட்டும் கவனித்துப் பார்த்தவர்களுக்குத் தெரியும்... அதாவது இந்த வீரர்கள் எல்லோருமே தாங்கள் சதம் அடித்தவுடன் காட்டும் மகிழ்ச்சியையும் ஆர்ப்பரிப்பையும் விட. தமக்கு அரிதாகக் கிடைக்கும் பந்து வீசும் வாய்ப்பில். எதிரணித் துடுப்பாட்ட வீரனை ஆட்டமிழக்கச் செய்யும் போது வெளிப்படுத்தும் ஆர்ப்பரிப்பும். மகிழ்ச்சித் துள்ளலும் மிக அதிகமானது... இருக்காதா பின்னே?

## விளையாட்டு

தொகுப்பு : வரூ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

–நீலன்

"

நாட்டில் காணப்படுகின்ற 9 மாகாணங்களில் வடமாகாணத்தைத் தவிர ஏனைய 8 மாகாணங் களும் அரசாங்கத்தின் தொட்டிலில் ஆடுகின்ற செல்லக் குழந்தைகளாகும் 1983 தொடக்கம் 2009 வரையிலும் இடம் பெயர்ந்தவர்கள் எனக் கூறி ஆயிரக்கணக்கான மக்களை நடைபெற விருக்கின்ற வடமாகாணசபைத் தேர்தலுக்கான வாக்காளர்கள் என கற்பனையில் கொண்டு வருவார்கள். முயற்சிகள் மிகவும் தந்திரமாக நகர்த்தப்படுகின்றன.

"




# இரு முனை தாக்குதல்!

போர் முடிவுற்ற பின்னர் அதுவும் நான்காண்டுகள் கழிந்துவிட்ட நிலையில் ஓர் குடியியல் நிர்வாகம் ஏற்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் மாகாண சபைகள் அமைப்பது தொடர்பான பிரச்சினை மீண்டும் தலைதூக்கியுள்ளது.

யாருக்காக மாகாணசபை முறைமை அவசியம் என இனங் காணப்பட்டதோ அவர்களுக்கென்று இம்முறையினை அமுல்ப் படுத்தும் சூழ்நிலையில் மஹிந்த அரசாங்கமும் அதனுடன் இணைந்த பலதரப்பட்ட சக்திகளும் அதனைக் கேள்விக்கு உட்படுத் துகின்றன. இது கவலைதரும் விடயமாகும்.

மாகாணசபை முறைமை விடுதலை புலிகளைத் திருப்திப் படுத்துவதற்காகக் கொண்டு வரப்பட்டதாகப் பல அரசியல் வாதிகள் கூறிவருகின்றனர். இது முற்றிலுமாக உண்மைக்குப் புறம்பானதாகும். புலிகளைத் திருப்திப் படுத்துவதற்காக கொண்டு வரப் பட்டதல்ல இத்திருத்தம்மாறாக மக்களுக்கு மக்களுக்கு நிர்வாக ரீதியில் அதிகாரங்களைப் பகிர் வதற்காக கொண்டு வரப்பட்ட தீர்வே 13 ஆவது திருத்தமாகும்.

13 ஆவது திருத்தம் உரிய நேரத்தில் சரிவர நடைமுறைப் படுத்தப்பட்டிருந்தால் நாம் அரசியல்த் தீர்வு விடயத்தில் அதற்கு மேலே சென்றிருப்போம். இவ்வாறாக இத்திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டு அதற்கு மேலே நாம் பயணிக்காது இருந்ததன் காரணமாக இவ்வளவு பிரச்சினைகளையும் எதிர் கொள்ள வேண்டியுள்ளது. தற்போது அரசாங்கம் காணி பொலிஸ் அதிகாரங்களை முடக்குவதற்கு முயற்சிக்கின்றது. இந்தச் சூழலில் 13 ஆவது திருத்தத்தின் கீழ் காணி பொலிஸ் அதிகாரங்கள் யாருக்கு இருக்கின்றது. என்பது தொடர்பில் சற்று ஆராய வேண்டும்.

மாகாண முறைமையே மத்திய அரசாங்கத்தின் விருப்பு வெறுப்புக் களுக்குச் செயற்படுத்தப்படலாம் என்பது வெளிப்படையாகவே அனைவருமறிந்த உண்மையாகும்.

மாகாணசபை முறைமை ஒன்றும் சமஷ்டி ஆட்சி முறைமை இல்லை. மாகாணசபை முறைமை ஒற்றையாட்சியின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ள ஓர் உபாயகரமான முறைமையே ஆகும். இந்த முறைமையினை நடைமுறைப்படுத்துகின்ற முழுப் பொறுப்பும் நாடாளுமன்றத்திடமும் மத்திய அரசாங் கத்திடமுமே உள்ளது. குறிப்பாக காணி அதிகாரங்களை எடுத்துக் கொள்வோமேயாயின் அரச காணிகள் மத்திய அரசாங்கத்திற்கு சொந்தமானவையாகுமே தவிர மாகாண சபைகளுக்கு அல்ல பொலிஸ் அதிகாரங்களை எடுத்துக் கொள்வோமேயாயின் சகல மாகாணத்திலும் இருக்கின்ற மாகாணப் பொலிஸ் அதிபர்கள் மத்தியில் இருக்கும் பொலிஸ் மா அதிபரினாலேயே நியமிக் கப்படுவார்கள். மாகாணத்தில் உள்ள ஆளுநரும் ஜனாதிபதியால் நியமிக்கப் பட்டு அவரின் பணிப்புரைக்கு அமையவே செயற்படுவார். இந்த ஆளுநருக்கு மாகாணசபைகளைக் கலைப்பதற்கான அதிகாரமும் இருக்கின்றது.

இப்படியான இந்த நடைமுறையிணைப் பார்க்கின்ற போது மாகாணசபை முறைமையானது முழுக்க முழுக்க மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் கட்டுப்பட்டுள்ளதனால் மாகாணசபைகளை தெற்கிலுள்ள பேரினவாதிகள் எதிர்ப்பதில் தேவையே கிடையாது.

இன்றைய நிலையில் பலதுன்பங்களின் மத்தியில் எதிர்கால சுபீட்சத்திற்காக ஏங்கும் சிறுபான்மை மக்களுக்கு மென்மேலும் ஏமாற்றத்தை அளிக்காது நம்பிக்கையைக் கொடுக்கின்ற வகையில் அரசாங்கம் நடந்தும் கொள்ள வேண்டும்.

இந்நிலையில் 13 ஆவது திருத்தத்தின் மாற்றங்களை மேற்கொள்ளாது வடமாகாண சபைத் தேர்தல் நடத்தப்படுமேயானால் அது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் எனவும் அதனை வலுக்கட்டாயமாக எதிர்போம் எனவும் அரசதரப்பைச் சேர்ந்த ஒரு சாரார் தெரிவித்து வருகின்றனர்.

இராணுவ நிர்வாகம் ஒன்றினை அரசு நடத்துகின்றது என்கிற விடயம் ஒன்றும் அரசியல் பிரச்சினையல்ல எனவும் இது பற்றிப் பேச வெளிச் சக்திகளுக்கு இடமளிக்கக் கூடாது என்கின்ற சிந்தனையும் சிந்தனையும் ராஜபக்ஷ அரசிடம் காணப்பட்டு வருகின்றது. இதன் அடிப்படையில் ராஜபக்ஷ அரசு இன்று இருமுனைத் தாக்குதல்களை 13 ஆவது திருத்தம் மீது நடத்தக்திட்டமிட்டுள்ளது.

அவற்றில் முதலாவதாக இரு வேறு மாகாணங்கள் தாம் விரும்பின் இணைந்து செயற்படுவதை இல்லாமல் செய்வது இரண்டாவதாக நாடாளுமன்றில் நிறைவேற்றப்படுகின்ற சட்டங்களுக்கு எல்லா மாகாணசபைகளும் தமது ஒப்புதலைத் தெரிவிக்க வேண்டும் என்கிற விடயத்தினை முடிவுக்குக் கொண்டு வருவது என்பனவே அவையாகும்

ராஜபக்ஷ அரசாங்கம் தீர்மானித் துள்ள இவ்விரு விடயங்களும் அரசாங்கம் தான் எண்ணுகின்ற விடயங்களை மாகாணசபைகளின் தத்துவங்களுக்கு அப்பால் இலாபகரமாக நிறைவேற்றிமுடிக்க நிச்சயம் உதவும்.

நடைபெறவிருக்கும் வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் கூட்டமைப்பு வென்று விடலாம் எனப் பொருத்திக்கொண்டாலும் அது அதனை சுலபமான காரியம் அல்ல ராஜபக்ஷ அரசு அதற்கு எதிரான தன்னால் இயன்ற அத்தனை காரியங்களையும் செய்து முடிக்கவும் பொலிஸார் மற்றும் ஆயுதப் படைகளின் ஒத்துழைப்புடன் தனக்கேற்ற முறையில் தேர்தலை நடத்தி விட அத்தனை வளங்களையும் பிரயோகிப்பது என ஏற்கனவே திட்டம் தீட்டியாகியுள்ளது.

நாட்டில் காணப்படுகின்ற 9 மாகாணங்களில் வடமாகாணத்தைத் தவிர ஏனைய 8 மாகாணங்களும் அரசாங் கத்தின் தொட்டிலில் ஆடுகின்ற செல்லக் குழந்தைகள்தான். 1983 தொடக்கம் 2009 வரையிலும் இடம் பெயர்ந்தவர்கள் எனக்கூறி ஆயிரக் கணக்கான மக்களை நடைபெற விருக்கின்ற வடமாகாணசபைத் தேர்தலுக்கான வாக்காளர்கள் என கற்பனையில் கொண்டு வருவரும். முயற்சிகள் மிகவும் தந்திரமாக நகர்த்தப்படுகின்றன.

பட்டதாரி ஆசிரியர் நியமனம் சமூர்த்தி உத்தியோகத்தர்கள் நியமனம் என்று முறையற்ற அரசியல் நோக்குடைய நியமனங்களின் பட்டியல் தற்போது வடமாகாணத்தில் ஏராளமாக நடைபெறுகின்றன.

நாட்டில் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னர் தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் விசேடமான பொறுப் புணர்வுகள் உள்ளன. அதாவது தமிழ் முஸ்லிம் மக்களிடையேயான நம்பிக்கையளிக்கத்தக்க இதய சுத்தியுடனான உறவுப் பிணைப்பே அந்த பொறுப் புணர்வாகும். இப் பிணைப்புக்கான கட்டாயம் நாட்டில் அண்மைக் காலமாக நடந்தேறிவரும் சம்பவங்கள் வாயிலாக மேலும் உணர்த்தப்படுகின்றன.

தமிழர்களும் முஸ்லிம்களும் ஒன்றிணைந்தால் அதன் தாக்கம் எவ்வாறு இருக்கும் என்பதனை சிங்கள அரசு நன்றாகவே அறிந்து வைத்திருக்கின்றது. இதனால் தமிழர்களையும் முஸ்லிம்களையும் அரசியலில் பிரித்தே வைத்திருக்க வேண்டும் என்பதில் சிங்கள அரசிடம் எப்போதும் ஒரு உறுதிப் பாடு உண்டு. இதன் காரணமாகவே முஸ்லிம்களுக்கு அவ்வப்போது அபிவிருத்தி என்ற போர்வையில் பதவிகளையும் பட்டங்களையும் வழங்கி முஸ்லிம்களின் தலைவர் களைசிங்களஅரசுதனதுபெட்டிக்குள் அடக்கி வைத்திருக்கிறது.

எனவே தற்போதைய நிலையில் அலசப்படுகின்ற 13 ஆவது திருத்தம் பற்றிப் கருத்துக்ககள் வடமாகாணசபைத் தேர்தலை சுவைத்து ரசிக்க சிங்கள அரசினால் தூவப் பட்டுள்ள கறிமசாலா என்பது தேர்தல் முடிந்ததையுடன்டலருக்கும்புரியவரும்

நடைபெறவிருக்கும் வடமாகாண தேர்தல் குறித்தோ அல்லது 13 ஆவது திருத்தம் குறித்தோ இன்னும் ஆராய்ந்து கொண்டிருக்க வேண்டிய அவசியம் கிடையாது. ஏனெனில் எமக்கான தீர்வு எது என்பது குறித்து நாம் அனைவரும் மிகவும்தெளிவாகவேஇருக்கின்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செவ்வாய்க்குப் போகலாமா?

அண்மைக்காலமாக விஞ்ஞானிகள் பூமியில் மட்டுமல்லாது பூமியைத் தாண்டியும் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு மக்களை வியக்கவைக்கும் பல கண்டுபிடிப்புக்களை மேற்கொண்டுள்ளார்கள். இதில் நிலவில் முதன்முறையாக நீல் ஆம் ஸ்ட்ரோங் காலடி எடுத்து வைத்ததினைத் தொடர்ந்து, பூமியையும் தாண்டி ஏனைய கிரகங்களிலும் மக்கள் வாழ்வதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாக ஆராய்ச்சியில் கண்டுபிடித்திருந்தார்கள் .

இதனைத் தொடர்ந்து அமெரிக்காவின் 'நாசா' விண்வெளி மையம் அண்மையில் 'எண்டீவர்' எனப்படும் விண்கலத்தினைச் செவ்வாய்க் கிரகத்திற்கு அனுப்பி ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றது. 'எண்டீவர்' எனப்படும் விண்கலத்தில் பொருத்தப்பட்டிருக்கும் கமெராக்கள் மற்றும் கருவிகள் செவ்வாய்க்கிரகத்தின் நில அமைப்பு, தட்ப வெப்ப நிலைகளையும் பதிவு செய்து பூமிக்கு அத்தகவல்களை அனுப்பி வருகின்றது. இத்தகவல்களின் அடிப்படையில் 2033 ஆம் ஆண்டு மக்களைச் செவ்வாய்க் கிரகத்திற்கு அனுப்புவதற்கு அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

ஆனால் 'நாசா'வின் இந்த முயற்சியை முறியடிக்கும் வகையில் 2021 ஆம் ஆண்டிலேயே மக்களைச் செவ்வாய்க் கிரகத்திற்கு அனுப்புவதற்கான தீவிர முயற்சிகளில் 'லண்டன் இம்பீரியல் கல்லூரியைச்' சேர்ந்த விஞ்ஞானிகள் தற்போது ஈடுபட்டு வருகின்றனர். இதற்காக மூன்று பேர்கொண்ட குழு செல்லக்கூடிய வகையில் விண்வெளி ஓடம் ஒன்றை இங்கிலாந்து வடிவமைத்து வருகின்றது. மேலும் இது குறித்து இக்குழுவின் தலைவர் பேராசிரியர் டாம் பைக் கூறுகையில் மக்களைச் செவ்வாய்க் கிரகத்திற்கு அனுப்புவதே தமது அடுத்த இலக்கு எனத் தெரிவித்துள்ளார்

இதன் அடிப்படையில் இவர்கள் மூன்று பேர் கொண்ட குழு ஒன்றை முதலில் செவ்வாய்க் கிரகத்திற்கு அனுப்பிச் சுமார் 9 மாதங்கள் வரை ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளனர். செவ்வாய்க் கிரகத்தில் புவி ஈர்ப்பு விசை இல்லாத காரணத்தினால் அங்கு செல்பவர்களின் உடல் எடைகளிலும் தசை மற்றும் எலும்புகளிலும் பாதிப்புக்கள் ஏற்படும். எனவே இதனடிப்படையில் அங்கு செல்லும் மக்களிற்கு இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படாது தடுக்கும் வகையில் விண்கலங்கள் அதிநவீன முறையில் விசேஷமாக தயாரிக்கப்பட்டு வருவதாகவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் செவ்வாய் கிரகத்திற்கு மனிதர்களை அனுப்பும் அதே நேரம் ரொக்கட் ஒன்றில் ரோபோக்களையும் செவ்வாய் கிரகத்தின் வடக்கு பகுதிக்கு அனுப்பி அங்குள்ள ஐஸ் படிவங்களை வெட்டி எடுத்து ஆராய்ச்சிகளை மேற்கொள்ள அனுப்பவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.




தமிழ்ச் சினிமாவின் மரண ஆண்டாக 2013 மாறியுள்ளதோ என்று எண்ணுமளவுக்கு, தமிழ்ச் சினிமாவைத் தூக்கி நிறுத்திய ஒப்பற்ற உன்னதமான கலைஞர்கள் பலர் இந்தவருடத்தின் முதல் 7 மாதங்களுக்குள் அடுத்தடுத்து உலகை விட்டு மறைந்திருக்கிறார்கள்.

இவ்வாறு கலைஞர்களின் சாவுகள் தொடர்கதையாவதால் தமிழ் சினிமா கலைஞர்கள் அதிர்ச்சியில் இருக்கிறார்கள்.

# மரணத்தின் வருடம் 2013



இந்த ஆண்டு ஜனவரி மாதம் பழம்பெரும் நடிகை ராஜசுலோச்சனா திடீர் மரணம் அடைந்தார். அடுத்து ஆயிரம் படங்களுக்கு மேல் நடித்த சுகுமார் உயிர்துறந்தார்.

இசைத் துறையைச் சேர்ந்த பி.பி.ஸ்ரீனிவாஸ். டி.எம்.சௌந்தர்ராஜன், டி.கே.ராமமூர்த்தி, லால்குடி ஜெயராமன் ஆகியோர் அடுத்தடுத்து இயற்கை எய்தி இசை உலகில் பெரிய வெற்றிடத்தை ஏற்படுத்திச் சென்றார்கள். 50 படங்களை இயக்கிய மணிவண்ணன் மரணத்தை முத்தமிட்டார். அவரைத் தொடர்ந்து இயக்குநர் ராசுமதுரவன் இளம் வயதிலேயே புற்றுநோய்க்கு இரையானார்.

ஜெமினி லேப், ஆனந்த் சினி நிர்வாகத்தின் தலைவரும், தயாரிப்பாளருமான ரவிசங்கர் பிரசாத் தற்கொலை செய்துகொண்ட விடயம் சினிமாவில் அதிர்ச்சி அலையை உண்டாக்கியது. 15 ஆயிரம் பாடல்களுக்கு மேல் எழுதிக் குவித்து 50 வருடங்கள் தமிழ் சினிமாவின் ஆணிவேராக இருந்த காவியக் கவிஞர் வாலி நம்மைவிட்டுச் சென்றது சினிமாவில் மட்டுமல்ல நாட்டு மக்களிடமும் பெரிய துக்கத்தை ஏற்படுத்தியது. அந்தத் துக்கம் முடிவதற்குள்ளாகவே நடிகை மஞ்சுளாவை சினிமா இழந்தது.

இப்படி அடுத்தடுத்து சினிமா ஜாம்பவான்கள் மறைந்து வருவது ஏனைய கலைஞர்களுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியில்இருந்து அவர்கள்இன்னமும்மீளவில்லை.

# அடுத்த வாரிசு



இங்கிலாந்தின் அடுத்த முடிக்குரியவர்கள் என்று கருதப்படும் வில்லியம் - கேத்மிடில்டன் தம்பதியரின் வாரிசு மண்ணில் தோன்றியுள்ளது. தமது வாரிசை பத்திரிகையாளருக்கு அறிமுகப் படுத்தினார்கள் அரச தம்பதியினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 17, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் [illegible] பிறைஸ் ஸ்தாபனத்தினால், 2013 ஜூலை 31 ஆம் திகதி வெளியிடப்பட்டது.